T-UN-470

உ
கணபதிதுணை.
திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள்
வடமொழியில் அருளிச்செய்ததை
சமிவனக்ஷேத்திரமென்னுங் கோயிலூர்
ஸ்ரீசிதம்பரசுவாமிகளால் மொழிபெயர்த்தருளிய

# இலக்ஷணாவிர்த்தி,

திருவிடைமருதூர்
ஸ்ரீஉலகநாதசுவாமிகளால் மொழிபெயர்த்தருளிய
**தசகம், விவேகசட்கம், சொரூபானுசந்தானதுதி, மனிடாபஞ்சகம், சோபானபஞ்சகம்,**
ஸ்ரீநித்தியானந்தசுவாமிகளால் மொழிபெயர்த்தருளிய
**தக்ஷணாமூர்த்தி அட்டகம்,**
ஸ்ரீசதாசிவப்பிரமேந்தரயோகீசர் வடமொழியில் அருளிச்செய்ததை
மேற்கண்ட நித்தியானந்தசுவாமிகளால்
மொழிபெயர்த்தருளிய அத்துவிதரசமஞ்சரி,
ஸ்ரீராமகவி அருளிச்செய்த அத்துவிதாநுபவம்.

இவை
மேற்கண்ட சிதம்பரசுவாமிகள் மாணாக்கர்களிலொருவராகிய
**அ · இராமசாமிச்சுவாமியவர்களால்,**
பிழையறப்பரிசோதித்து,

சென்னை:
ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன.

சர்வதாரிஹு வைகாசிமீ
இதன்விலை அணா-கஉ·

# நூல் அட்டவணை.


| நெம்பர். | பக்கம். | சாஸ்திரங்களின்பெயர். | பாட்டு இலக்கம் |
|---|---|---|---|
| க | க | லக்ஷணாவிர்த்தி. | ககரு |
| உ | சாசா | தசகம் | கக |
| ங | எ0 | விவேகசட்கம். | சா |
| ச | எஉ | சொருபானுசந்தானதுதி. | கூ |
| ரு | எசா | மனிடாபஞ்சகம். | அ |
| சா | எகூ | சோபானபஞ்சசம். | ரு |
| எ | அங | தக்ஷணாமூர்த்திஅட்டகம். | கஉ |
| அ | அஅ | அத்துவிதாசமஞ்சரி. | சஎ |
| கூ | க00 | அத்துவிதாநுபவம். | கஉஎ |

மனிடா என்றும்,
மநிடா என்றும்,
மனீடா என்றும்,
மநீடா என்றும்,
மனுடா என்றும்,
மநுடா என்றும்,

} பாடம்.

## இலக்கம், நாமம், செய்யுள், பக்கம், அட்டவணை.


| இல. | நாமம். | செய்யுள். | பக். |
|---|---|---|---|
| ௧ | நிர்விகாரி | சொல்லுறு | ௩ |
| ௨ | ஞானவடிவு | இன்னலேயுரு | ௪ |
| ௩ | அசங்கன் | ஞானமில்காலந் | ,, |
| ௪ | சுயம்பிரகாசன் | சகமதனைப்பிர | ,, |
| ௫ | சொப்பிரகாசன் | நாமிலமேலைங் | ௫ |
| ௬ | ஆனந்தரூபன் | காலமொருமூன்றி | ,, |
| ௭ | சத்தியன் | தினமாதம்வருட | ௬ |
| ௮ | நிஷ்கிரியன் | இகவுலகம்பரவு | ,, |
| ௯ | முத்தன் | ஞானமுதித்ததன்பின் | ,, |
| ௧௦ | அகர்த்தா | ஞானமுதித்ததன்பின்பு | ௭ |
| ௧௧ | அபோக்தா | பிராரத்தகன்மமதாற் | ,, |
| ௧௨ | நிருபத்திரவன் | நனிவாதபித்தஞ்சிலே | ௮ |
| ௧௩ | நிருலேபன் | பகர்தலுறுதூங்கின | ,, |
| ௧௪ | நிர்ச்சம்பந்தன் | தானலவாயுறும்பஞ் | ௯ |
| ௧௫ | கூடஸ்தன் | ஆற்றுகோலனடைக | ,, |
| ௧௬ | ஆத்மா | நானென்றுமானத் | ௧௦ |
| ௧௭ | நிர்த்தோஷன் | தோடமெனும்வாத | ,, |
| ௧௮ | அப்பிரமேயன் | ஆனபொறியா | ,, |
| ௧௯ | பிரத்தியக்ஷன் | ஏகதேசத்துட | ௧௧ |
| ௨௦ | அணு | பலகணிவெயி | ,, |
| ௨௧ | அசரீரன் | பகருமுடலுறு | ,, |
| ௨௨ | நிரிந்திரியன் | அவனவன்சாதி | ௧௨ |
| ௨௩ | அப்பிராணன் | பெலமுடனே | ௧௩ |
| ௨௪ | அமனசு | ஒருமொருகூத் | ,, |
| ௨௫ | நிர்மலன் | அறைகின்றமல | ,, |
| ௨௬ | சுத்தன் | கொள்கின்ற | ௧௪ |
| ௨௭ | புத்தன் | அறைதலுறு | ௧௫ |

## இலக்கம், நாமம், செய்யுள், பக்கம், அட்டவணை.


| இல. | நாமம். | செய்யுள். | பக். |
|---|---|---|---|
| உஅ | சர்வக்ஞன் | அறிதலுடனறி | கரு |
| உகூ | பரமானந்தன் | தனதானியாதி | கசு |
| ௩0 | சம்பு | கனவிடையஞ் | கஎ |
| ௩க | அசலன். | தூய்சுற்றகிர | ,, |
| ௩உ | நிர்க்குணன் | சத்துவமாங் | கஅ |
| ௩௩ | நிர்விகற்பன் | ஆருமையேழ்த | ,, |
| ௩ச | நிராகாரன் | ஆகுவெளியுரு | ககூ |
| ௩ரு | நித்தியமுத்தன் | அயர்கருத்தாவா | ,, |
| ௩சு | அனுதிமுத்தன் | ஆமயர்வின்மூவர் | உ0 |
| ௩எ | அச்சுதன் | நழுவல்சுதநழுவாத | உக |
| ௩அ | க்ஷேத்திரக்ஞன் | மூலவஞ்ஞானகாரி | ,, |
| ௩கூ | மனோவாசாமகோசரன் | மலையுமனமெ | உஉ |
| ச0 | அவ்வியாகிருதன் | ஆற்றுமுருநாமமொடு | உ௩ |
| சக | அக்ஷரன் | நாசமுறல்சரமற் | ,, |
| சஉ | திருக்கு | அறிவதுதிருக்கா | உச |
| ச௩ | பிரத்தியக்கு | அகநோக்கமனதினி | உசு |
| சச | சின்மாத்திரன் | செடமாகியறிவற்று | ,, |
| சரு | சத்து | நானெனமூன்றவத் | உஎ |
| சசு | நிரீசுவரன் | வரமானபிரமாதி | ,, |
| சஎ | நிர்ச்சீவன் | சீவனற்றொழிதனி | உஅ |
| சஅ | நிஷ்பிரகிருதி | பிரகிருதியின் | உகூ |
| சகூ | அசம்சாரி | வரமில்சம்சாரமி | ,, |
| ரு0 | அபெத்தன் | கட்டுண்டவன் | ௩0 |
| ருக | நிரவயவன் | அத்தமுறுசரணதி | ௩க |
| ருஉ | அபரோட்சன் | ஆதாரமாங்கன்ம | ௩உ |
| ரு௩ | சுயம் | அறைசுயந்தா | ,, |
| ருச | அகேயன் | இதுவென்று | ,, |

# இலக்கம், நாமம், செய்யுள், பக்கம், அட்டவணை.



| இல. | நாமம். | செய்யுள். | பக். |
|---|---|---|---|
| ௫௫ | அனுபாதேயன் | அடைகின்றபொ | ௩௩ |
| ௫௬ | அப்பிரவிர்த்தன் | எற்றுபிரவிர்த்த | ௩௪ |
| ௫௭ | சிவன் | இலகுசிவனென்னு | ௩௫ |
| ௫௮ | அமிர்தன் | ஆகின்றமரணமிலா | ,, |
| ௫௯ | நிரூபன் | உருவமில்லாதவனி | ,, |
| ௬0 | சாந்தன் | விறகினிலுண்டாம் | ௩௬ |
| ௬௧ | அபயன் | பயமற்றோனபயனு | ௩௭ |
| ௬௨ | நித்தியானந்தன் | ஈனவிடமுறு | ,, |
| ௬௩ | நிர்விஷயன் | பிரிவதாமுருநாம | ௩௮ |
| ௬௪ | பழையோன் | முன்னுமிழிது | ௩௯ |
| ௬௫ | புராதனன் | விளைதலுறு | ,, |
| ௬௬ | சூனியன் | சகலமுமேசிற் | ,, |
| ௬௭ | மகாசூனியன் | அவ்விதமாஞ் | ௪0 |
| ௬௮ | நிவிர்த்தன் | ஆர்பஞ்சபூதப் | ,, |
| ௬௯ | அகாமன் | மயிர்நகந்தோ | ௪௧ |
| ௭0 | அலோபன் | தேகியென்று | ௪௨ |
| ௭௧ | உன்னதன் | அதிகமதாஞ்சீ | ,, |
| ௭௨ | அக்குரோதன் | கன்மமொடுகர் | ,, |
| ௭௩ | நித்தியன் | பிரிவுறமெத் | ௪௩ |
| ௭௪ | சர்வகேதன் | திதசாட்சிதனிலே | ,, |
| ௭௫ | சர்வாதாரன் | எவமவித்தை | ௪௪ |
| ௭௬ | நிராதாரன் | ஆதாரமென்றமுன் | ௪௫ |
| ௭௭ | ஆதி | இயலுடல்களுக் | ,, |
| ௭௮ | அனுதி | இப்படியேயெவை | ௪௬ |
| ௭௯ | விபு | இதமறுவிசிட்டனி | ,, |
| ௮0 | மகத்து | அவ்தாவரத்தி | ௪௭ |
| ௮௧ | நிரஞ்சனன் | பகர்புனலின் | ,, |

## இலக்கம், நாமம், செய்யுள், பக்கம், அட்டவணை.



| இல. | நாமம். | செய்யுள். | பக். |
|---|---|---|---|
| அஉ | காரணன் | அவிருமூவகை | சஅ |
| அ௩ | அகாரணன் | இப்படிச்சகலத்தி | சகூ |
| அச | சாட்சி | அகிலசககிரியை | ,, |
| அரு | தாணு | அலையினும்மனது | ரு0 |
| அசு | பரிபூரணன் | அப்பினற்கடமதை | ,, |
| அஎ | அனந்தன் | உடல்பொறி | ருக |
| அஅ | சர்வசமன் | அகிலஉன்னத | ,, |
| அகூ | சர்வாதிட்டானன் | அதிட்டானஞ் | ருஉ |
| கூ0 | அகண்டன் | நவைகாலமா | රு௩ |
| கூக | அபரிச்சின்னன் | ஒருவருக்கொ | ,, |
| கூஉ | அணுவிருதன் | தாபமுறும்விசி | ருச |
| கூ௩ | சர்வகாரணன் | காட்சியாயவ | ,, |
| கூச | பிரமம் | காலமூன்றினு | ருரு |
| கூரு | ஒருவனேயுள்ளபொருள் | பனுகனவி | ,, |
| கூசு | சர்வாத்மா | வயல்குளந் | ருசு |
| கூஎ | சர்வாகாரன் | கனவதனிற் | ருஎ |
| கூஅ | அனேகரூபன் | பயில்சர்ப்ப | ,, |
| கூகூ | ஏகரூபன் | பலசட்டிநீ | ருஅ |
| க00 | பரமார்த்தன் | கனவபரமார்த் | ருகூ |
| க0க | வஸ்து | புரிவஸ்துவென் | சு0 |
| க0உ | நிட்பிரபஞ்சன் | பிரபஞ்சமின் | ,, |
| க0௩ | நானாரூபன் | இயலுநானாரூபம் | சுக |
| க0ச | அபேதன் | தேசமதன்பேதந் | சுஉ |
| க0ரு | நிருவிசேஷன் | நிருவிசேஷனையர் | ,, |
| க0சு | அத்தொய்தன் | துவிதமென்ப | சு௩ |
| க0எ | சர்வாபாவன் | உண்மையறிவா | சுச |
| க0அ | சர்வதோமுகன் | காலமொடுதேசவஸ்து | ,, |

# சாத்துகவிகள்.

---

## சிதம்பரம் சுப்பராயசுவாமிகள்
இயற்றியது.

---

பன்பணிகொழிக்கு மலைகடலுலகிற்
பகரிலக்கணம்பலவுணர்ந்து
நன்மணியான்ம விலக்கணமுணரா
தவர்க்குநன்முகுரங்காட்டுதல்போற்
பன்மணிகோத்த பரிசெனவிருத்தப்
பாவினுலிலக்கணுவிர்த்தி
யென்மணி நூலைத் தமிழினுற்சிதம்ப
ரேசனுமியற்றினனன்றே.

---

திரிசிரபுரம் மஹாவித்துவான்
## மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்
இயற்றியது.

---

தரைபுகழுஞ்சங்கரா சாரியர்முன்னவின்ற
தக்கணுமூர்த்தியட் டகத்தைமொழிபெயர்த்து
விரைகமழ்செந்தமிழகவல் விருத்தயாப்பதனுல்
விளங்கநவின்றனன்கழனி மாநகர்வாழ்பெருமை

யுரைசிறந்தசோதிலிங்க சொருபனெனும்பெயர்பூண்
டோங்குமுத்திராமலிங்கக் குரவனருள்பெற்றுக்
கரையில்கலைமுழுதுணர்ந்து சுவாநுபூதியனுய்க்
கதிர்க்குநித்தியானந்த நாமமுனிவரனே.

---

சென்னபட்டணம்.

வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்தலைவர்

தஞ்சைமாநகரம்-சதாவதானம்,

சுப்பிரமணியஐயர் இயற்றியது.

---

தண்மையன லொன்றெனவே கண்டசதா சிவப்பிரமஞ்
சாற்றுதெய்வ
வுண்மைவட மொழியத்து விதாசமஞ் சரிப்பொருளை
யொண்டமிழ்ச்செவ்
வண்மைமொழி யாற்பெயர்த்துத் தோலுரித்தகனியென்ன
வகுத்துத்தந்தான்
அண்மையதா மெய்ந்நெறியைக் கண்டநித்தி யாநந்த
வனகன்றனே.

---

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# இலக்ஷணாவிர்த்தி.

---

## பாயிரம்.

### விநாயகக்கடவுள்.

ஆரணம்பன்முகத்தாலனாதியே
காரணனேயெனக்கழறியேத்திடும்
பூரணமாஞ்சிவன் புதல்வனாகிய
வாரணானனத்தனை வணங்கிவாழ்த்துவாம். (க)

### சபாநடேசர்.

காரணமானதன் கலையினோர்கலை
தாரணிதனிலுறுந் தலங்கண்மேவிவந்
தாரணவுரைப்படி யடங்குமம்பலப்
பூரணநடேசனைப் போற்றல்செய்குவாம். (உ)

### முத்துராமலிங்கசுவாமிகள் - வேறு.

சித்தரும்பரவாநின்ற சீர்மிகுங்கழனிதன்னிற்
பித்தனாமெனையுமாளப் பேரருளுருவாயுற்ற
முத்தனாமுத்துராம முதல்வனற்கமலபாத
நித்தமுந்தொழுதுவாழ்த்திநெஞ்சினிலிருத்தல்செய்வாம்.

வேறு.

வானவரசமாந் தொடர்பினுலகோர்
வழுத்துறும் வன்னியையங்கரனை
வானவரதன மணியறுமுகனை
மாசறுகொற்ற வாளிறையை
வானவர்முதுவன் பாலனவலவன்
வணங்குநற் றிருநெலைமாதை
வானவரதனு முத்துராமேச
வள்ளலைவணங்கி வாழ்த்திடுவோம். (௪)

நூலின் வரலாறு - வேறு.

பிரமத்திற் குரியவாகும்
பெயர்கணூற் றெட்டினுக்கும்
விரிவதாம் பனுவனூலின்
விளங்கிய பொருள்களுள்ளத்
தூரமதாத் தரிக்கவேண்டி
யுற்றிடுங் கவிகளாகப்
பரமசற் குருவாயோங்கும்
பகவனின் னருளாற்செய்தேன். (ரு)

நூலின்பயன் - வேறு.

பன்னுபாயிரக்கவிக ளிருமூன்றுகும்
பகர்நூலின்கவிநூறே டொன்பதாகு
மன்னகவிமுற்றுநிறைந் தெங்குநின்ற
வஸ்திபாதிப்பிரிய சொரூபமான

மன்னன்முத்துராமலிங்க தேசிகேசன்
  மருவுமெனதிதயமதுற் றுரைத்ததாகுஞ்
சொன்னவிந்நூறனிற்கவியொன்றருத்தமேனுந்
  துகளறவேயறிந்தவர்கள் பிரமமாவர். (௬)

பாயிரமுற்றிற்று.

---

## நூல்.

நிர்விகாரி.

சொல்லலுறுமைங்கோச நாமல்லவதனினுற்
  றேற்றவிற னரைதிரையுடன்
றாய்திலாவாலிபம தாதியுந்தாகபசி
  தனுபெலன் பெலமதில்லோ
னெல்லையறவேசொனவ னவையிலோனுதியு
  மிகழ்காம மதமுலோப
மிழிபயங்குரோதங்க ளாதியுஞ்சுகதுக்க
  மியலுமபி மானமான
மல்லலுடனேகாண லாதியும்மறியாமை
  யறிவொடு சுழுத்திவிடய
மவைகடமின்வருசுகமு மாகவைங்கோசத்தி
  னமர்விகா ரம்மெமக்கொன்
றில்லையவிதம்பஞ்ச கோசங்களுறுவிகா
  ரங்களவை யின்மையினையு

மிலகவறிகின்றவறி வேயுருவமானதா
வியாநிரு விகாரியாமே. (௧)

ஞானவடிவு - வேறு.

இன்னலேயுருவமான விந்தவைங்கோசங்கட்குந்
துன்னுமக்கோசங்கட்குச் சொல்விகாரங்களுக்கு
மன்னியமாகநின்றே யவைகளைவறிதலாலே
மன்னியநாமேஞான வடிவமென்றறிந்துகோள்ளே. (௨)

அசங்கன் - வேறு.

ஞானமில்காலந்தனினு ஞானந்தோன்றி
நண்ணுபினுமூன்றவத்தை தமிலேதோன்று
மூனவுலகங்கள்வரும் போதுங்கூட
வுதியாமலேநின்ற போதுங்கூட
வீனமுடனேகாம விவைகளியாவு
மியல்பாகக்காணுமறி வேசொரூப
மானதனுலொன்றுடனுந் தொடக்கற்றென்று
மமர்ந்திடுநாமசங்கனென வறிந்துகொள்ளே. (௩)

சுயம்பிரகாசன்.

சகமதனைப்பிரகாசஞ் செய்யுஞ்சண்டன்
சசிவன்னியாதியையு மவைவிளக்கு
மகஞ்சட்சுமுதலைங்கோ சத்தையுஞ்சொல்
லவையின்விகாரங்களையு மவையின்றோற்றந்

தகவுதிதிமரித்தன்முத லையும்விளக்குந்
தமையொன்றும்விளக்கவொணுத் தன்மையாலே
யிகழ்விலதாமியாமிகவுஞ் சுயம்ப்ரகாச
னென்னவிதயத்துறுதி யாகவெண்ணே. (ச)

சொப்பிரகாசன்.

நாமிலமேலைங்கோச முதலாகின்ற
நலமில்சகங்களையறிவா ரிலாமையானுந்
தீமையிலாவறிவுருவே யானநம்மாற்
செகங்களெலாமிகவறியப் படுகையானு
நீமமதாயாவையுமிவ் விதமாய்க்காணு
நிகரினமையறிவதற்கோ ரறிவுதானுந்
தோமறவேவேண்டாத படியினுனுந்
துகளறுசொப்பிரகாச னுமென்ருேர்வாய். (ரு)

ஆநந்தரூபன்.

காலமொருமூன்றிலுஞ்செய் யுபயகன்மங்
கருதுமைங்கோசச்செயலாக் காண்கையானுஞ்
சீலமிலைங்கோசங்க ளிலாதபோது
திரள்கன்மந்தோன்ருமை யானுநாமிவ்
வேலுசெயற்கோசத்தின் புறம்பதானு
மியாங்கருத்தா வுடன்போக்தாவன்றதாலே
சாலவுறுகன்மபெந்த சென்மமாதி
தரித்தலில்யாமாநந்த ரூபனுமே. (சு)

சத்தியன்.

தினமாதம்வருடமொடு காலந்தோறுந்
திகழ்சனனந்தொறும்வருமூன்றவத்தைதம்மி
லினமாகிப்பிறந்திறந்து போகுமைந்தா
மிழிவானகோசத்தின் வேறுமான்மாப்
பனியானகோசமுதிப் பதற்குமுன்னும்
பஞ்சவிதகோசமழிந் தொழிந்தபின்னுந்
தனியானவொருவிதமா யிருக்காநின்ற
தன்மையினாற்சத்தியன்பாமெனவேயோர்வாய். (எ)

நிஷ்கிரியன்.

இகவுலகம்பரவுலகங் களைக்குறித்தே
யியற்றுபலவிதகன்ம மவைகளாலே
பகருறுமெப்போதினுமே விவகரிக்கும்
பஞ்சவிதகோசத்தின் சாட்சியான
விகழ்வினமைப்புறம்பாகக்காணலாகா
திருந்தாலுங்கிரியையிலாத் தன்மையாலே
புகழ்தலுறுநாந்தினநிஷ் கிரியனென்றே
புண்ணியநீயறுதியதா யெண்ணுவாயே. (அ)

முத்தன்.

ஞானமுதித்ததன்பின்பைங் கோசங்கட்கு
நமைவேறாய்மிகவுமறிந் ததுவேபோல
ஞானம்வருமுனுங்கோச மவைக்குவேறா
நாமிருந்தோமென்பதுசித் தித்தலானும்

பானமலாக்காலத்தும் பஞ்சகோசம்
பண்ணினசஞ்சிதகன்மந் தமைக்குறித்துப்
பானமதா நாங்கருத்தா வாகாதாலும்
பலவிதசஞ்சிதமறு நா முத்தனுமே. (கூ)

அகர்த்தா.

ஞானமுதித்ததன்பின்புங் கன்மஞ்செய்யு
நவையுறுமைங்கோசங்க டமக்குவேறு
யீனமிலா நாந்தினமு மிருப்பதாலே
யின்றுமுதலாகா மியங்களாக
வூனமதாம்பஞ்சவித கோசஞ்செய்யு
முறுகன்மபெந்தநமக்கிலையதாலே
ஞானவுருவாகிய நா மகர்த்தாவென்றே
நாடியுளந்தனிற்றினமு நண்ணுவாயே. (க0)

அபோக்தா

பிராரத்தகன்மமதாற் சரீரநாசம்
பெறுமளவும்வருகின்ற சுகதுக்கத்தை
யிராகவெறுப்புடன்புசிக்கு மைங்கோசங்கட்
கினமினுமன்னியமா யிருப்பதாலே
விராவுசுகதுக்கமவை புசிக்கின்றோனாய்
மேவாமையானுமறி வாமெமக்குப்
பிராரத்தம்வேண்டாத படியினாலும்
பேசுகின்றவபோக்தா நா மெனவேயோர்வாய். (கக)

நிருபத்திரவன் - வேறு.

நனிவாதபித்தஞ்சி லேற்பனமதாதியாய்
நவில்வியாதியுமுறிச்ச
னவிசூடுமிடியாதி பீடையுந்தூலதனு
நண்ணுறுமலாதுசூக்க
தனுவினுக்கிலதாலு மாமயக்கங்குரோ
தங்காமலோபமூமை
சார்செவிடிலச்சைமுத லானசுரமேசூக்க
தனுவினுக்கன்றிமூல
தனுவினுக்கில்லாத தாலுமேகாரியத்
தனுவாக்குசுரமுமூல
தனுக்குறுதலாலுமித் திரிவிதசுரங்களுந்
தனுவினயல்சீவனுக்கே
சனியாததாலுமே யறிவாநமக்கிப்ர
சங்கம்வரஞாயமில்லாத்
தன்மையானிருபாதி யாகின்றநாமிகத்
தவறினிருபத்திரவனே. (கஉ)

நிர்லேபன் - வேறு.

பகர்தலுறுதூங்கினவன் கையிற்றங்கும்
பதார்த்தமதுநீங்கிமிகத் தானேசெல்லுந்
தகைமையுறழன்னமய மாதியான
தரும்பஞ்சகோசங்க ளான்மாவாக

நிகழ்தலுறுமெமக்கயலாய்த் தோன்றிவேறாய்
நின்றுபுறம்பேயிறந்து நீங்கலாலே
யிகழ்விலதாயிருக்கின்ற நாமேநித்த
மீனமிலா நிருலேப னெனவேகொள்வாய். (கங)

நிர்ச்சம்பந்தன்.

தானலவாயுறும்பஞ்ச கோசந்தன்னைத்
தானாகும்படியாயு மவற்றின்வேறாய்
ஞானவுருவாகுநமை நமக்குவேறாய்
நண்ணவுமேவேண்டுமெனத் தவஞ்செய்தாலு
மீனமலாலாகாத படியினானு
மியனித்யவபரோட்ச வெமக்கெக்காலு
மூனமுறுங்கோசதொடக் கற்றதாலு
மொப்பினிர்ச்சம்பந்தனக மெனவேயோர்வாய். (கச)

கூடஸ்தன்.

ஆற்றுகொலனடைகல்லே கூடமற்ற
தவிகாரமானாலு மயவிகாரந்
தோற்றுதல்போலறிவதனிற் பகுதியீசன்
றுவிதசகஞ்சீவருதித் திறத்தலானுந்
தோற்றியவையழிவதற்கு மூலமாகிச்
சுயஞ்சித்தாயிருக்கின்ற நாமவற்றிற்
சாற்றுபற்றற்றுறலாலு மிகவும்யாமே
சாரகர்த்தாவாகியகூடஸ்தனாகும். (கரு)

ஆத்மா.

நானென்றுமானத்துக் கிடமதாக
  நவில்கின்றவான்மாவாய்த் தோன்றுநின்ற
வினமுறுபுத்ராதி தூலசூக்க
  விருதேகஞ்சீவனுமே வேறுபேர்பெற்
றானமிறன்புறம்பாகித் தோன்றலாலு
  முறுமிவைகட்கப்பாலாய் நிருவிகார
ஞானகனப்பிரமமதாந் தானும்வேறாய்
  நண்ணுததாலுநா மாத்மாவாகும். (கசு)

நிர்த்தோஷன்.

தோடமெனும்வாதமுத லானதோடந்
  துன்னியிடுமிராகாதி யதனினோடும்
பீடுபெறுஞானவஞ்ஞா னங்களோடும்
  பிறத்தலுடனிறத்தலுமே மயமதான
சேடிலதாந்தூலவுடல் சூக்கதேகஞ்
  செப்பியிடுஞ்சீவனொடு பூதங்கட்குங்
கேடிலதாய்வேறாகி யிருப்பதானுங் கிளத்திய
  நிர்த்தோஷனென வறியவேண்டும். (கஎ)

அப்பிரமேயன்.

ஆனபொறியாலறிதல் பிரமேயந்தா
  னன்றியறியாததப்ர மேயமாகு
மூனவிந்தியத்தறிசத் தாதிகட்கு
  முட்காரணத்தறிகால திக்குவஸ்து

வானதெனும்பிரகிருதி புருஷருக்கு
மன்னியமாயிருகாணத் தறியலாகா
தீனமிலாதவைகளையு மறிவதாலே
யிலங்குசற்சிற்சுகநாமப் பிரமேயன்றான். (கஅ)

பிரத்தியக்ஷன்.

ஏகதேசத்துடனெக் காலுந்தோன்று
மியறமோகாரியமுப் பாவொன்றிற்கு
மாகமெலாமெக்காலுந் தோன்றீசற்கு
மங்கங்கண்முழுதினுமெக் காலந்தோறுஞ்
சோகமுடன்றோன்றுறுசீ வர்க்கும்வேறாய்ச்
சொல்காலமவத்தைமுழுதினுமேநானென்
றுருகுபிரத்தியக்ஷமதாய் விளங்கலாலே
யறிவாநாம்பிரத்தியக்ஷ னாகுந்தானே. (ககூ)

அணு - வேறு.

பலகணிவெயிலினிற் பாந்துதோன்றிய
சலபரமாணுபோற் சாட்சியாமெமை
யலைவுறுபொறியறி தற்கலாததா
லிலகுநாமணுவென விதயத்துன்னுவாய். (உ0)

அரீசரன் - வேறு.

பகருமுடலுறுங்கன்மி யோகிலோக
பாலர்வைசுவானராதியசீவர்க்குஞ்
செகசரீரமுடையீசன் றனக்கும்வேறாய்த்
திகழுறுநாஞ்சிற்சுகசத் துருவதாலுந்

தகைமைநமக்கிவ்விதமோ ருடலமில்லா
    தானுமுடலெனதெனனு பவத்தாலெற்கு
மிகவனியமநித்தமெனும் யுத்திலோக
    மேவுமதமானுமசரீரனே. (உக)

நிரிந்திரியன்-வேறு.

அவனவன்சாதியின்றொழிலவ ரவர்க்குறலி
        னன்யர்சாதித்தொழிலது
மமருசாதாரணம தாயிலதுபோற்றேக
        மதனிலேவேறுபட்ட
வவமுறும்பொறிகள்பல் விதமெனுங்காரியத்
        தாகுமற்றொன்றுசெய்ய
வறியாமலதனதன் காரியங்கைவந்து
        வதுநனவதனின்மட்டும்
விவகரித்துக்கனவி னெடுசுழுத்தியிலின்ன
        விடமென்றுகாணலற்றே
வீகின்றவிந்தியத் தயலாகவவையுமவ்
        வியாபாரமவையுமறியு
மவிருமறிவேயுருவ மாகியிந்தியமுதித்
        தடங்கலவைதொழில்கடம்மை
யறிதலுடனசையாம லுறுநாநிரிந்திரிய
        னருமெனவறிகுவாயே. (உஉ)

அப்பிராணன் - வேறு.

பெலமுடனேபெலமிலதாய்க் காணப்பட்டும்
பேசுபசிதாகமுடன் றேற்றப்பட்டு
நலமதுடன்சீவித்தேன் மரித்தேனென்று
நாடுநனவதனின்விவ கரித்துமற்றப்
பலவிதமாமவத்தைகளிற் காணலாகா
ப்ராணனுக்கும்வேறுயத்தொழிலைக்கண்டு
நலமிலதன்றன்மமின்றிச் சாட்சியாகு
நாமமைவிலப்ராண னெனவேயோர்வாய். (உரு)

அமனசு.

ஒருமொருகூத்தாடி பலவேஷத்தை
யுறுதலெனக்காமாதி பலவேஷங்கொண்
டாருநனவதனின்வெளிச் சகமேயாகி
யயர்கனவினுட்சகமே யாகிமற்றச்
சிரிலதாஞ்சுழுத்தியினிற் காணுதேகுந்
தீதானமனச்செயலைக் கண்டுகொண்டு
சேருமதற்கன்னியமாய்ச் சாட்சியாகித்
திகழ்வுறுநாமம்மனசென்ற றிவாய்மைந்தா.(உசு)

நிர்மலன் - வேறு.

அறைகின்றமலமூத் திரங்குப்பைசேறதிழி
வாஞ்சுடலைசேரிமுதலா
யளவின்மலமேவுற்ற புவியொடுகலங்கல்புகை
யாகின்றபுழுதிமுதலா

யுறைகின்றமலமேவு நான்குபூதத்தினுட
னுறுகோழைசளிபித்தமு
மொழிகின்றமலமூத்ர முதலானமலமுற்ற
வூனமுறுதூலதனுவோ
டுறுகின்றகாசபட லங்குரோதகாமமுத
லொழிவின்மலமுற்றசூக்க
வுடலினுடன்ஞானவஞ் ஞானமலமுறுசிவ
னுடனைந்துதொழில்களாதி
நிறைகின்றமலமுற்ற வீசற்கும்வேறாகி
நீண்மலமுமற்றுமிகவு
நிகழ்கின்றஞானவா னந்தவடிவானநா
நிருமலன்னென்றுகொள்வாய். (உரு)

## சுத்தன்.

கொள்கின்றசாதிவன் னச்சிரமமதனுடன்
கூறதனதன்மதன்மங்
கூடுமதனுறுபயன தாஞ்சொர்க்கநரகாதி
குறைவிலதின்மிச்சமான
வுள்கின்றகோடிபவ முதனோடக்குற்றமிக
வுலைகின்றசீவருடனே
யுளகிருபையவதார மாற்சரியமுதலான
வுறுதொடக்குற்றவீச
னெள்சீவர்சங்கத்த சுத்தமுறுபூதங்க
ளியாவுக்கும்வேறதான

யாமிவைகளுடனுற்றுநின்றிடினுமெமையசுத்
தங்களெய்தாததாலும்
விள்கின்றவிவைகணம் முடைவிவர்த்தங்களாய்
மேவியேயுறுதலானும்
விமலசித்தாகின்ற நாஞ்சுத்தனென்னவே
விளங்கிடவறிந்துகொள்ளே. (உசு)

புத்தன் - வேறு.

அறைதலுறுதானுயுங் கூடிநின்று
மறிவற்றகடமாதி பூதாதிக்கு
முறைதனக்கோரறிவிலதா யொன்றினோடே
யுறுதலினாலறிவெனவே தோற்றுகின்ற
குறைவுறுமூன்றுடல்சிவன்மாயைகட்குங்
கூறலுறும்வேறாகி யவைகடம்மைக்
கறையின்றிப்பிரகாசஞ் செய்தெப்போதுங்
கனபோதவடிவாநாம் புத்தனாமே. (உஎ)

சர்வக்ஞன் - வேறு.

அறிதலுடனறிதலிலதாகியேமூவித
வவத்தையுறுஞேயத்தையு
மறியாமையுடனறிவ தாயிலகுசர்வபு
த்யாகின்றஞானத்தையு
மறியுமவனறிவிலோ னெனவிலகுமுயிர்களா
யமர்ஞாதுருக்கடமையு

மவர்களினிவிர்த்தி பிரவிர்த்தியையுமதுவதற்
காம்பலனுமெப்பொழுதுமே
யறுதியாயினதென வவத்தைமூன்றதனினு
மறிகின்றவடிவமேநம்
மளவிலாவுருவான தாலுமித்திரிபுடியை
யழிவினுமில்லையாயி
னறிவரிலதாலுநாஞ் சகலதிரிபுடிகளையு
மறிகின்றதாலுமிவித
மனைத்தெனவவத்தையு மறியுநாஞ்சர்வக்ஞ
னுகுமென்ற றிகுவாயே. (உ௬)

பரமரனந்தன்.

தனதானியாதிசெல் வம்பிரியமதுவிசா
சாதியானீங்குகாலை
தவிராதகையுடைமை பிரியமதுசெலவாதி
தன்னினுலொருவுகாலை
யினமானபுத்ராதி பிரியமவானலுற்ற
விலமதானீங்குகாலை
யிழிதூலவுடல்பிரிய மதுபுழிதியானீங்கி
லிந்தியம்பிரியமதுவும்
பினமாம்பிராணகண் டமதானவாக்கினை
பெறுபோதகன்றுசீவன்
பிரியமதுவும்பிராண னிறுகாலைவிட்டுமெக்
காலுமேபிரியவுருவாங்

கனமானவான்மாவை யன்றியொன்றிவ்விதங்
 காணுதபடியினாலுங்
கருதுமெக்காலுமே தானகவுற்றநாங்
 கழறுபரமானந்தனே. (உகூ)

சம்பு - வேறு.

கனவிடயஞ்சுழுத்திசொர்க்க விடயந்தன்னிற்
 காண்சுகங்கடமையெதிர்த்த காணந்தன்னிற்
றனதுசுகப்பதிவிம்ப மாகத்தானே
 தங்குதலாலுஞ்சுழுத்தி யுபேட்சைநிட்டை
துனுகாலந்தனிலுதிக்குஞ் சுகங்களான்ம
 சுகமானபடியாற்றற் சுகமதின்றிப்
பனுசுகங்கள்வரவேறு வழியிலாத
 படியாலும்பகர்சம்பு நாமென்றோர்வாய். (௩0)

அசலன் - வேறு.

தூய்தற்றகிரகமூர் தேசம்விட்டலைகின்ற
 தூலவுடலோகலோகஞ்
சுழல்கின்றவிருதேகமுடன்மண்ணை வளையமாய்ச்
 சூழ்ந்தலைக்கின்றதாகி
யேய்கின்றவறல்வன்னி யிவையசைக்கின்றகா
 லிவைகளுக்கிடமதாகி
யெய்துற்றவம்பரம் பௌதிகசமட்டியோ
 டெலையிலிவையாவுமுடலாய்த்

தோய்வுற்றுமெய்யறிவு ளசைகின்றவீசனுஞ்
சொல்கின்றவேகமுடனே
சுழல்கின்றபறவையென விரைந்துதிக்கினும்
சூழ்கின்ற நூறுகோடி
யாய்வுற்றகற்பங்க ளோடிமிகநாடிடினு
மளவைகாணததாகி
யங்கங்குசாட்சியா யசைவிலாதமருநா
மசலனெனவறிகுவாயே. (௩௧)

நிர்க்குணன் - வேறு.

சத்துவமாங்குணந்தனிலீ சனையுமாக்கித்
தருமிராசதந்தனிற்சீ வரையுமாக்கி
யத்தமோகுணத்திலுல கதையுமாக்கி
யவைகடமைவிரித்தடக்கி யுகங்கடோறும்
வித்தரமாய்விளையாடல் செய்துகொண்டு
விளங்குபிரதானத்திற் கதீதமாகிச்
சுத்தவதிட்டானமதா யபரிச்சின்ன
சுகவடிவாயுறுநாநிர்க்குணனென்றோர்வாய். (௩௨)

நிர்விகற்பன்.

ஆகுமையேழ்தத்துவமாம் விகற்பங்கட்கு
மப்பாலாயவையினதிட்டானமாகி
யேகமதாமத்துவித ஞானமாகி
யிருக்கின்றநாந்தனிற்றான் விகற்பமற்றே

போகுமிவைதமிற்கூடி னுலும்பற்றுப்
புகனிமலபடிகம்போல் விகற்பமற்று
வேகலிலாக்கடமாதி யுறும்வெயிற்போ
லிருக்கின்றநாநிருவிகற்பனுகும். (நக)

நிராகாரன்.

ஆகுவெளியுருவாகும் பிரமமென்று
மதற்குருவநாமமிலே யமூர்த்தமென்று
மாமுன்பினுட்புறமில் பிரமஞ்சாட்சி
யாகுமென்றுமறிபடுத லக்ஷிலாதி
லேகமதாம்பிரமமிதற் கனியமாகி
யிவைவிளக்குமறிவுநிரா காரமென்று
மீரிரண்டுசுருதிகளுங் கூறலானு
மியல்கதிரைநாடுமன முடனேநீண்ட
சோகசிதாபாசனுக்குஞ் சித்ததென்னுந்
தொடர்பால்வாள்வெட்டுமனற்சூடுங்கையிற்
றொடுருதல்போலிலதேற்றற் சுபாவசித்துச்
சொல்லுருவாகிதரென வேண்டுமோவென்
சோகமிலுத்தியினுலு நாமேயுள்ளிற்
ரேற்றுபொறிவெளிப்பொறியின்விடயமின்றித்
தொடாவைவையைவிளக்குமநு பவத்தினுலுந்
துகளினிராகாரனு மெனவேயோர்வாய். (நச)

நித்தியமுத்தன் - வேறு.

அயர்கருத்தாவாயு மேபுசிப்பவனுயு
மனுதினமுமமர்தலாலே

யதன்மமொடுதன்மமத னுனிதம்பெத்தனே
யன்றியொருகாலுமுத்த
னயமாகவலனென்று கன்மகாண்டத்தினி
னண்ணுமான்மாவிதென்றே
நாடுபிரமாதாவி னுக்குமஞ்ஞானத்தி
னவின்மலங்கன் மமதனு
லுயருதலில்பெத்தனு யுறுவன்ஞானத்தினி
லுயர்முத்தனுவனென்றே
யுபாசனகாண்டத்தி லான்மாவிதென்றுதா
னுரைத்திடுஞ்சீவனுக்கு
மயலாகிநிருவிகா ரவ்வறிவதாமெமக்
காகுபெந்தத்துடக்கு
மணுகலொருகாலத்து மில்லாதபடியினு
லமர்நித்யமுத்தனுமே. (௩௫)

அனுதிமுத்தன் - வேறு.

ஆமயர்வின்மூவர்மூதற் றேவர்சாலோ
காதியெனக்கற்பிதமா யழியுமுத்திக்
கேமமுறப்புறம்பாகச் சித்தித்தென்று
மெள்ளளவுங்கிரிகிக்க விடக்கூடாதாய்த்
தோமறுசற்சிற்சுகமே வடிவாந்தம்மைச்
சுருதியினுலுணர்கின்ற தனுதிமுத்தி
யாமதனுலேழைந்தின் மேலாநாமே
யனுதிமுத்தனெனவகத்தினறியவேண்டும். (௩௬)

அச்சுதன்.

நழுவல்சுதநழுவாதச் சுதமதாகு
 நாடுமொருநூறுண்டின் மேவிராம
னழுவுகின்றதூலவுடல் பிரளயத்தி
 னழுவுலிங்கவுடல்பூத ஞானந்தன்னி
னழுவவித்தைமாயைபரன் சீவனுக
 நவிலுமையேழுக்கயலாய்ச் சுகசிற்சத்தாய்
நழுவலிலாதெக்காலுந் தானேயாக
 நண்ணிவிளங்கிடுதலினச்சுதனுமாகும். (௩௭)

க்ஷேத்திரக்ஞன் - வேறு.

மூலவஞ்ஞானகாரியமதாயமர்கின்ற
 மூன்றுதனுவுஞ்சேத்திர
முன்னுமிதையறிபவன் சேத்ரக்ஞனுகுநீ
 மொழியர்த்தமறியேனெனல்
சீலமிலபாவவுரு வஞ்ஞானமிதுபரம
 சித்திலாரோபமாகித்
திகழனுதியதெனச் சொல்வதாநானெனச்
 சேத்திரந்தன்னினுற்ற
வாலம்பமில்லறிவ னுதியாயுறுவத்தி
 யாசமாம்பூர்வதேக
வான்மவநுபவமாம் பிராந்திமேல்வருதேக
 வான்மப்பிராந்திகட்கு

மூலமிதுபிராந்திமூ லப்பிரமையறிவின்மை
மொழிசேத்திரமத்தியாசமு
மோகமெனநீக்கிய வதிட்டானமாயறியு
முரணினுஞ்செத்திரக்ஞன். (௩௮)

மனோவாசாமகோசரன்.

மலையுமெனமென்னலந் தக்கரணம்வாக்கென்னன்
மருவுபத்திந்திரியமாம்
வருமிருவகைக்குமிக வெட்டொணப்பொருண்
மனோவாசாமகோசரந்தா
னலைவில்பொருளிந்தவித மாகுமேற்சூனியம
தாமெனிற்சுருதிபிரம
மஸ்திபாதிப்பிரிய மென்றுமதையறிபவ
னதுவாவனென்றுமின்ன
மெலையதறவோதலிற் பொருள்சூன்யமலவாயி
னெட்டொணதெவிதமென்னி
லெழுகின்றதிரிவித வவத்தையறிகின்றசித்
தெலையுற்றவாக்குமனதி
னலைதலுறுமன்னுவய வெதிரேகமவையறி
பொருளலாதவையின்விடய
மல்லவாதலின்மனோ வாசாமகோசர
னுகுநாமென்னவறிவாய் (௩௯)

## அவ்வியாகிருதன்.

ஆற்றுமுருநாமமொடு விவகரிக்கப்படுவ
தாம்பொருள்வியாகிருதமா
மவையிலாதவ்வியா கிருதமாமிதுசகம
தன்காரணப்பிரமமாச்
சாற்றும்வேதா ந்தத்தி னிற்சாங்கியமாமதந்
தனின்முக்குணங்களுற்ற
தகவுபிரகிருதிக்கு முக்குணந்தாமுமே
சமமுடனடங்குகாலை
யேற்றுபிரதானமோ டவ்வியாகிருதமூல
கதன்மூலமென்றுசொல்வ
ரிருவகையினிற்சர்வ சத்தியாய்ச்சித்ததா
யியலுசர்வக்ஞபிரமந்
தோற்றுலகின்மூலமா மறிவில்பிரதானமது
துகளுலகின்மூலமாகாச்
சொல்லுமிவ்வேதுவாற் சகமூலமானநாந்
துரிசிலவ்வியாகிருதனே. (௪0)

## அக்ஷரன்.

நாசமுறல்சரமற்ற தக்ஷரனாருண்டு
பிரளயஞானமவையினுச
நணுகின்றமூவுடற்கதிதசித் தானநா
நந்தவிலதாலக்ஷரங்

காசின்மறுயுத்திசா மெனல்வேதமதனினுற்
கழறுபொருளக்ஷரந்தான்
கருதுமீமாங்கிசன் சங்கைமுன்னுள்ளபொருள்
காணலாம்பொறியினதனு
லாசின்மறைவிதிநிடேதத்தையுங் கிரியையுற்
றதையுமேயறையுமென்னி
லாரணம்பொறியினுற் பிரமமறியப்படா
ததுவிதிநிடேதமென்னப்
பேசுமவையாலுரு திமிசையைச்செயவொணு
தென்றுதான்பெசல்போலப்
பிரமமேநாமென்ன வறியெனக்கூறலாற்
பிரிவினுமக்ஷரந்தான். (சக)

திருக்கு.

அறிவதுதிருக்காம தான்மாவலாதுதா
னமர்திரிசியங்களான்மா
வன்றுலோகாயுதன் சங்கையனம்வனிதைமுத
லானபோகங்களெல்லா
மறிந்தநுபவிக்கையா லாகந்திருக்கென்னு
மவனேயேசாருவாக
னமாவேகண்டித்த விந்திரியமில்காலே
யறிவுகெட்டொன்றையுந்தா
னறிந்தநுபவித்திடா தாலுமேயிந்திரிய
மமர்காலேயறிவதாக

வாகமதுவிலகலா லாகமறிவன்றுபொறி
யறிதிருக்கென்னுமவனை
யறிதத்துவாதிகண் டித்தலயனுல்வழக்
கற்றபடியேபிராண
னுன்மாவலாதிந் தியங்களான்மாவுமே
யன்றென்றுரைக்குமவனை
யறியுபாசகனுமே நீக்கலப்பிராணபொறி
யாகமுதலியாவுமனமில்
லாவிடிற்றோற்றமை யான்மனந்திருக்குமற்
றதுதிரிசியங்களென்னு
மவனையுந்தார்க்கிகன் கண்டித்தல்புத்தியில்
லாதுவிடின்மனதுசலன
மதனுற்றிருக்கன்று புத்தியேயறிவென்னு
மவனையும்புத்தனீக்க
லறிதலுறுயாவுஞ் சுழுத்தியினிலிலைச்சூன்ய
மான்மாவெனவனைநவில்பட்
டாசாரியதுவுமான் மாவன்றுறுஞ்சுக
மடைந்தனன்சுழுத்தியிலென
வறைசீவனறிவென்பன் யாவரையுநீக்கல்வே
தாந்தியறிவிற்சீவனே
யாதியாய்விடயவரை யிலகலாலறிவல்ல
வவையறியுநாந்திருக்கே. (சஉ)

பிரத்தியக்கு - வேறு.

அகமே நாக்கமனதினி லகப்படும்வஸ்துவே
பிரத்தியக்கந்தவான்மா
வவித்தையாதிகளினாற் சீவாதியாய்ப்ராக்
காம்விர்த்திவெளிநோக்கமாய்ச்
சகமீசர்தேவர்சாஸ் திரமென்னும்விடயங்க
டமிலலைந்தோய்ந்துபருவஞ்
சார்ந்துபரமோட்சமதை நாடிலான்மா மிகத்
தகுநிரதிசயமுத்தியென்
பகர்சுருதிவாக்யவுப தேசமுற்றுடல்பொறிகள்
பல்கரணம்யாவுநீக்கிப்
பன்னிடும்பிரத்யக்கு விர்த்தியென்றுறுபெயர்ப்
பற்றியேதன்னைநோக்கித்
தகைமையுறுவெய்யிலின் விளக்கெனக்குன்றியே
சாட்சிமாத்திரமதாகச்
சனிக்கின்றவிர்த்திஞா னத்தையேகாணுநாந்
தயங்கிடுபிரத்தியக்கே. (சசு)

சின்மாத்திரன் - வேறு.

செடமாகியறிவற்றுத் தோற்றுகின்ற
செகங்களையுஞ்செயற்கையறி வாகவுற்று
மடமானதறுமியற்கை யறிவின்மூன்று
வகையானவுடல்களையு மியற்கையான

விடமானவறிவாகிக் காணுநின்ற
வியல்பான நமக்கறிவே வடிவல்லாமற்
றிடமாமற் றொருவடிவு மிலாததானுஞ்
சின்மாத்ரனெனவென்றுஞ் சிந்தைசெய்வாய். (சச)

சத்து.

நானெனமூன்றவத்தையினுண் ணேக்காய்த்தோன்று
நாலேழ்தத்துவங்கள் வெளிநேர்க்காயீதென்
றீனமுடன்றோற்றுமேழ் தத்துவங்க
ளிருவகையாமையேழுந் தினங்கடோறு
மூனதிரிவிதவவத்தை களினுந்தோன்றி
யொழிகையினுங்கூடவொழி யாமற்றானே
யீனமிலாநித்தியமாய் நிலைமையுற்றே
யிருக்கின்றநாமேசத் தென்னவோர்வாய். (சரு)

நிரீசுவரன் - வேறு.

வரமானபிரமாதி காரணேசுரரோடு
வைசுவானரன்முதலதாய்
மன்னுபரமாங்கிச னீறுகாரியவீசர்
வகையுடன்விராட்டாதியாய்த்
திரமானசுத்தமீ ருஞ்சத்திபேதங்கள்
செறிசீவராயிருந்து
திகழிவருடன்சரிய தாயிலகஞானயோ
கங்களைச்செய்ததிகழைங்

காண்வேலனுதியானூதனே சுரர்மிகக்
கருதிவரினிற்பாதியாய்க்
கதிர்ஞானயோகஞ்செய் நந்திதண்டீசாதி
கனயோகிகட்கும்வேறு
யுரமானநமிலவர்க ளோரோர்காலந்தனி
லுதிப்பதாலுண்மையலதா
லுயர்வாமகண்டசித் துருவமாகின்றநா
முறுநிரீசுவரனுமே. (சசு)

நிர்ச்சீவன்.

சீவனற்றொழிதனிர்ச் சீவனுஞ்சீவனுய்ச்
செறிபொருளவித்தைதன்னிற்
சேர்பிரதிவிம்பிதசிதாபாச னவனளவில்
சென்மநற்கன்மமுற்றே
பாவமறுசித்தசுத் தியையுற்றுபாசனை
பலசன்மமுற்றவதனுற்
பகருமேகாக்கிர மடைந்துசாதனமுடன்
பரமதேசிகனையுற்றே
தாவில்சிரவணமோடு மன்னநிதித்தியாசன
சமாதிசாட்சாற்காரமுந்
தடையறச்செய்துறு மஞானமும்பஞ்சவித
தகுபிரமையுந்தவிர்த்துச்
சிவத்துவங்கெட்டு விம்பசைதன்னியச்
சித்துமாத்திரமதாகச்

செறிகின்றதாலியா நிர்ச்சீவனென்னவே
தெளிவுடனறிந்துகொள்ளே. (சஎ)

நிஷ்பிரகிருதி.

பிரகிருதியின்மைநிஷ் பிரகிருதிசாங்கியன்
பெறுசங்கைசிவாதியைப்
பிரகிருதிமுக்குணத் துண்டுபணிநிற்கையிற்
பிரமநிஷ்பகுதியெவிதம்
விரவுகயிருதிகளை யன்றியேசர்ப்பாதி
மேவாதின்வாக்குமாத்ரம்
விளங்குமூலப்பகுதி பிரமத்தைவிடவற்பம்
வேறிலெனும்யுத்தியாலுந்
திரநனவுகனவுசக மியாவுமதையறிகின்ற
சித்தாகவழிதல்கண்டுஞ்
சித்தின்வேறுயறிந் தவனுன்மபிரமத்தி
செய்கின்றபாவியென்றும்
பரமிலவையாவுநம துருவென்றுகண்டவன்
பரப்பிரம்மமென்றும்வேதம்
பன்னலாலுந்திரப் பிரமமாகின்றநாம்
பகருநிஷ்பிரகிருதியே. (சஅ)

அசம்சாரி.

வரமில்சம்சாரமில் லோனசம்சாரியாம்
வன்னவாச்சிரமங்களு

மருவிவைக்குரியதன் மாதன்மபேதமும்
வருமிவற் றின்பலமதாத்
தருசொர்க்கநரகாதி யும்மவற்றின்சேஷ
சனனமரணாதியாவுஞ்
சம்சாரமாகுமிது தனுவைநாமென்றிடிற்
றன்னையுறுமிவ்வுடற்குத்
திரமருவுநாமனிய மெனவறிந்திவ்விதந்
தேர்சிதாபாசனுக்கே
சிறிதுமிலையிவனையு முடலையுபொய்யெனத்
தேர்ந்திவற்கதிதமான
பிரமமகமெனவறிந் துறுமெமக்கற்பமும்
பெந்தசம்சாரமில்லாப்
பெற்றியாற்சுத்தசித் தாகின்றநாமிகப்
பேணசம்சாரியாமே. (௪௬)

அபெத்தன்.

கட்டுண்டவன்பெத்தனதுவிலனபெத்தனுங்
கள்வன்கயற்றினாலே
கட்டுண்டல்போற்பிரம நாமெனும்புத்தியை
மறைத்துமேகளவுசெய்த
திட்டவஞ்ஞானமது வந்தவுடனேயகந்
தேகமெனமானித்திடுந்
திருடனும்புண்ணியபா வங்குரோதகாமாதி
தீயபாசங்களாலுங்

கட்டுண்பனப்போது துக்கபயசென்மங்
கணக்கிலாதுண்டுபானற்
கருணையின்மெய்ஞ்ஞானம்வந் துடன்மானமற்றபின்
கனபெந்ததுன்பவற்கும்
விட்டொழிதலாலுமுடலுலகினுன்மட்டிடா
வியனகண்டானந்தமாய்
மேவெமக்கொருபெந்த மும்மில்லையாதலான்
மிகநாமபெத்தனுமே. (௫0)

நிரவயவன்.

அத்தமுறுசாரூதி யவயவமுடைத்தாகி
யமர்கின்றமூவுடற்கு
மனியமாயாகாய வுருவமாய்மூவித
வவத்தையின்கரியதாக
நித்தமுறுமென்றனக் கெற்கெனவோரவயவ
நின்றிடாதாலுநம்போ
னிகழுண்மையல்லாது தன்னதவயவமென்ன
நேர்கின்றபொருளுமன்றிச்
சுத்தமுறுநம்மினிற் கற்பிதமதாகியே
தோற்றலுறுமுலகமதனைத்
தொட்டுமேயவயவ மிலதாலுமிவ்விதந்
துகளுற்றவுபயவகையாய்ச்
சத்தமுறுமவயவஞ் சற்றுமேசார்ந்திடாத்
தருதன்மையோடுதானே

தானுயிருக்கின்ற நாநிரவயவனெனச்
சந்ததமுமெண்ணுவாயே.. (௫௧)

அபரோட்சன்.

ஆதாமாங்கன் மகாண்டத்திலோது
மதன்மதன்மமதன்பலன்கள் பத்திகாண்டத்
தோதலுறுதேவதையும் பரோட்சமாகு
முயர்ஞானகாண்டத்தி லோதுபிர்மங்
கேதமுறுமவைபோலப் பரோட்சமின்றிக்
கேட்டவுடன்றானுகக்கிளர்தலாலே
யேதமிலாதப்படியெப் போதுந்தானு
யிருக்குநாமபரோட்ச னென்னலாகும். (௫௨)

சுயம்.

அறைசுயந்தானுயிருத்த லெவிதமென்னி
லஞ்ஞானகாலத்திலனியமாகி
மறைவிலதாயிலகேழ்தத் துவமுஞான
மருவினபின்றானலவாய்த்தள்ளலுற்ற
வறிவிலதாந்தத் துவங்களிருபத்தெட்டு
மாகமுப்பத்தைந்தினுக்கு மப்பாலுற்ற
விறவின்முப்பத்தாறுந்தத் துவமெப்போது
மியாமாகவிலகவினுஞ் சுயமென்றோர்வாய். (௫௩)

அகேயன் - வேறு.

இதுவென்றுதள்ளலுற லேயமஃதின்மையத
கேயமதுவெங்ஙனமெனி

வியன்மூர்த்தமோடமூர்த் தமதெனப்பிரமத்
தினுக்குபயரூபமுண்டா
விதையறிந்திதுவல்ல வல்லவென்றறியென்ன
விசைசுருதிசொன்னபடியே
யியல்பிரமமதனுடைய சச்சிதானந்தமா
யெய்தமூர்த்தங்களுடனே
சுதவுலகமூர்த்தத்தை யுஞ்சுருதியாதியாற்
சோதித்தறிந்துகொண்டு
சொல்லுமிதுபாம்பல்ல வல்லவென்றறிதல்போற்
றுகளபரமார்த்தமாகி
யதமதுறுமேயமா மூலகையலவலவென்
றகற்றிநற்பரமார்த்தமா
யறிவானநாமகேயன்னெனக்காணலா
மாகையானுமகேயன். (ருச)

அனுபாதேயன்.

அடைகின்றபொருளுபா தேயமனுபாதேய
மடைபடாப்பொருள்தெவித
மாமெனிற்கன்மகாண் டத்தினிற்சொர்க்காதி
யானந்தமேவிரும்பித்
திடமதுடனித்யாதி நால்வகைக்கன்மமுஞ்
செய்துளோனப்பலத்தைச்
சேருவன்பத்திகாண் டத்தினிற்சிவனாதி
தேவர்களை மந்த்ராதியா

விடையறவுபாசனு திகள்புரிந்தோன்பதம
தெனுமுத்தியடைவனித்ய
வெழின்முத்தியிச்சையாற் சவனுதிசெய்துளோர்க்
கியலுபலமப்பலம்போ
லடைபடும்பொருளலா தேற்கவேயுற்றதா
மாகவுறுகின்றவதனு
லவத்தையின்கரியதா யெப்போதுமேவுநா
மானுபாதேயனுமே. (௫௫)

அப்பிரவிர்த்தன்.

ஏற்றுபிரவிர்த்தமற் றவனப்ரவிர்த்தனு
மெவிதமெனின்வங்கமதனி
னேகினோர்க்ககல்கரை மரங்களேகுதலலா
தேகுகப்பலிலுற்றதான்
ருேற்றவேயேகாது போற்கணிற்ருேற்றினுந்
துனுமனதின்மாறியெனல்போற்
றெழிலகங்காமுறினு மான்மதிட்டியினிலொரு
தொழினமக்கின்மையானுந்
தூற்றகங்காரம தொழிந்திருந்தாலுநஞ்
சுயதிட்டிதனினிவிர்த்தித்
தொழிலையஃதுறுதலானும்மதின்கண்ணதாய்த்
தோற்றுபயதொழில்குறித்து
மாற்றுநந்திட்டியிலொர்பிரவிர்த்தியாந்தொழிலு
மாமெமக்கனுகலிலதா

லவ்விருவகைக்குமமர் சாட்சியாகத்தொட்டக்
கற்றநாமப்ரவிர்த்தன். (ருசு)

சிவன்.

இலகுசிவனென்னுமது நான்காவதாம்பொரு
ளெவிதமெனி லொன்றுதிக்கி
லிலகலற்றென்றெழித லுறுமவத்தாத்திரய
வியலுசகமூன்றினுக்கு
மிலகுகரியாகியே நான்கதாம்பொருளதா
யெலேயிலத்துவிதசித்தா
யிலகியுறுகின்றநாஞ் சிவனென்னவனுதினமு
மிருதயத்துன்னுவாயே. (ருஎ)

அமிர்தன் - வேறு.

ஆகின்றமரணமிலா தமிர்தம்யோகா
வமிர்தமொடுதேவாமிர் தம்புசித்தே
சாகின்றேனலனென்றே யுற்றபேருஞ்
சாரீசர்பிரளயத்தி னசித்தல்போல
வேகவனந்தானந்த சித்துநாமென்
றிலகலுறுமோட்சவமிர் தத்தையுற்றேன்
சோகமுடனெருக்காலு நசியாதானுஞ்
சொல்கின்றவமிர்தனெனத்துணிந்துகொள்ளே.()

நிரூபன் - வேறு.

உருவமில்லாதவ னிருபனுமெவிதமெனி
லுறுபூதபௌதிகங்கட்

குருவமுண்டிவையையறி சட்சருவமென்பர் சில
ருறுமிவையியக்குமனமே
யருவமென்றறிவர்சில ரதன்வியாபாரத்தை
யுறிபுத்தியருவமென்ப
ரப்புத்திகர்த்தத்துவ போக்த்தத்துவங்கடமை
யறிகின்றசீவனவனே
யருவென்பர்சீவனையு முண்டுபணியாட்டியு
மடக்கிவாசனையதாக
வமருமூலப்பகுதி யருவென்பரதனினுக்
கதிதமாயிவைகளுடைய
விரிவொடுக்காதிகட் கமர்சாட்சியாகவே
மேவியேயுறுகின்றநாம்
விளங்கவேதோற்றினுங்காணுத்தன்மையின்
மிளிர்கின்றநிருபணமே. (௫௯)

சாந்தன் - வேறு.

விறகினிலுண்டாம்வன்னி விறகைச்சுட்டு
விஞ்சாமல்வீதலின்மெய்ச்சுருதியாலும்
பிரகிருதிபுருஷசையோ கத்தினுலும்
பிறந்தவகண்டாகார விருத்திஞான
நிறைபிரமத்தினின்வேறும் பகுதிபூமா
னிகழ்சாத்ரமாதிகளைச் சுட்டுத்தானு
முறுகரியாயுற்றநமி விறத்தலாலே
யுலகமில்நாஞ்சாந்தனென வோருவாயே. (௬0)

## அபயன்.

பயமற்றோனபயனு மொன்றுக்கொன்று
பயமுற்றமிருகபட்சி மநுடர்மன்னர்
மயலின்முனிசுரசுர ருலோகபாலர்
மாலரனேமுதலானபெயர்களாலுஞ்
சுயசித்தாமகண்டநமை யறுக்கவெட்டச்
சுடநனைக்கப்பிடிக்கவடைக் கப்படாதா
லியலுமொருபயமதுவு மற்றேயுற்ற
வெழிலானநாமபய னென்னவோர்வாய். (௬௧)

### நித்தியானந்தன் - வேறு.

ஈனவிடமுறுதேனி ஞேரூர்கள்சீமைநல்
விராச்சியமதாள்வர்சுகமு
மெதிரியனல்வியாதியுட் பீடைமழைசோரர்காற்
றிடியாதிதுன்பமுறலா
லானந்தமென்னல்கூ டாதிராச்சியமுழுது
மாளுதலு நூறுவயது
மரோகதிடகாத்திரமு மாதியாமிலட்சண
மடைந்தவர்க்குற்றமநுட
வானந்தமுண்டிதனி னூறுநூறதிகமா
யரிவரையிலுற்றசுகமு
மமருகாலாந்தரத் தழிதலாவித்தனையு
மமர்மாயையென்றுதள்ளி

யூனமுறுவாந்திபணு மசனமெனவேவிட்
டொருக்காலுமாறவிலதா
யுளவகண்டானந்த மேயுருவமானநா
மொப்பினித்தியானந்தனும். (சாஉ)

நிர்விஷயன்.

பிரிவதாமுருநாம வுலகுசற்சிற்சுகப்
பிரமமாயிலகலானும்
பிரமத்தினுக்குமே விடயமாயறியவொரு
பின்னசத்தின்மையானும்
பிரமவுருவாநமக் கெக்காலும்விடயமிலை
பெறுவிடயம்வந்ததென்னப்
பிறங்கலும்புத்ராதி துக்கசுகமவையிலோன்
பெறுதல்போற் றோற்றினுந்
தரவிவேகத்தினாற் பார்த்தவுடனேயவைக
டகுமவற்கிலதுபோலச்
சத்துமாத்திரமாக வேகண்டபொழுதிலே
சத்தையேயன்றியுலகம்
விரிவாகவந்ததும் போனதுவுமிலையென்று
விடயமுறுபற்றெநாளும்
விமலவான்மாவினுக் கில்லாததாலியா
மேவுநிர்விஷயனுமே. (சாந)

பழையோன் - வேறு.

முன்னுமிழி தூலதனு வுதித்து நூறாய்
மொழிகின்றவருடமதி லயமாதற்கு
முன்னுஞ்சூக்குமவுடலஞ் சிருஷ்டிதன்னின்
முளைத்ததுதான் பிரளயத்திலயமாதற்கு
முன்னும்விசிட்டர்கண்ஞானந் தன்னினாலே
முடிகின்றலயமதனை யடைதலுக்கு
முன்னு நாமிருக்கின்ற படியினாலே
முரணற நாம்பழையோ னென்றகத்திற்றேர்வாய்.

புராதனன் - வேறு.

விளைதலுறுஞ்சமட்டியென மேவுமுடலுன்மூன்றுந்
தளிர்தலுறுபுரமிந்தச் சார்மூன்றுபுரத்திலுநா
மளவுபடாவடிவான வதிட்டானமாயிருந்து
விளையாடுமதனாலும் விளங்குபுராதனனாமே. (௬௫)

சூனியன் - வேறு.

சகலமுமேசிற்சடங்க ளாகத்தங்குஞ்
சடங்களெலாஞ்சத்தன்றி யெப்போதுந்தான்
மிகவுமசத்தானபடி யாலுஞ்சித்து
மேவுமிலட்சணமுமிலட் சியத்திலின்றிப்
புகலுமிலட்சியமுமிலட் சணத்திலின்றிப்
போகின்றபடியாலு மதற்கப்பாலே

பகருமொருவஸ்துமில தானுநாமே
பழமறைசொல்சூனியனென் றறிந்துகொள்ளே. ()

மகாசூனியன்.

அவ்விதமாஞ்சூனியமு மறிவிற்சூன்ய
மாமெனவேயபாவமா யறிகையாலே
யவ்விதமாயதையறியு ஞானந்தானு
மமர்ஞானுபாவவநு பவத்தினிற்ற
னவ்விதமேயிலதாலவ் வறிவினோடே
யமருசூனியமும்போ யபலொன்றுந்தான்
செவ்விபெறவில்லாத படியினனுஞ்
செறியுமகாசூனியனென் றறியவேண்டும். (௬௭)

நிவிர்த்தன் - வேறு.

ஆர்பஞ்சபூதப்ர பஞ்சவிடயங்களு
மன்றென்றுநீங்கலாலே
யைந்துவிடயவ்விகா ரங்களுந்தூலதனு
வன்றுநாமாதலாலே
சார்சனனமரணமுப் பெவ்வன்னவாலிபஞ்
சரைமுதல்விகாரமவையுந்
தகுசூக்கதனுவுமக மலதான்மறப்பாதி
சங்கற்பமாதியாகச்
சேர்விகாரங்களு மவித்தையோடுறுகின்ற
சிவனகமன்றதாலே

செறியுமறிவறியாமை முதல்விகாரங்களுந்
திகழ்மாயையுற்றவீச
னோரகமலாததாற் சர்வக்ஞாதியொடு
திகழைந்துதொழில்களான
நிரைவிகாரங்களு நமக்கில்லையாதலி
னிவிர்த்தனாமென்னவறிவாய். (௬௪)

அகாமன்.

மயிர்நகந்தோனீ ரிரத்தமொடுகோழைசீ
மலசலந்தசைபீளையும்
வழும்பஸ்திசுக்கில நரம்பழுக்காம்வேர்வை
வனமிற்குறும்பியாதி
செயிருற்றவிவைகளைக் கேட்கினுந்தொடுகினுஞ்
சீயென்னவருவருப்புத்
தீண்டிடிற்ஸ்னானமே செய்யவேண்டிடுதலாற்
சேர்கணிற்கண்டவுடனே
நயமிலாவருவருப் புண்ணினோக்காளத்தை
நண்ணலாலருவருப்பு
நாற்றமுந்துர்க்கெந்த மாதலாலாக்ராண
நண்ணவிலருவருப்பு
வியமிவிவையுறும்வனிதைதனைமேவினானிந்தை
வியாதிதுன்புறுதலானு
மேவுமித்தோஷமெல் லாமறிந்ததிவிச்சை
விடுதலினகாமனாமே. (௬௫)

அலோபன் - வேறு.

தேகியென்று கேட்டுவந்தபேர்கடமக்
கில்லையெனுதெந்தநாளுஞ்
சோகமின்றிக்கொடுப்பவனே யீகையுடை
யோனென்னச் சொல்வர்ஞானி
தாகமின்றித்தனதிடத்துள் ளவைகளையுந்
தன்னையுமே தனையுற்றோர்கட்
கீகையினுமிகவு மலோபனென
வனுதினமுமெண்ணுவாயே. (எ0)

உன்னதன் - வேறு.

அதிகமதாஞ்சீவனிலு மூலதேக
மதினதிகஞ் சூக்கவுடறூலதேக
மதினதிகமதினதிகம் பஞ்சபூத
மதினதிகம்மாயையதினதிகமீச
னதினதிகம்பிரமமிந்தப் பிரமமேநா
மானதனுமவைக ளனைத்தினுந்தா
னதிகநமிலும்மதிக மிலாததாலே
யமர்நாமேயுன்னதனென் றறிந்துகொள்ளே. (எக)

அக்குரோதன்.

கன்மமொடுகர்த்தாவி னிடமதாயுங்
கருதுபஞ்சபூதங்க ளிடமதாயுங்

தொன்மைசுகதுக்கமவை வரினுஞ்சுற்றஞ்
சோரருடன்மிகுமாசர் சனங்கடேகம்
வன்மைபசுபுண்மிருக செந்துபீடை
வகைவகையாயனேகவிதம்வந்தபோது
மின்மனதிற்றுக்கினுநம் மிடத்திற்றுக்கா
விதமதனுலக்ரோத னுமென்றோர்வாய். (எஉ)

நிதித்தியாசனயுத்தி முற்றிற்று.

---

## சமாதியுத்தி.

நித்தியன்.

பிரிவுறுமெத்தேசத்து மெக்காலத்தும்
பெருவானமொருபடித்தா யுறல்போற்சுத்த
பரியந்தமுளவகில பிரபஞ்சத்திற்
பஞ்சவிதகோசமுள விடங்களெல்லாம்
விரிவுறுமக்கோசத்தைக் காண்பானுயா
மேவியேயெப்போது மிருத்தலாலே
யிரிதலினுனித்தியனென் றெக்காலத்து
மிதயத்திலவ்விதமா யெண்ணுவாயே. (எஙு)

சர்வகெதன் - வேறு.

திதசாட்சிதனிலேக தேசகற்பிதமதாய்ச்
செறிமாயையீசரிவரிற்

றிகழேகதேசகற்பிதமாம் விராட்டாதி
சேர்கின்ற வைந்தவத்தை
யிதிலேகதேசகற் பிதமைந்துபூதங்க
ளிதிலேக தேசமுலக
மிதிலேகதேசகற்பிதமதாந் தேசங்க
ளிதிலேக தேசமூர்க
ளிதிலேகதேசமாங் கிரகங்க
ளிக்கிரகமிதிலேகதேசமுடல்க
ளிதிலேகதேசமா மிந்திரியமிவிதமா
யெணுமொன்ரு டொன்றுகூடாச்
சுதவுலகமுழுதினையு மறிகின்றவறிவதே
சொரூபமாயெங்குநிறைவாய்ச்
சூழ்ந்துறைதலாலியாஞ் சர்வகெதனுமெனத்
துணிவாக வெண்ணுவாயே. (எச)

சர்வாதாரன் - வேறு.

எவமவித்தைவிசிட்டனுக்கா தாரஞ்சூக்க
மிதற்காதா ரந்தூலவுடலனேக
விவிதவுடற்காதாரம் விராட்டேயாதி
மிளிர்சகங்க ளவைக்கிடந்தான்மாயையீச
னவர்தமக்கு மாதாரமாகச்சச்சி
தானந்தமாயிருக்கு நம்மிடத்திற்
கவிழ்தலுறுமிவைகளெலா மேகதேச
கற்பிதமாதலினுமே சர்வாதாரன். (எரு)

நிராதாரன் - வேறு.

ஆதாரமென்றுமுன்சொ லவிதமீசுவரனந்தத்துக்
காதாரமாகவுற்றவழிவறு மெமக்குவேறோ
ராதாரமில்லாதானு மலேதவில்யாமெமக்கே
யாதாரமானதானு மகநிராதாரனுமே. (எசு)

ஆதி - வேறு.

இயலுடல்களுக்காதி பூதமதிவைக்காதி
யெண்ணும்விட்சேபசத்தி
யிதுதனக்காதார மாயையோடவித்தைக
ளிவைக்கெலாமாதிவஸ்தாய்ச்
சுயசித்ததாகவே யுறுகின்றதாலுமொரு
சூக்கவுடலுற்றபோதே
தோற்றியழிபல்கோடி தூலதனுவொருமூல
துகளுடலமுற்றபொழுதி
னயசிருஷ்டியிலுதித் தழிகோடிசூக்கதனு
நவில்கின்றசீவனுக்கு
நாடுமுற்பத்தியில் லாததாலாதியென
நண்ணியேசீவன்முத்தி
யபவிலாதுற்றவுட னேகின்றதாலந்த
மாகின்றசீவனுக்கு
மனியமாயித்தனைக் கும்முதற்பொருளான
தாலுநாமாதியாமே. (எஎ)

## அநாதி - வேறு.

இப்படியேயெவைகளுக்கு மாதியான
வெமக்காதியிலதாலு மநாதியென்று
செப்புகன்மமஞ்ஞானம் வேதமீசன்
சீவனெனுமுபாதிசித்தா யுறுஞ்சகத்துக்
கப்பினிருபாதிசித்தாம் பிரமமாறிற்
கற்பிதமாமநாதியைந் தினுக்குமூல
தப்பறுசித்தினுக்காதி யிலதாலந்தச்
சைதன்யமானநா மநாதியாமே. (எஅ)

## விபு - வேறு.

இதமறுவிசிட்டனினும் விபுசூக்கவுடலிதனி
னிழிதூலவுடலம்விபுவா
மிதுதனினும்விரிவுபா ரிதனினும்விரிவுநீ
ரிதுதனிலும்விரிவுகனலா
மிதனினுங்காற்றுவிரி விதனினுங்ககனம்விரி
விதுதனினிரண்யகர்ப்ப
மெய்தும்விரிவிதனினவ் வியாகிருதம்விரிவாகு
மிதனினவ்வியத்தம்விபுவா
மிதனினுஞ்சுத்தம்விரி விவைகடம்மாலுமட்
டிடவொணுதேவிரிந்த
வெழின்மாயையுறுவீச ரவாலுமட்டிடவு
மியலாதனந்தவிரிவா

யிதமதுறுமத்திபா திப்பிரியமா நமிலு
மெய்துமற்றென்றுபெரிதா
பெம்மைமட்டுக்கட்ட வொன்றுமில்லாததா
லென்றுநாம்விபுவதாமே. (எகூ)

மகத்து.

அவதாவரத்தினறி வான்மகத்தானமிரு
காதியதினீசாதி
யவர்களினுநான்குவன் னத்தரவரிற்கன்மி
யவரினிற்றீக்ஷிதர்களா
மவரினிலுபாசகர்க ளவரில்ரிஷியவரில்பிதி
ரவர்தமிலுமுலகபால
ரவரினிற்பூதபதி யவரின்வைசுவானா
ஞதியவரிற் புருஷரா
மவரினிற்குமாரவ ரியாவரினுமேமகத்
தாகுநற்றேவிதேவ
னவர்களிருவர்க்கும் பிராணபூதமதாகி
யவர்களாற்பத்திபண்ண
வவமறுமகத்துவ மதுறுமெமக்கதிகசம
னும்வஸ்திலாமனுமே
யமர்கின்றயாவையினு மதிசயித்தவனுத
லான்மகத்தாகுநாமே. (அ0)

நிரஞ்சனன் - வேறு.

பகர்புனலின்முழுகினவ னுடலிலந்நீர்
பற்றலெனப்பற்றியிடக் காணமற்றன்

சகலசகத்துட்புறம்பு நிறைந்துநின்ற
தம்மிடத்திலேயழுந்தி யிருக்காநின்ற
புகலவத்தைமூன்றினுமேகாணலுற்ற
பொருவில்சுத்தபரியந்தசகத்தினோடே
யிகலுறுபற்றற்றுவெளி போற்றொடக்கற்
றிருக்குநாநிரஞ்சனனென் றெண்ணுவாயே. ()

காரணன் - வேறு.

அவிருமூவகையுடலி னுக்குமூலங்கன்ம
மைம்பூதமவைகண்மூல
மமர்சூக்கபூதபௌ திகமவைகண்மூலம
தவித்தையுறுசீவனோடு
நவமாயையுறுவீச னவர்களுக்கதிகமாய்
நவையில்சைதன்யநாமே
நண்ணுகாரணமான தாலுநற்சச்சிதா
னந்தமாநம்மைவிட்டுப்
பவமானகாரியம தாமுலகினுக்கயற்
படிவமில்லாமையானும்
பகருகாரணவுருவ மாகின்றநம்முடைய
படிவமேபல்வகையதா
நவையானகாரிய சகத்தினுக்குருவமாய்
நண்ணுற்றதாலுமிகவு
நாடுற்றசகலத்தி னுக்குமனுதினமுநா
நவிலுகாரணனுமே. (அ௨)

அகாரணன் - வேறு.

இப்படிச்சகலத்தினுக்கு மிலங்குகாரணமாயுறுந்
தப்பிலெற்கொருகாரணமில தாலுமெய்யுணர்வின்பமா
யொப்பினுஞ்சகலத்தின்மூல வுருவமாயினதாலுமே
யெய்ப்பிலாவகமேயகாரண னென்னவேநிதமெண்ணுவாய்.()

சாட்சி - வேறு.

அகிலசககிரியைக்கு மாதித்தசனிதான
மானதேமூலமாக
வமர்தல்போற்சர்வவிந் தியசகத்தொழில்களு
மசைவில்சைதன்னியத்தின்
விகலமில்லாததோர் சன்னிதானங்கொண்டு
விதம்விதமதாகமிகவும்
விரிவாய்நடக்குகினு மிலகுகரியாகவே
மேவுநாநாமாகவுந்
திகழுபிரவிர்த்தியு நிவிர்த்தியுஞ்செய்யாது
சேர்கின்றவொன்றினுலுஞ்
செய்வித்தலில்லாது மத்யஸ்தனுகவே
தினமிவையைநாடிநின்று
துகளிலாக்கனலிபோற் சகலவிததொழிலையுந்
தோற்றுவிக்கின்றவதுவே
சொருபமாநாஞ்சர்வ சாட்சியென்றனுதினந்
தூய்மனதினெண்ணுவாயே. (அச)

தாணு.

அலையினும்மனதுபொறி யலையாததுலவுட
லவைகோடியலையினுந்தா
னலைவில்பூதங்களவை யசையினுமசையாம
லமரினுமசைதல்போல
வலைசூரியாதிமண் டலமிதனிலலைவைசு
வானாணுதியிவித
மலைசுத்தவரையுலகொர் தனுவாகநாமென்ன
வபிமானமுற்றறிவினி
லலைதலுறுமீசனவ ரினும்வேறதாகவே
யறிவதனின்மறுசிருஷ்டி
யாக்கியலைகுமாரா தியரித்தனைக்குமே
யமருதாணுகவிலகி
யலகிவித்தனைசலன மதனேடுகூடியு
மசையாமலிந்தயாவி
னலைவினுக்குங்கரிய தாகநிறைசைதன்ய
மானநாந்தாணுவாமே. (அரு)

பரிபூரணன்.

அப்பினற்கடமதைப் பூரித்தல்போலவே
யனமயம்பிராணனதனு
லதுமனேகோசத்தி னலதுவிஞானமய
மாங்கோசமதனலதுஞ்

செப்புமானந்தமய மதனினூற்பூரித்தல்
சேர்ந்துநற்சிவனதனூற்
சேர்பூரிதம்பஞ்ச கோசங்களவையினூற்
றிகழ்பஞ்சபூதநிறைவாந்
தப்பவில்லவையினூற் பூரித்தலுறுசகஞ்
சகமதினுமெங்குநிறைவாய்ச்
சார்கின்றமாயா விசிட்டருநமான்மிகத்
தாழ்வில்பூரித்தலுற்றுத்
துப்புடையநம்மினும் வேறுபரிபூரணந்
தோன்றுதலிலாதவதனூற்
சொல்லுபரிபூரண நாமென்னவேநிதஞ்
சுகமுடனறிந்துகொள்ளே. (அசு)

அனந்தன் - வேறு.

உடல்பொறிகடமின்மிகவும் விரிவதான
வுட்காரணதிகட்குமந்த மேயுடைத்தா
யடருமந்தக்காரணதியாலுமெட்டி
யறியவொணுவிரிபஞ்ச பூதங்கட்குந்
திடமாயாவிசிட்டருக்குங் காலபேதந்
தேசபேதங்களினூ லந்தந்தன்னை
யிடமாகக்காண்கினுமே யந்தமின்றி
யியல்சாட்சியானநா மனந்தனூமே. (அஎ)

சர்வசமன் - வேறு.

அகிலவுன்னதசுத்த மதினென்றினுக்கொன்ற
தாம்பத்தினென்றுகுறைவா

யல்கியேசத்தியும் பினமாமகத்துமுத
லாக்கடினையந்தமுலகோ
டிகல்தேவபாகமும் மநுடபாகமுமென்ன
வெய்துபூதங்களுடனே
யிழியதன்மமத்திமோத் தமமானபிரமன்முத
லெய்துதம்பாந்தவுடல்கள்
சுகஞானியோகியொடு பாசகன்கன்மியாய்த்
தோற்றலுறுசிவாதி
சொல்லீசனீறதாய்த் தாரதன்மியமொடு
துலங்குவஸ்தியாவினுந்தா
னிகலில்சத்தாகார மாய்த்தாரதன்மியம
தெய்தாமலெப்பொழுதுமே
யிருக்கின்றசைதன்ய மானநாமேயென்று
மியல்சர்வசமனாகுமே. (அஅ)

சர்வாதிட்டானன் - வேறு.

அதிட்டானஞ்சூக்கவுடல்விசிட்டனுக்கு
மமர்தூலதனுக் களவைக்கும்பூதங்க
ளதிட்டானமவைக்குமதிட்டானமாயை
யமரீசனுங்கிளிஞ்சில் வெள்ளிபோல
வுதித்தலுறுவாக்குமாத் திரமல்லாம
லுளவதிட்டானந்தவிர வொன்றில்லென்றே
மதித்திடநிர்ணயம்பிறந்த வதனாற்சித்தாய்
வயங்கிடுநாஞ்சர்வாதிட் டானமாமே. (அகூ)

அகண்டன் - வேறு.

நவைகாலமாதியாற் கண்டிதமுறாத
வறிவானநாமேயகண்டன்
நவிலுமற்றொருயுத்தி யுலகர்நிர்ணயமருகா
நணுபுத்தராகமத்து
மவைதேவாகமத் தவைபிரமனரியீச
ராகமத்தவைபுராணத்
தவைபாரதத்ததுவு நீதிசாரத்தவையு
மறைகின்றகன்மகாண்டத்
தவையுபாசனகாண்ட மவையாவுமுபநிடத
மவைகளாற்கண்டித்தலா
மவைநிர்ணயஞ்செயறிவெமையொன்றுகண்டிக்க
வாகாததாலுமாக
வெவமிலுபநிடதத்தி னதிதபிரமாணம்வே
றில்லாதபடியினாலு
மியாவுபிரமாணத்தி னுக்குமவைமுடியாத
லாலும்யாமேயகண்டன். (௯0)

அபரிச்சின்னன்.

ஒருவருக்கொருவர்கள் பரிச்சின்னமாய்ப்பிரிவொ
டொளிர்சீவரொன்றினுக்கொன்
றுறுபரிச்சின்னமாய் நாலைந்துதத்துவத்
துடன்மிகத்தோற்றுசூக்க

சரீரங்களாமிவைக ளைக்குறித்தபரிச்
சினமாய்த்தனக்குளாறு
தத்வமாகப்பரிச் சின்னமாந் தூலத்
தனுக்களிவையைக்குறித்துப்
பரிச்சின்னமின்றியொளிர் பூதங்களிவைகளை
பற்றியபரிச்சின்னமாய்ப்
பனுமாயையுறவீசனுஞ் சாட்சியாகவே
பகருநம்மைக்குறித்துப்
பரிச்சின்னமானவத னுலுமேநம்மிலும்
பரிச்சின்னமற்றதொன்று
பன்னவிலதாலு மபரிச்சின்னனுமெனப்
பரிவினெடுமெறிகுவாயே. (கூக)

அனுவிருதன் - வேறு.

தாபமுறும்விசிட்டனையா பரித்தல்சூக்க
சரீரமிதையாபரித்தறாலதேகஞ்
சோபமுறுந்தூலதனுக் களையுமற்றுஞ்
சொல்பூதமவைகளையுமொன்றையொன்று
வாபரித்தவிராட்டாதிப் பிரபஞ்சங்க
ளவைகளையுமாபரித்தவீசனு லு
மாபரிக்காதவரையு மேயாபரித்த
வறிவாநாமனுவிருதனுகுந்தானே. (கூஉ)

சர்வகாரணன் - வேறு.

காட்சியா யவத்தைமூன்றிற்
கண்டிடுஞ்சகங்களியாவுஞ்

சாட்சியினிடத் துதித்துச்
 சாட்சியி னிடத்திருந்து
சாட்சி மாத்திரமதாகத்
 தானழி கின்றதாலே
சாட்சியா கின்றநாமே
 சர்வகாரண னென்றோர்வாய். (சுரு)

பிரமம்.

காலமூன்றினுமே யெங்குங்
 ககனம்போ லொருபடித்தாய்க்
கோலமாய் நிறைந்தநாமே
 கூறுநித்திய சுத்தாதி
சீலமாமிலட் சணத்தைச்
 சேர்ந்துறை கின்றதாலே
சாலநாம் பிரமமென்றே
 சந்ததஞ் சிந்தைசெய்வாய். (சுசு)

ஒருவனேயுள்ளபொருள் - வேறு.

பனுகனவினிற்கண்ட சீவனீச்வரசகம்
 பணு நன்மைதீமைகேள்விப்
படும்வேதவாகமபுராண சாஸ்திராதி
 பல்விகற்பங்களுந்தா
மனகனவதைக்காணு மறிவைவிடவின்மையி
 னவத்தைமூன்றதனினுங்கா
ணகிலசகமும்மறியு மறிவைவிடவில்லா

தவத்தையொன்றென்றிலிலகு
மினசகமதந்தந்த வத்தையைக்கண்டகரி
யாகவேயிற்றபடியா
லெண்ணவேவேறென்று மூன்றுகாலத்தினு
மெய்தவந்ததுவுமில்லை
யுனமிகப்போனதுமி லெனுமநுபவத்தின
லொன்றுமற்றில்லையுறுநா
மொருவனேயுள்ளபொரு ளென்னவேயனுதினமு
முளமதனிலெண்ணுவாயே. (௬௫)

சர்வாத்மா.

வயல்குளந்தேசமூ ாதிவஸ்தவைகட்கு
மண்ணதேயுருவமாபோன்
மருவுலகினுக்குருவ நஞ்சச்சிதானந்த
மாயிலகலானுமின்ப
மயநம்மைவிடவுலக மற்பமிலதாற்
சர்வமாமுலகமாகவுறுநா
மாசர்வவான்மாபின் ஞெருயுத்திநானென்ன
மருவுரைக்கூன்றுகோலா
யயலில்கரியுருவே நமக்குற்றல்போற்
பறவையறைமிருகநரர்கண்முனிக
ளமரருலகதிபர்பூ தாதிபதிவைசுவா
னாஞதிசிவருக்கு

நயவிசருக்குநா னெனுமுரைக்கூன்றுகோ
லாக்கரியதானநாமே
நண்ணியிடமங்கங்கு சித்திக்கையான்மிகவு
நவிலுசர்வாத்மனுமே. (கூசா)

சர்வாகாரன் - வேறு.

கனவதனிற்காணலுறுஞ் சகங்களியாவுங்
கண்டதனதாகாரமானதேபோ
லுனுமவத்தாத்திரயசக மியாவினுக்கு
முறுகின்றநமதுசத்தாகாரமேதான்
வினவியிடுமோகார மானதாலும்
விளங்குசத்தாகாரமதைவிட்டுநாடிற்
சனனமுறுசகமதுவே யில்லாதாலுஞ்
சாருநாமேசர்வாகாரனுமே. (கூஎ)

அனேகரூபன் - வேறு.

பயில்சர்ப்பமென்னவே தோற்றினதுதானுமட
பழுதைதனையன்றியிலதின்
பகர்வன்னவாச்சிரமமொடு சொர்க்கநரகாதி
பல்தேசமூர்கள்கால
மியல்சாஸ்திரஞ்சீவ னீசுவரபேதங்க
ளென்னுமையேழதாக
வெனுதத்துவங்களுஞ் சச்சிதானந்தமா

யிலகுநம்வடிவதாலு
மபலொன்றினுடையவுருவலதாலுமொருகூத்த
னளவில்வேஷங்கடம்மை
யமர்தல்போலும்பூமி யொன்றுமேபல்விகற்
பங்களாயாதல்போலுஞ்
சுயசத்ததாயிருக் கின்றதாெருவனே
சுழலுசிவிசசகமாத்
தோற்றுபேதங்களா யுறுதலாணுமிகச்
சொல்லிடுமனேகரூபன். (கூஅ)

ஏகரூபன்.

பலசட்டிநீரின்மதிபல விதந்தோற்றினும்
பயிலுமதியொன்றலாது
பகரிரண்டல்லாது போலவுமவனவன்
பார்வையிற்றோற்றுகனலி
பலவன்றியொன்றுதல் போலும்படிகமண்ட
பத்தம்பயிலகுஞாளி
பலவன்றியொன்றுதல் போல்வுங்கனவினிற்
பலவிதஞ்சகமிலகினும்
பல்வன்றியொருவனே யாதல்போலுஞ்சீவ
பாசகத்தென்றுமிகவும்
பலவிதமதாயிலகினுஞ் சச்சிதானந்த
பகரிலட்சணமதாயே

பலவானசகலத்தையுங் கண்டபடியினூற்
    பனுசகத்தாகாரமே
பலரூபமாயிலகினுஞ் சற்சிதின்பமாய்ப்
    பகருநாமேகரூபன். (சுசு)

பரமார்த்தன்.

கனவபரமார்த்தமா நனவுபரமார்த்தமாங்
    காணனவிலபரமார்த்தங்
கார்மின்னன்மற்றவைகணிலையிவையினுளடிமை
    காயமனைமதலைவீடு
தனமுதலிவ்வுலக வஸ்தபரமார்த்தஞ்சுரர்கள்
    சாருலகமாதிநிலையாய்த்
தங்குமிதிலயனுலக நிலையென்னவிவ்விதந்
    தாரதன்மியங்களாகப்
பனுவீசசீவசக முழுதுநன்குணரினே
    பரமார்த்தமல்லதாலும்
பகரிவைக்குச்சர்ப்ப மாதிக்குரச்வாதி
    பரமார்த்தவுருவாதல்போ
லனகநாம்பரமார்த்தவுருவ தாலுமெமக்
    கழிவுவந்தொருவஸ்துவு
மாகுபரமார்த்தமா யுற்றிடாதாலுநா
    மழிவில்பரமார்த்தனேமே. (க00)

வ ஸ் து.

புரிவஸ்துவென்னல்பொருண்மற்றதன்றெனி லுலக
மியாதெனிற்புரியினாவம்
போலுலகுபொய்யதாற் பொருளல்லவெனிலரவு
போலுறும்புரியினாவப்
பிரமைவராலாமுலகு போலிரா நிரவயவ
பிரமத்திலுலகுதானும்
பிரமையென்பதுதகா தென்றிடிற்றுன்சிவப்
பிற்குவமையற்றபடிகத்
துரையிரத்தப்படிக மென்பிரமைபோற்கசப்
புக்குவமையில்குளத்தை
யுறுகுளங்கைக்குதென் றிடுபிரமைபோலவு
முலகமேபோலிராத
பிரமத்திலுலகமா ரோபமாமிவ்விதம்
பிரமையாமுலகினுக்குப்
பிறங்கதிட்டானபொரு டனையன்றியிலையதாற்
பேசலுரும்வஸ்துநாமே. (க0க)

நிட்பிரபஞ்சன்.

பிரபஞ்சமின்மைநிட் பிரபஞ்சம்வாதிகள்
பேதமாஞ்சங்கையுலகைப்
பெயர்த்தறிவையுறுவெனச் சுருதிசொலலாலுலகு
பேர்த்துவிடவேண்டுமென்னிற்

றிரமில்சகமுளதாயி னொருவசேத்தனமதாற்
    றீராதுசங்கைசுகர்நற்
றெட்சணாமூர்த்திமுதன் முத்தராலேசகந்
    தீரந்ததவ்விதமுமக்குத்
தருசகமின்ஞானமிலே யெனிலவர்களாவிறந்
    தற்றதேலுலகுதானுந்
தயங்கவுடனிப்போ துறக்கணக்கிலையிலாச்
    சகமதனையில்லையென்றே
சுருதியுமழித்திடச் சொன்னதாற்சொப்பனத்
    துகளுலகினுலகிலென்றே
துணிவுடனழித்த வுலகில்ஞானமாதலாற்
    றுகளினநிட்பிரபஞ்சன். (கO௨)

நானாரூபன்.

இயலுநானாரூபம் வெகுரூபமாஞ்சங்கை
    யிவையெலாம்பிரமமல்ல
வெனும்வாக்கியத்தின வுலகைத்துடைத்துமிக
    வேகசித்துருவதாக
வியல்சுருதிபிரமத்தை நிலைநிறுத்தப்பிரம
    மெண்ணும்வெகுரூபமென்ப
தெவிதமெனில்வெகுவிதம் பிரிவுபெறுநீரின
    வினமொருவனேயனேக

வபதுருவமேயென்ன விலகல்போல்வெகுரூபி
யாயுறுமவித்தையாலே
யலகிலொருபிரமமும் வெகுரூபமேபோல
வமரவேயிலகல்கொண்டு
சுயமாகவெகுரூப னென்பதுபசாரமாச்
சொல்லலுறுமாகையாலே
தோற்றிடுமவித்தைதன்னைக்குறித்தென்றுநாந்
துகளினாரூபனே. (௧0௩)

அபேதன் - வேறு.

தேசமதன்பேதங்கள் பூதபேதந்
தேகமதன்பேதமோ டிந்திரியபேத
மீசர்களின்பேதங்கள் சீவபேத
மெனத்தோற்றுமாயாகா ரியத்தினுக்கு
மாசுறுமாயைக்குமதிட் டானசித்தாய்
மருவுசச்சிதானந்த நம்மைவிட்டுப்
பேசுறுமோர்பேதவுரு விலதானமே
பிரிவிலாவபேதனெனப் பேணுவாயே. (௧0௪)

நிருவிசேஷன் - வேறு.

நிருவிசேஷன்னுயர்வு தாழ்வாம்விசேஷமவை
நீங்கினவனிற்றலோட

னேர்கோணலாதியா விலகலுறுமருடரோடு
நிகழ்தருப்பட்சிமுதலாஞ்
சருவமென்விசேஷங்க ளுடனுற்றவ்வடிவையுஞ்
சாரதன்றெழிலுமுறல்பொற்
றயங்குகினும்வெயிலேக ரூபமாய்விபுவதாய்த்
தனிநிருவிசேஷமாபோற்
பொருவிபுப்பிரமமுன் சொல்விசேஷத்தொடு
பொருந்தியத்தொழில்கடம்மைப்
பொருந்தல்போலுறினுந்தொடக்கிலதசங்கமாய்ப்
புகலுநிர்விசேஷமாயே
யிரிவிலாதுறுமென் றுரைத்தபடியேயறிஞ
ரியல்விசேஷங்களியாவு
மெமதிடத்திலகலென் றெண்ணியநுபவித்தலா
லியாநிருவிசேஷனுமே. (௧0௫)

அத்தொய்தன்-வேறு.

துவிதமென்ப திரண்டிரண்ட
தற்றதத்துவிதமாந்
துவிதசகமிலகலினத்
துவிதமென்பதெவிதம்
புவியின்மாஞ்செடிகண் முதலான
தெலாமுதித்துப்
பூமியிலேயிருந்துபுவி
யாகவழிந்திடல்போ

லவிரவத்தைகளிற்றோன்றுஞ்
சகமறியுஞ்சாட்சி
யானதமிலுதித்திருந்தே
யழிந்துவிடலாலே
தவறிலறிவாந்தனைப்போற்
பின்னையொருவஸ்துத்
தானிலதாதலினுமே
யத்தொய்தனுகும் (க0சு)

சர்வாபாவன்.

உண்மையறிவானந்த நமையன்றிமற்ற
வுறுமைந்தேழ்தத்துவமா முலகுநினைவதனி
லுண்மையெனத்தோற்றினதந்நினைவுபொய்யானதனு
லுள்ளின்மெய்போலிலகுலகும்பொய்யானதாலுந்
தண்மையுலகதுநான்கு வபாவமுறலாலுஞ்
சசாதிமுதற்றிரிபேதந் தனக்கிலதினுலு
முண்மைசுகச்சிற்பிரம மன்றிமுப்பத்தைந்து
மொருக்காலுமிலதாற் சர்வாபாவனுமே. (க0எ)

சர்வதோமுகன் - வேறு.

காலமொடுதேசவஸ்து திக்குவன்னங்
கருதுகின்றவாச்சிரம மிவைகடம்மி
லேலவொன்றிலுள்ளதுமற் றென்றிலில்லை
யென்னுமிவையேமுதலா வியம்பாநின்ற

சிலமில்பரிச்சேத மற்றேபத்துத்
திக்கினுமற்றெங்குமடி முடியுமற்றுச்
சாலவுமேசர்வபரி புரணமாகத்
தங்கவினுஞ்சர்வதோ முகனென்றோர்வாய். ()

சுயம்பிரகாசவின்பத்
தோன்றலேதுரியவாழ்வே
வயம்பெறுநினது நாம
வளத்தினைமிகத்தொடுத்துத்
தயங்குமிம்மாலை தன்னைத்
தமியனேன்பிழைத்தற்கேநின்
புயந்தனிலணிந்தெநாளும்
புலையனேன்றனையுங்காவாய். (௧0௧)

இலக்ஷணவிர்த்தி முற்றுப்பெற்றது.

ஆ பாயிரமுள்படக்கவி-௧௧௫.

ஸ்ரீ முத்துராமலிங்கசுவாமிகள்.

திருவடிவாழ்க.

சர்வஞ் சின்மயம்.

---

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# தசகம்.

ஓதுமண்ணிலை யுதகமிங்கிலை
யொளிருந்தேசிலை காலிலை
பூதவிண்ணிலை யிந்தியமிலை
புகன்றவைகளின் றிரளிலை
யேதுமேவிப சாரமேவி
யிறப்பதாவிச் சுழுத்தியின்
மீதியாயுள பூரணானந்த
மேனியானசிவோகமே. (க)

சாதியுமிலையாச்சிரமமிலை
சாதியாச்சிரமதருமமா
நீதியுமிலைதாரணையிலை
நிதித்தியாசனயோகமே
யாதியுமிலைகற்பனையப
வாதவாசிரயமாதலாற்

சோதியாய்நிலைநின்றபூரண
சுத்தரூபசிவோகமே. (௨)

தந்தைதாயிலை தேவருமிலை
தங்குலோகங்களுமிலை
சந்தவேதங்க ளில்லையாகங்கள்
சகலதீர்த்தங்களுமிலை
தொந்தமற்ற சுழுத்தியிற்றொட
ராதுநீங்குதலான்மகா
னந்தபூரண சத்தியகேவல
ஞானநித்தசிவோகமே. (௩)

பன்னுசாங்கிய சைவமுமிலை
பாஞ்சாரத்திரமுமிலை
யுன்னுசைனமீமாஞ் சையுமிலை
யுலகுண்மற்றமதமிலை
துன்னுஞானிக ளநுபவப்பிர
சித்ததூயசொரூபமாய்ப்
பின்னமேயற நின்றபூரணப்
பிரமமென்றசிவோகமே. (௪)

பகருமேலிலை கீழிலைப்பா
வுள்ளிலைப்புறமுமிலை
யகலமேநடுவில் குறுக்கிலை
யாகிழக்கிலைமேற்கிலை

ககனமென்ன நிறைந்தகண்டசிற்
 ககனகேவலரூபமாய்ச்
சுககனச்சொக தாதிபேத
 விகீனசுத்தசிவோகமே. (௫)

வெள்ளையுமிலை கருமையுமிலை
 வேறுபீதசிவப்பிலை
குள்ளமுமிலை நெடியதுமிலை
 குறைபெருத்தலுமில்லையே
தள்ளியித்தனை ரூபமுந்
 தவிராதசோதிசொரூபமா
யுள்ளபூரண ஞானவின்ப
 வுபாதிகீனசிவோகமே. (௬)

சாத்திரந்தனைப் போதிப்பானிலை
 சாத்திரம்படிப்பானிலை
சாத்திரமிலை பாடமுமிலை
 சாற்றுநீயிலை நானிலை
சாத்தியாதி சகத்திலைச்சல
 மற்றுமிஞ்சுதலான்மகா
சாத்திரப்பொரு ளானபூரண
 சாந்தபோதசிவோகமே. (௭)

சாக்கிரமிலை சொப்பனமிலை
 சார்சுழுத்தியிலையிதிற்

ருக்குவிஸ்வ னிற்றைசதனிலே
தங்குபிராஞ்ஞனுமில்லைமூன்
ருக்கையுமிலே யவையவித்தை
விகாரமாதலினுலிவை
நீக்கிநின்றிடு துரியபூரண
நித்தபோதசிவோகமே. (அ)

அதிவியா பகமாதலா
லழிவற்றதத்துவமென்றதாற்
சோதசித்தப்பொருளான தாற்றனில்
வேறொன்றைத்தொடாததாற்
சததமாயுளசிவ னொழிந்திங்ஙன்
சகமெனும்பொருளேயிலே
யதுவிதென் றுரைசெய்வதற்
கரிதாமகண்ட சிவோகமே. (௯)

இல்லையேகமெனுஞ் சொலுமிரண்
டென்றுசொல்லுவ தெங்ஙனே
யில்லைகேவல மோடகேவல
மில்லைசூனியா சூனிய
மெல்லையற்ற வகண்டசிற்சுக
வேகபூரண வஸ்துவாற்
றெல்லைவேத முடிப்பொருடனைத்
தோன்றவெப்படியோதுவாம். (௧0)

வேறு.

இப்படிச்சங்கார சாரியாரின்பமாய்ச்
செப்பிடுங்கவிகளின் றெசகமீதன்பினுற்
றப்பறவோதுவா ரியாவருந்தடையிலா
தொப்பறும்பிரமமே யுற்றுணர்ந்தெய்துவார். (கக)

தெசக முற்றிற்று.

---

## விவேகசட்கம்.

---

அனித்தியபூதத் தேகநானன்று
விந்தியத்தசங்கநானன்று
நனித்தவாங்கார பிராணவற்கங்க
ளன்றுநற்புந்தியுமன்று
தொனித்திடுந்தார மனைசெல்வங்களுக்குத்
தூரமாஞ்சாட்சிநானென்றுந்
தனித்துநித்தியமாய்ப் பிரத்தியகான்மாவாந்
தற்பதப்பொருளதாஞ்சிவோகம். (க)

உற்பவன்விருத்த னன்றுநானோர்கா
லத்தினுநசிப்பவனன்று
வற்பமாந்தேக காரியமான
வவையெலாமகங்காரத்தல்லாற்

றற்பதவடிவாஞ் சின்மயமான
வெனக்கிலைசகளநிஷ்களமா
யெப்புறத்தேனு மெல்லையற் றிருக்கு
மின்பசிற்சொருபமாஞ் சிவோகம் (உ)

சத்தியஞான னந்தமாம்பிரமத்
துதித்திடு மாயையிற்சனித்த
மெத்துமிவ்வுலகஞ் சேதனத்திடையே
நசிக்குமதேதெனவிளம்பிற்
றத்துசொப்பனமுஞ் சுழுத்தியிலசத்தாந்
தன்மைபோற் சத்திலாதிருக்குஞ்
சுத்தபூரணமாய் நித்தியமாகித்
துலங்கியசொருபமாஞ்சிவோகம். (௩)

பழுதைதன்னிடத்திற்பாம்புதோன்றுதல்போற்
பரப்பிரமத்திடையதனிற்
கழிதருமஞ்ஞா னத்தினாற்சீவ
னுதித்திடக் கண்டவனொருவன்
பழுதையென்றதனாற் சர்ப்பமோகமும்போய்ப்
பழு தையாய்க் கண்டதுபோல
வழிவிறேசிகனார் சீவனீயன்றென்
றறைந்திடவாகினேன் சிவோகம். (௪)

எமக்குமன்னியமா முலகமொன்றில்லை
யெவ்வுலகங்க ளெம்மிடத்திற்

சமித்துவுற்பவமா மாதலான்மாயை
வடிவமதேதெனிற்சாற்ற
வமைத்தகண்ணுடி விம்பமா நிழல்போ
லடங்கியெம்மிடத்தினில்விளங்குந்
தமத்துவமில்லாங் சச்சிதானந்த
தற்பதவிமலமாஞ் சிவோகம். (ரு)

சாக்கிரமதனி லிந்திரியங்க
டமக்குமேற் சாட்சியாஞ்சிவோகம்
தேக்குசொப்பனத்தி லுலகரூபமதாய்ச்
செய்மனச்சாட்சியாஞ் சிவோகந்
தாக்கியசித்த நாசமாஞ்சுழுத்தி
யவத்தையிற் சாட்சியாஞ்சிவோக
நீக்கமிறுரியா னந்தமாஞ்சர்வ
நிர்மலசாட்சியாஞ் சிவோகம். (சா)

விவேகசட்க முற்றிற்று.

---

## சொருபானுசந்தான துதி.

---

தானந்தவமியாக மாதியினுலே
தன்மனச்சுத்தியைப் பெற்றுச்சமஸ்த

ஆனசுகத்திலுந் துச்சமதியா
லோதும்விராகமடைந்திந்தப்பந்த
மானவினைகளனைத்துந்துறந்திங்
கந்தணராதிகளியாதொன்றைப்பெற்றார்
மோன சதானந்தபூரணநித்த
முத்தபாப்பிர்மம் மதுநானே. (க)

சத்துப்பிரமத்தி னிட்டையடைந்து
சாந்தமதியாய்த் தயாநிதியான
வுத்தமவாசானை யாராதித்தன்பா
லுள்ளசொருபத்தை யோர்ந்தவன்முன்பாய்
சுத்தமதியாலே தியானித்துமேலோர்
சொச்சொருபமாகயாதையடைந்தார்
சத்துச்சித்தானந்தபூரணநித்த
சாந்த பரப்பிரமம்மதுநானே. (உ)

நித்தநிருபாதி யானந்தமாகி
நின்மலஞானசொருப வொளியா
யித்தனையாகிலுமிச்சகமென்னு
மியம்பலுமில்லாதபூரணமான
வத்தன்மைத்தாகின்யாதொன்றை மேலோ
ரகம்பிரமமென்னும் விர்த்தியினாலே
தொத்தரவில்லாச் சொருபமாய்ப்பெற்றார்
துரியபரப்பிரமம்மதுநானே. (ங)

யாதையறியாத தாலிச்சகத்து
யாவையுந் தோன்றிடுஞ்சத்தியம்போல
யாதைத்தற்சொரூபமாகவறிந்தா
லியாவுமுடனிங்ஙன்றேன்றிடமாட்டா
தோதுமனோவாக்குயாதொன்றினாலு
முன்னியுணர்ந்தோதவொண்ணாததான
நீதிலாப்பூரணசுத்தவிமுத்த
திவ்விய பரப்பிரமம்மதுநானே. (ச)

எந்தமகானந்த வாரிதிதன்னி லெழுந்திவலை
கொண்டுவெல்லாச் செகத்துஞ்
சந்ததமாகச் சுகமுறுமற்றுஞ்
சலியாவிளங்கின்ற தியாதொன்றைப்பற்றி
யிந்தச்சடசக மியாவும்விளங்கு
மியாதைவிசாரிக்கும்போதுமற்றெல்லாத்
தொந்தமுந்தள்ளத் தகுவதேயாகுந்
தூயபரப்பிர்மம்மதுநானே. (ரு)

எந்தமகானந்த சிந்துவிலெப்போ
தீனமில்லாதசமாதிபெலத்தாற்
சிந்தனையாதொன்று மில்லாமற்சீவன்
சீரோதகம்போல லீனமுமப்போ
தந்தமிலாதவவித்தைவிலாச
மாகினவிச்சக மியாவையுந்தோன்று

திந்தவிசித்திர மியாதொன்றிலா
மென்றும்பரப்பிரமம்மதுநானே. (சு)

நேதிநேதியெனும் வாக்கியத்தாலே
நிகிலசகத்தை நிஷேதித்தபின்னர்த்
தீதில்சமாதிச் சுகமடைந்துள்ள
திவ்வியபுருடரின் ஞானவிழிக்கி
யாதொன்றுபூரண மாகவிளங்கு
மியாதவத்தைமூன்று மில்லாதிருக்குஞ்
சோதிசதானந்தவத்து விதேக
சுத்தபரப்பிரமம்மதுநானே. (எ)

வத்துதேசகால மூன்றுகளாலும்
வரும்பரிச்சேதமில் லாதவிபுவா
யெத்துவிதகற்பனைக் கதிட்டான
மாகியுமேதும் விகாரமிலாதாய்ச்
சுத்தமாய்ச்சங்க விகீனசிவமாய்ச்
சூக்கப்பிரணவ வேத்தியமியாதா
நித்தநிராகாரவேக வெளியாய்
நின்றபரப்பிரமம்மதுநானே. (அ)

இந்தச்சொரூபானு சந்தானரூப
வின்பத்துதிதனை யாதரவோடு
மெந்தப்புருடனற் பத்தியினேடு
மேகாக்கிரசித் தனுகப்படிப்பா

னெந்தப்புருடனு மந்தப்படியே
யிந்தத்துதிதனை நித்தமுங்கேட்பா
னந்தப்புருட னகண்டப்பிரம
மாகுவனப்படி வேதம்பிரமாணம். (சு0)

சொருபானுசந்தானதுதி முற்றிற்று.

---

## * மனிடாபஞ்சகம்.

---

ஒருதினஞ்சங்கரா சாரியன்காசியி
லுத்தமவீதியிற் சஞ்சரிக்கும்பொழு
தொருவன்சண்டாளவே டந்தரித்தங்ஙனே
யூனமில்லாவிவன் ஞானஞ்சோதிக்கவே
திரிதரும்போதவன் றன்னையங்கன்னவன்
றிட்டியாற்கண்டுநீ யெட்டிப்போபோவெனப்
பாவிடும்வாக்கியங் கேட்டதற்குத்தரம்
பறையனுந்தேவன்றுன்பகர்ந்ததைப்பகருவாம். (க)

அன்னமேயாதியாம் பஞ்சபூதத்தினு
லாக்கியவுன்னுடை யாக்கையைப்பற்றியிவ்
வன்னமேயாதியின் காரியவாக்கையை
யணுகவொண்ணுதென வெட்டிப்போ வென்பதோ

---

* மநிடா - என்றும். மநுடா என்றும் - பாடம்.

பின்னமேதும்மிலாப் போதவான் மாவினைப்
பேணியான்மாவினைப்போவெனச்சொன்னதோ
பன்னிடும்பரமகஞ் சாச்சிரமயெதிகளிற்
பரமனேயிவ்வித மென்றுநீபகருவாய். (௨)

அலையிலாவாரிபோற் சச்சிதானந்தமா
மான்ம வாகாசமே யெங்கணுமசலமா
யெலையறநிற்கவிங் கந்தணன்புலையனென்
றிம்மகாபேதமெக் கலையினுற்கண்டதோ
விமலமாங்கங்கையி னப்பிலும்புலையர்தம்
வீதியினப்பிலும் விம்பமாந்தன்மைபா
லிலகுசொன்னக்குட மட்குடப்புணர்வினு
ளிரவிவானங்களி னேதுபேதஞ்சொலாய். (௩)

சாக்கிரஞ்சொப்பன நித்திரைமூன்றிலுஞ்
சாட்சியாய்ப்பங்கய ஞுதிதம்பாந்தமா
மாக்கைகடன்னிலுங் கோவையாய்ச்சாட்சியா
யச்சித்தியாதொன்று காசமேபோன்றிடுந்
தாக்கறுஞ்சித்ததே நானிந்தத்திரிசியந்
தானலவென்றுர நிச்சயமுள்ளவன்
யோக்கியவந்தண னீசன்ருனுகினு
முத்தவாசானென வென்மனேநிச்சயம். (௪)

எந்தச்சித்துத்தனைத்தேவர்திரியக்கொடு
விந்நாரியாவரு மியானெனவறிவரோ

வந்தச்சித்தொளியினுற் சடமனவிந்திய
வாக்கையெப்புலனுமே சித்தெனவொளிர்வதோ
வந்தமேகத்தினுன் மறைவதாமிரவிபோல்
வளர்காணங்களான் மறையுமச்சித்தினைச்
சந்ததம்பாவித்துச் சுகமுறுமியோகிதான்
சாதியாலாரெனுங் குருவெனுநிச்சயம். (ரு)

பிரமநானென்னுடை மாயைமுக்குணமதாற்
பேதமாஞ்சகபர சிவகற்பிதமதாம்
பரமபூரணசிதா காசநானேயெலாம்
பரமநானெழியவோ ரணுவும்வேறின்றெனப்
பரசுகநிந்தநின் மலநிரஞ்சனபாப்
பிரமநிச்சயவுர முடையனுரோவவ
னருமையாமந்தண னீசன்றுனுகிலு
மகிலவாசானென வென்மனோநிச்சயம். (சு)

குரவன்வாக்காற்சக நசுவாம்பிரமமே
குற்றமினித்திய மென்றுாங்கூர்ந்துபின்
னொருமையாய்நாடொறு மிடையறப்பிரமமே
யுணர்ந்துதானேதனிற் சாந்தமாஞ்சித்தனுய்ப்
புரிந்தமுன்வினையினைப் பௌஷியவினையுடன்
போதமாம்வன்னியிற் றகனமேசெய்துபின்
வருபிராரத்தத்துக் காக்கையையொப்பித்து
வானம்போனிற்பவன் குருவெனநிச்சயம். (எ)

எந்தவின்பக்கட லேசலேசத்தினு
விந்திராதிக ளின்பமுற்றுள்ளவ
ரெந்தவின்பந்தனை யோகிகள்சாந்தமா
மிதயமீதெய்தியே யின்பமேலாகினு
ரந்தவின்பக்கட லுள்ளடங்கும்மனத்
தன்மையோன்பிரமமே பிரமவித்தல்லமற்
றந்தத்தேவேசரும் வந்திக்கும்பாதனு
மன்னவன்குருவென வென்மனேநிச்சயம். (அ)

மனிடாபஞ்சகம் முற்றிற்று.

---

## சோபானபஞ்சகம்.

---

வேதநித்த மோதவேண்டு
மதுவிதித்தகன்மமே
விருப்பமோடு செய்யவேண்டு
மதுகொடீசன்பூசனை
தீதிலாதி யற்றவேண்டுங்
காமியகன்மபுத்தியைத்
தெகிக்கவேண்டும் பாவபுஞ்ச
முதறவேண்டும்பவசுக

மீதநித்த மாதிதோட
மிகவுங்காணவேண்டும்பின்
மெய்யுணர் வனந்தவின்ப
வான்மரூபமடையமெய்க்
காதல்செய்ய வேண்டுந்தன்
மனையைவிட்டுவெளியிலே
கடுகவோட வேண்டுநடன
ராசனருளைவேண்டியே. (க)

சாதுசங்கம் பண்ணவேண்டுஞ்
சாம்பமூர்த்திபத்தியைச்
சலனமின்றிச் செய்யவேண்டுஞ்
சாந்திதாந்தியாதியைக்
கோதிலாமற் பழகவேண்டும்
பின்புகன்மமியாவையுங்
குற்றமென்று நீக்கவேண்டுங்
குணநிறைந்ததேசிகன்
பாதபத்மஞ் சாரவேண்டு
மவன்றனேவற்பணிவிடை
பத்தியோடு பண்ணவேண்டும்
பிரணவாக்கரந்தனை
யாதரத்தோ டடையவேண்டுஞ்
சுருதியீ றின்வாக்கிய

மனைத்துங்கேட்க வேண்டுநடன
ராசனருளைவேண்டியே. (உ)

அந்தவாக்கி யார்த்தமே
விசாரஞ்செய்யவேண்டும்பின்
ஞானாந்த பட்சங்கைப்
பிடிக்கவேண்டும்பின்புநற்
புந்தியாற் குதற்கந்தன்னைத்
தள்ளவேண்டுஞ்சுருதிக்கிப்
பொருந்துதற்க மேவவேண்டும்
பின்புசத்தியஞானவா
னந்தப்பிரம நானேயென்று
நினைக்கவேண்டு நாடொறும்
நவில்கெறுவங் கெடுக்கவேண்டுந்
தேகநானெனும்மதி
சந்தியாதே மாற்றவேண்டு
மறிஞரோடுவாதமுஞ்
சாந்தமாக்க வேண்டுநடன
ராசனருளை வேண்டியே. (௩)

பின்னுஞ்சுத்து ரோகந்தன்னைத்
தீர்க்கவேண்டுநாடொறும்
பிட்சையன்ன வவுடதத்தை
யுண்ணவேண்டுமிட்டமா

மன்னவிச்சை நீக்கவேண்டு
மாரம்பித்தகன்மத்தா
லத்தம்வந்த வன்னமாதி
கொடுமகிழவேண்டும்பின்
மன்னுதாசி னத்துவம்
விரும்பவேண்டும்லோகத்தின்
மருவுநிட்டூ ரந்தயைகள்
மாற்றவேண்டுஞ்சீதமும்
பன்னுதாபமா தியுஞ்
சகிக்கவேண்டும்வீண்சொ லும்
பரிகரிக்க வேண்டுநட்ன
ராசனருளைவேண்டியே. (௪)

சுத்தமானதேசத்திற்
சுகாதனத்திருக்கவேண்டுஞ்
சூக்கவஸ்து வின்மனத்தைச்
சேர்க்கவேண்டும்பின்புந
மத்தனு நடேசன்றந்த
வருளினலகண்டமா
மான்மரூபங் காணவேண்டு
மவற்றினுற்சகத்தைவா
திைத்தாக நோக்கவேண்டுஞ்
சஞ்சிதமனைத்தையுந்

தீர்க்கவேண்டு ஞானவலியி
னாலேபாவிகன்மமோ
டொத்தசங்கம்விடுக்கவேண்டு
மிங்ஙனேபிராரத்த
முண்ணவேண்டும்பின்புபிர்ம
மாயிருக்கவேண்டுமே. (ரு)

சோபானபஞ்சக முற்றிற்று.

---

## தக்ஷிணாமூர்த்திஅட்டகம்

---

சீர்பூத்தமௌனமதா யருமறைமாமுடிக
டிகழ்த்துபரப்பிரமதத்துவனை யணியவ்வனனை
நேர்பூத்தவுயர்சிட விருடிகணப்பிரம
நிட்டர்கள்சூழ்தரநிறைமா மதியினைச்செங்கழுநீர்த்
தார்பூத்தகுருபரனைச் சின்முத்திரைக்கை
தரித்தவனையாநந்த மூர்த்தியைத்தன்மபனை
யேர்பூத்தமுதிதவதனனை யெந்தஞான்று
மெழிலுறுசீர்த்தக்ஷிணா மூர்த்தியையேத்தெடுப்பாம். (க)

உலகமெலாந்தருப்பணத்தே யொளிர்நகரியொப்ப
வொப்பிலொருதன்னகத்தே வொளிர்தருமற்றிதனை

விலகலருநித்திரைபோற் றன்வயின்மாயையினுல்
வெளியினுதித்தொளிசெய்தல் போலுமெவனேக்கி
யலகருநற்பிரபோத சமையத்திற்றனையே
யத்துவிதனுகச்செவ் வறிவனவனை
விலகணிசீர்க்குருமூர்த்தி மயமாயெஞ்ஞான்று
மெண்ணருஞ்சீர்த்தக்ஷிணு மூர்த்தியைப்போற்றிடுவாம். (உ)

வித்தினகத்தங்குரம்போ லிச்செகமெல்லாமுன்
மேயநிருவிகற்பமதா யிருந்ததுபின்மாயா
சத்தியுனுற்றிடுதேய காலகருமங்க
டழுவுறுபன்னிறத்தாற் பற்பலநிறந்தானுயிற்
றித்திரன்மாயாவியென மாயோகியெனவு
மெவனதைத்தன்னிச்சையினுல் விரித்தனனன்னவனு
முத்திதருகுருமூர்த்தி மயமாயெஞ்ஞான்று
முடிவருசீர்த்தக்ஷிணு மூர்த்தியைப்போற்றிடுவாம். (ங)

எவனதொளிசன்மயமா யிருந்துமசத்தால்வந்
தியைபொருளெல்லாமாகி யிலகாநின்றிடுமோ
வெவனொருவனேங்குதத்து வமசியெனும்வேதத்
திருமொழியாற்றனையடைந்தோர் தமையுணர்த்துவானே
வெவனொருவன்றனைநேரே தெரிந்திடின்வன்பவமென்
றியம்புபயோததியின்மீட் டேலுதலின்றுமோ
வவனெனுஞ்சீர்க்குருமூர்த்தி மயமாயெஞ்ஞான்று
மழகியசீர்த்தக்ஷிணு மூர்த்தியைப்போற்றிடுவாம். (ச)

பற்பலவாய்புணரியவோர் குடத்துதரத்திருக்கும்
பனிப்பறுமாதீபவொளி நிகர்ப்பவெவனுடைய
பொற்பமையொள்ளொளிசெயு நற்போதம்விழிமுதலாம்
பொறிவழிப்பாய்ந்தகமுணர்கே னென்றுபுறத்திலகுந்
தற்பரமா யிலகதனை யனுசரித்தேயிந்தச்
சகமனைத்தும் பொலிவுபெற்றுத் தானிகழுமவனு
நற்பயன்செய் குருமூர்த்தி மயமாயெஞ்ஞான்று
நலமுறுசீர்த்தக்ஷிணா மூர்த்தியைப்போற்றிடுவாம். (௫)

தேகமதைப்பிராணனைமற் றிந்திரியங்களைமேற்
றிண்டாடுபுத்தியைச்சூ னியத்தையும்வாதிகடாந்
தோகையர்பாலகர்குருடர் செடரிவற்கொப்பாகத்
தோமிகுமான்மிகுத்தவராய் நானெனக்கண்ணுறுவ
ரோகைதவிர்மாயாசத் தியினதுவிலாசத்
துண்டாமாவியாமோக மொழிக்குமவனான
சோகமில்சீர்க்குருமூர்த்தி மயமாயெஞ்ஞான்றுஞ்
சொலித்திடுசீர்த்தக்ஷிணா மூர்த்தியைப்போற்றிடுவாம். (௬)

இருண்மிகுதிண்ணிராகுகவ ரிரவிமதியெனவே
யெவனொருவனுண்மைமாத் திரமாகியிருந்து
மருண்மிகுவன்மாயைபொதிந் திடுதலிற்பூமானாய்
வளர்காணவொடுக்கத்தாற் சுழுத்தியினையண்மித்
தெருண்மிகுநற்பிரபோத சமையத்தின்முன்னர்ச்
செய்யசுகத்துறங்கினனென் றெட்டியுணர்ந்திடுவா

னருண்மிகுமக்குருமூர்த்தி மயமாயெஞ்ஞான்று
மகிழ்தருசீர்த்தக்ஷிணா மூர்த்தியைப்போற்றிடுவாம். (எ)

வாலிபமேமுதலியவுஞ் சாக்கிரமாதியவும்
வரன்முறையேயேனையவெல் லாவவத்தைகளுமே
கோலிவளர்ந்துறுபொழுதுந் தொடர்வுற்றுநின்றே
குறிக்குமகந்தகமகமென் றனவரதங்குலவி
மேவிலகுசொச்சொருபந் தனையிறைஞ்சுவோர்க்கே
மிளிர்தருசின்முத்திரையால் விளக்குவிப்பானான
வாலியசீர்க்குருமூர்த்தி மயமாயெஞ்ஞான்று
மண்ணியசீர்த்தக்ஷிணா மூர்த்தியைப்போற்றிடுவாம். (அ)

உலகமெலாங்காரியகா ரணவுருவமாயு
முறப்பணிசெய்பவர்சாமி யொற்றுமைதானாயுங்
குலவுறுமாணாக்கதே சிகநீர்மையாயுங்
குணமுறுதாய்தந்தைமக வாதியபேதமுமா
யிலகுறச்சொப்பனத்துஞ்சாக் கிரத்துமாயையினா
லேறமருண்டுணர்தருமிப் புருடனெவனவனா
நலனிறைசீர்க்குருமூர்த்தி மயமாயெஞ்ஞான்று
நவமுறுசீர்த்தக்ஷிணா மூர்த்தியைப்போற்றிடுவாம். (கூ)

பூமிபயசங்கார கன்கந்தவாகன்
புட்காமாயிரஞ்சோதி மதியமியமான
னாமியெனநிகழுமிந்தச் சராசரமாம்வடிவ
நளிபெருகுமெவனுடை யெண்வகைமூர்த்தமயமே

யாமினிதாய்ந்தோர்க்குவிபு வாய்ப்பரமாமெவனி
னன்னியமாயெவ்வளவு மில்லையவனென
தூமிகுசீர்க்குருமூர்த்தி மயமாயெஞ்ஞான்றுந்
துலங்குறுசீர்த்தக்ஷிணா மூர்த்தியைப்போற்றிடுவாம். (க0)

ஏதனுவிந்தோத்திரத்தி லிவ்வுலகமெல்லா
மெல்லாமாமான்மமய மெனநிகழ்த்தப்பட்ட
ததனுவிந்தோத்திரத்தின் சிரவணத்தாலதன
தருத்தமனனத்தா னற்றியானமதனனு
மிதனுகப்பாடலினு நீடும்விபூதியினே
டெல்லாமாமான்மமய மாகுதல்வந்தெய்து
நிதனுந்தேவாதலுமே லெண்விதமாயெழுந்து
நிலைபெறுமைசொரியமதூஞ் சித்திக்குந்தானே. (கக)

என்றுபயன்புகலுதலா னுத்தமவித்துதியை
யெவ்வாற்றுஞ்சவணுதி தொடர்ந்துஞற்றுவதுவே
துன்றுநலமெனத்தேறிச் செந்தமிழாற்புனையத்
தொடங்குமெனதிதயகம லத்திலெழுந்தருளி
நின்றுசுவைதமயமாகி நாவழியூற்றெடுத்து
நிலைபெறுமிவ்வேட்டினையுந் தன்மயமாக்கியது
நன்றுதிகழ்கோயிலூர்ச் சோதிலிங்கசொருப
நாமமருவியமுத்தி ராமலிங்கக்கனியே. (கஉ)

தக்ஷிணாமூர்த்தியட்டக முற்றிற்று.

---

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# அத்துவிதரசமஞ்சரி.

---

சீராருமத்துவித மேயுண்மையென்றுமிகத்தெருட்டுதற்குப், பாராருங்கயவுருவ நாவுருவம்புணர்வடிவம்பரிந்துசாத்தி, யோரும்வரமொருங்குநல்கும்விக்னேச னெனதிதயத்தின்பா, னோராருமத்துவிதந் தனையறியும்விசேடமெலாநிகழ்த்துவானே. (௧)

எத்திசையும்பத்திபாய்ந் திலங்குறுமுள்வாயில்புணரெழிற்கண்ணுடிப், பித்திமனைதனைமருவு பாலனுக்குவெளிவருதல்பெருவன்பாம்போற், குத்திரக்கற்பனைமயமாய்மிகப்பொலிபல்வகையுருவங் கொண்டுவேறு, மத்திரவஞ்ஞானமதைதமருவுபுருடனுக்குமுத்தி யடைதல்வன்பே. (௨)

சோரர்களாற்கொடியவா ரணியவழியினையண்மித் துயர்கூர்பூமா, னீரகஞ்சேர்தன்னூரை நன்குதெரிந்தோன்மொழியானேருமாறு, சீரடர்நற்சாந்திமுதற்சாதனங்கணிறைந்துமிகச்சிறந்தபூமா, னோரறிசற்குருநாதன்மொழியாற்றற்பதநிலையைநேருவானே. (௩)

நிருபனுடைக்குமரனுக்குத் தனதானதத்துவத்தை நிகழ்த்தலாலே, வருகயவநீர்மைகழ லக்கழன்றுநிருபனியல் வாய்க்குமாபோற், சொருபசுகவொருபொருணீயெனச்சொல்கு

ருவுபநிடதச் சொற்களாலே, மருவுகருத்துருத்துவமாய்ந் தொருசுகமெய்ப் பொருணேரே வாய்க்குமன்றே. (ச)

திரமலடிமைந்தனுக்குத் தேகமுதலாங்குணங்கள் செறிதருனும், புரையறுமக்குணங்களெலாம்பொன்றுதலும் வெட்டவெறும் பொய்யாமென்னப், பிரமமயக்கூடத்த நித்தசுகபோததனுப்பிரத்தியக்குக், குரமருவுபந்தமுத்தியென்பதும் புன்மயக்கத்தாலொளிராநிற்கும். (ரு)

தெரிகின்றதுறைதிமிரம் பேயாகவச்சமிகச் செறிந்தோனுக்கே, யெரிகின்றவிளக்கொளியாற் கண்ணுற்றாலாங்கது தானியங்குங்கொல்லோ, திரிகின்றவவிசார. திட்டியினலுண்டெனச்சொல்செகங்களெல்லாம், புரிகின்றவுண்மைவிசாரத்தினர்க்குக்கிஞ்சிலுமே பூணாதன்றே. (சு)

போற்றுமொருசிற்சோதிதானேயிவ்வுலகுருவாய்ப்பொலியாநிற்குந், தேற்றமுறவாராயின்வேறுபொருளொன்றேனுஞ் செறிவதில்லைத், தோற்றுமயற்கதிகரண மாம்பழுதையல்லாதுதுன்றுசர்ப்பஞ், சாற்றுறுவேறொருபொருடானுகுதற்கெவ்வாற்றானுந் தக்கதாமே. (எ)

திறப்படவீதெனத்தோன்று ஞாலமெலாம்பிரமைமாத் திரமேயென்று, முறப்பொலிந்தன்னியமின்றிச்சுகமயமாமான்மாவே யுண்மையாகுஞ், சிறப்புறநின்றொளிருதலால் ஞாலம

துமுண்மையெனத் தெரிகேனென்று, லறப்புதுமைசுத்தியிர சிதத்தாற்றன்னிய னெவன்றுனுகானேகோ. (௯)

சொல்லுநினைவுறுபோதுமற்றதெழுமுன்னுமது தொலைந்தபோது, மில்லதுதானென்றலு மிவ்வுலகமிலங்குகின்ற திறம்பூதாமே, யல்லததிசயமென்னே போலுமகேந்திரசாலமானதிங்குப், புல்லுறுமாயாவியினுற்கற்பிதமென்றலுமிகப் பொலியுமன்றே. (கூ)

இந்தநினைந்துவிதமகன் றிரிந்திடினும்புருடனுக்கிங் கிசைதற்கண்ணில், வந்துறையுந்தீமையினுற் பலவடிவந்தானுகி வயங்கலேய்ப்ப, நந்தவில்சன்மயப்பூமா வெனுஞ்சொருபமொன்றேனு நாநாவாகிக், சந்ததத்தற்கற்பிதமாந்தமப் படலக்கூட்டுரவாற்றயங்குமன்றே. (க0)

மட்டற்றவெறும்பிரமை யால்விரிந்துதிரநாளு மருவாதான, கட்டப்புன்புவனவட்டங்கொள்ளிவட்டந்தனையுறழக் காணல்வேண்டு, முட்டற்றதெய்வகதி யாற்பிரமைநட்டமெழுன் முந்துமானுற், றுட்டத்திண்புவனமதுமுன்னுட்போற் பின்னுளுந் தோன்றுதன்றே. (கக)

நிலைமையிலாயிவ்வுலகங் கந்தர்ப்பநகரம்போ னிகரற்றேங்குந், தலைமைசெறிஞானமெனும் பெயர்பூண்டவம்பரத்திற் சாலத்தோன்று, முலைவகலவெமக்கான்ம வுணர்வுதிக்கி

ன்வெயிலெறித்தா லொழியுமின்போன், மலைவுசெயுமந்தவிந் தவுலகமெலாமக்கணத்தின்மறைந்துபோமே. (கஉ)

ஆரோபமானசக்த் தடங்கவடைவினிலொடுக்கு மருந்தி றத்தாற், சீராருநமதுசித்தஞ் சிவமயமேயாகிநனி சேடமா கும், பேராருமத்தகயம் பார்ச்செற்றுப்படுகுழியிற்புணரா தென்று, னோரதுமில்லாமற் கேவலந்தானென்றேயாய்நிக ழுமன்றே. (கங)

இம்பருடலின்றொழிக வலதுறைகசசியருக்கனிருக்கும ட்டும், விம்பமயச்சித்துருவமாய்விளங்குமெனக்கதனால்விசே டமென்னே, கும்பமிப்போதுடைகவன்றிச்சிரகாலநிலைபெ றுககும்பம்பம்பு, மம்பரத்தினுக்கணுமாத் திரமேனும்விசேட மென்பதனுகுறுதே. (கச)

தங்குறுசிந்தனையினழுத் தத்தினாற்றோற்றுகின்றதை யற்கண்டிவ், வங்கனைமற்றவளென்றே நீணாள்வெய்துயிர்த்தி ரங்கு மவனைப்போலுஞ், சங்கற்பமாத்திரத்தாற் பலவிகற்ப மாய்த்தோற்றுஞ் சகங்களெல்லா, மிங்குச்சத்தியமென்றேம ந்தமதியினன்வாளாவேறமாலும். (கரு)

தன்னியல்பிற்றற்சுவையாய்ச் சச்சிதானந்தமாய்த்தயங் குமென்பாற், றன்னியமாமோகத்தா லுண்டெனச்சொற்றி டுமிந்தத் தொன்மைஞால, மன்னியவோரிடத்தினுங்காணப்

படாதருவுருவேவடிவமாகு, மன்னியவிண்ணேவியமேபோ
லுமெனவையமறமதித்துமியாமே. (கசு)

வானிறம்போற்றிகழத்தி யாசபேதத்தினுன்மறைபட்
டாலு, ஞானகனமானபொருள் கண்டவொருதற்சுவையை
நனிநீங்காதா, லூனமுறுபற்பலசாராசரவிசித்திரத்தோடொ
ன்றினுலுந், தானமரும்படிவியல்பைச் சித்திரவத்திரமென்
றுந்தணந்திடாதே. (கஎ)

சத்தியசிற்சுககனமாயகண்டிதமாய்த் தெளிபொருளாய்
த்தானுமான்ம, தத்துவவத்துவையொருவனென்றேமிகத்
தெளிவன் றடையொன்றின்றிப், பொத்துடலிந்தியமுதலி
யவற்றைமயல்வாதனைகள் பூண்டுநிற்கு, மத்தமதியினனென்
னதியானென்றேசங்கையறமதித்தன்மானும். (கஅ)

செங்கதிரோன்வெங்கதிரா லெதிர்நிகழும்பேய்த்தே
ரைத் திரத்தீர்ந்து, கங்கையினற்குளிர்புனலைப் புனிதமுறும
திமான்கள் கைக்கொண்டாங்கு, மங்குலகைவெறும்பொய்
பசையிலதெனத்தூரத்தகற்றிமாதீரத்தாற், பொங்கினியவொ
ருசுவையை முனிவர்களநுபவிப்பர் பொலியுள்ளத்தே. ()

ஒன்றுகுமண்ணியதா மிகவெளிதாமிணைத்தாகுமொப்பி
லாத, நன்றானவம்பரத்தி னனிதோன்றுஞாலமெலாநகுவித்
தெங்குந், தன்றேசாற்பரவுமெழிலாத்துமதத்துவவிரவிதன்

னையையோ, வன்றீயழுடவுலகுளுகநிரை யாதரித்துமதியா வன்றே. (உ०)

மன்னியவானந்தவொளி வடிவமதாய்நிகழினுமிம்மாஞா லத்தை, யன்னியமாமெனப்பாவித் தறிவில்லான்பெருந்தாப மடைவன்சீசீ, மின்னியதீபாதிகளிற் றிருசியமாய்மிளிர்தருந் தன் மேனிச்சாயை, தன்னினைவேறென்றெண்ணி மாமோகத் தினின்மூழ்குந் தனிச்சேயொத்தே. (உக)

மடமானமாயைதனதுருவமிலாவான்முதலாம்வகைகளா லே, தடமானவசங்கவொரு சின்மயனைபேதிக்கத்தக்கதன் றுந், திடமானமழைத்தாரைதன்னுடையதுளிகளின்மென்றி ரள்களாலே, யிடமானபசும்பதுமபத்திரத்தைநனைப்பவுரித் தென்கொலாமே. (உஉ)

தோற்றரவுமாத்திரமிங் குருவானசகவிகற்பத்தொகுதி யெல்லா, மூற்றமுறுசங்கமெலாமொருவியசின்மயவென்னை யொட்டாதன்றே, மாற்றருமாரோபிதமா மவிஞுதிவிசித்தி ரதன் மங்களெல்லாந்,தேற்றமிகுநிருமலமாய் வெளியுருவாம் வியோமத்தைத் தீண்டுங்கொல்லோ. (உரு)

பரிபுரணமாகிநிறைந்திருக்கு மொருகரியானபரமாமெ ன்பால், விரிவுறுசாக்கிரத்தினெடு சொப்பனமேசுழுத்தியெ னவிளம்பப்பட்ட, திரிவிதமாமவத்தைகளுநாடோறும் பிற

ப்பிறப்புச் செறிந்தவாகி, வரியமருமுரகபதிவபுவினிற்கஞ்சு கங்கள்போல் வயங்குமன்றே. (உச)

சொப்பனமேசாக்கிரமேயெனப்புகலும்விசேடமிதுசொலால்வந்தன்று, துப்புறுமாயா மயமாகுத லந்தவிரண்டினுக்குந்துலியமேயா, மப்படியேபிரத்தியக்கு பராக்கென்னும்விகற்பமுநாமத்தலான,தெப்பொழுதுமெய்ஞ்ஞானசுகமேயிவ்விரண்டினுக்கு மியல்பதாமே. (உரு)

புறப்பொருளின்வருவிசனசம்பந்தத்தாலிளைப்புப்பொருந்துறுதாய்ப், பறப்பறவிந்தியவழிச்செல் லாதடங்கிச்சகவிகற்பப்பற்றொன்றின்றிச், சிறப்பமர்தன்னுநந்தமாத்திரமாய்த்தனித்திருக்குஞ்சித்தம்பெற்றோ, ருறப்படுசாக்கிரத்தினுநற் சுழுத்தியநுபவத்தினிலைத் துவகைகூர்வார். (உசு)

காயமுயல்வுறுதருமக் கட்டுற்றோரென்னைமிகக் கருத்தனென்றே. யேயநினைக்கின்றனரே லதனுலென்னிருந்தபடியிருக்கின்றேனுற், றோயவருமேகமதிற் புக்கானென்றறமூடர் துணியப்பட்ட, தூயகுளிர்மதியமவ்வா றம்புதத்தினணித்தேனுந் தோயுங்கொல்லோ. (உஎ)

மித்தையதாய்த்தோன்றுறுமேற் றோன்றுறுகவிவ்வுலகவிசித்திரந்தா, னத்துணையாற்றத்துவவித் தாகிநிகழெனக்குவரு மானியேதோ, சித்தமயக்காங்கனவிற் பயந்தருகைப்பக

டாதிதிகழுமேனு, மொத்தவிதுசொப்பனமே யென்றனுசந் திப்பவனுக் குறுமோபீதி. (உஅ)

அனைத்துலகுமசத்தென்றே நெடுங்காலநன்றுக வாய்ந் தோர்ந்தோனுந், தினைத்தெனினும்பிரியாதத்தியாத்துமதிட் டியைச்சத்தஞ் செறிந்தேநிற்பா, னுனத்தகுமிங்கானனந்தா னெக்காலுமில்லையென வொருட்பட்டோனு, மனித்திகழ்தன் முகங்காண விரைந்தத்தங்கைக்கொள்ளன் மானுமன்றே. ()

பொருத்தமுறுமாதாவாற் கவளங்கவளந்தோறும் புல னுற்றலும், பெருத்ததுயிலாற்சிசுதான் வேறென்றுந்தெரி யாத பெற்றிபோலப், பருத்தவிழியதனுவிவ் வுலகெனுமிந் திரசாலம் பார்த்திட்டாலுந், திருத்தமுறுமகத்தோரொள் ளொளியாலேயாதொன்றுந் தெரிகிலேனே. (கூ0)

திருசியந்தான்புடமாகத் திகழுமெனிற்பூமவுருத் திக ழாதாகு, மிருமையறுபூமவுருவிலங்குமெனிற் றிருசியமற்றி லங்காதாமே, மருவலுறுமறுதீவுதெரியுமெனி னிப்பூமிமறை ந்துபொகுந், தெரிவுறுமேலிப்பூமிமறைந்து போமவ்வாறத் தீவுதானே. (கூக)

சந்திரன்றன்கலையென்பதனுதினமும்பெருகுதலைச் சார் ந்ததாகின், மைந்துறுபேரிருளான தடைவாகநாசமுறுமாபு போலச், சுந்தரநற்பிரபோதம் பயப்பய்யமிகவளர்ந்து தன்

னுமென்றால், வெந்துயர்செய்விப்பிரமை நுகடீரவிருதயத்தி ல்வீய்ந்துபோமே. (௯௨)

பிரமவநுபூதிதருமொருசுவையானிறைவுபெறுபெரியோ ர்தம்பாற், கருமவநுபந்தத்தால்வருவிதிகளெல்லாமுங்கழன் றுபோமே, வரமருள்சித்தர்கடெரிவித்திடு மிரசாயனமருந்தி மகிழ்வார்ந்தோர்பாற், றரமுறுபாகத்தால்வந்துறுமருந்தின் விதிகளெலாந் தங்குங்கொல்லோ. (௯௩)

சகலவடிவமுந்தானாய்த்திகழுமுனிவரனுமொருசமாதித ன்னை, யகிலமதினட்கழிப்பான் முன்போலன்புற்றுமிகவாத ரிப்பா, னிகிலவளப்பமுநிறைந்த பூபாலனொருவன்றனேரம் போக்க, வகைவகையாஞ்சதுரங்கந் தனைநேயம்வைத்துமிக வளர்ப்பனன்றே. (௯௪)

விதிகளெலாஞ்செய்யாமல்விடுத்தோனையான்மாவைமிகத் தேர்ந்தோனைப், பொதுவெனுமாமறைபுகலு நிடேதமெ லாமாநந்தம் பொருத்துவிக்குந், திரமருவுகருமமாத்திரநோ க்காச்சோம்பனுக்குச் செய்கையாதுங், கதுவுறவேண்டாவெ ன்று புகல்வோன்றன்மொழிகண்மனோ கரங்களாமே. (௯௫)

தத்துவத்தையனவரதமனுசந்தித் திடுமுனியாஞ் சார்வ பௌம, னுத்தபடிநிற்பினு மெல்லாஞ் செயினுந்தானேவ வொண்ணுனமா, வித்தரையெல்லாங்கைக்கொண் டாசாண்டு

வேண்டியவா றிருக்கும்வேந்த, னத்துறுமன்னுயிர்களா லே வல்கொளற்கெக்கா லு மரியனுமே. (ரு௬)

பரமார்த்தநோக்கமுடை யவனுக்குமுன்னொடுபின்பண் ணப்பட்ட, தருமாதன்மத்தொழில்களாற் சம்பத்தேவிபத்தே சற்றுமின்றாம், பெருமேகம்பொழிதருநீர் முழுக்காலும்வெப் பமிகப் பெறுதலாலு, மெரிமேவுபாலைவனத்தின்புயிருக் கே ற்றமுடனிழிவுமின்றே. (ருஎ)

ஒல்லைவினையாலுண்டாஞ் சம்பத்தேயாதல்லதொழிந்த தாதல், வல்லையநுபவித்தோனுய்ப்புருடன்மிகு திருத்தியினை மருவுவானு, லல்லல்செயும்பாம்பாட்டி தன்வயத்திலகப்ப ட்டவரும்புயங்கம், புல்லியவனியற்றுதண்ட விதிகளைநீங்குற ச்சமர்த்துப் பொருந்துங்கொல்லோ. (ருஅ)

ஆன்மவறிவுடையவன்முற்கருமபரிபாகவசமடைந்தோ னேனுந், தான்மருவுமதன்பரம வவதியிதாமெனத்தேறித் த ளர்வுநண்ணுன், கான்மருவுவழிச்செல்வோன்கால்வருத்தமெ ய்துகினுங் கிராமாந்தத்தின், மேன்மருவுவழியளவைத் தெ ளிந்துவருந்திடைவிசன மேவானன்றே. (ருசூ)

அகம்புறமும்பரமான்மா வொருவனேயாமெனநன்கறிந் தஞானி, மிகுந்தவிசனமதுறினுமோர்சிறிதுங்கிலேசமே மே வானன்றே, செகங்கலங்குபோர்முகத்தே விசயமுறவொரு

நோக்காந் தீரனுனே, னுகம்பரவுமொட்டலரால் வருந்துறி னுங்கிலேசமற்ப முறுவதுண்டோ. (சo)

ஞாலமதிலுறுவிபவ நனிபரமவற்புதமாய் நண்ணுமே னுஞ், சாலவதனதுவாய்மை தனையறிந்தமாதீரன் றனைமயக் கா, கோலமடவரல்வேடங் குரம்பையின்மேலலங்கரித்துக் கொள்ளாநின்றேன், கேலவினத்தாற்றனைத்தேர் விடலையை யாயினு மயக்கக்கிட்டானீடே. (சக)

அகத்தினிரந்தரமேலாயிலங்குகின்ற வான்மவடிவாய்நி ற்போனே, யிகப்பொருள்கடமினுளு முன்போலவிசனமே யியைவதில்லை, யிகழ்ச்சியறத்தெய்வகதியானிதியோரிடத்து ற்றுவிலம்பாடுள்ளோ, னுகத்தினின்முன்போலெளியனென க்கருதிப்புகன்றலைவ துண்டாங்கொல்லோ. (சஉ)

பெரியவிழிமருவுறுதன் மகிமைசெறிபெரியோனைப் பெ ருஞானத்துக், குரியசுபகுணங்களலங்கரிப்பனபோலுஞ்சுய ம்வந்தொன்றுநிற்கு, மரையனவன்றன்வயனுய்ச்சுகிர்தனுயி ருக்கினவற்காளானேரும், புரையறுமவ்வரையனையே தானே வந்தொன்றிமிகப் பொலிவரன்றே. (சங)

அஞ்ஞானமேயில்லை யிவ்வுலகமுளதாமென்றறைவதெ ங்கே, விஞ்ஞானவடிவாஞ்சீவேசதேசிகரெனச்சொல்விகற்ப ஞ்சேய்த்தா, மெஞ்ஞானவொருசுவையாய்த் தனித்துநிருமல

மாகி விளங்குந்தானு, மெஞ்ஞான்றும்பரிபுரண கேவலமாம் பிரமமேயானுகின்றேன். (சுச)

சமாதியவத்தையிலுதித் தொற்றைக்கொம்ப னுபசேதஞ் சாற்றலாலு, மமானமயப்பரமசிவேந்திர னெனுந்தேசிக வரியானலுஞ்ஞையாலுஞ், சுமாவிருக்கச்சதாசிவமாதவனே திவ்வத்துவிதச்சுவைப்பூங்கொத்தே, யெமாலுடைக்குமகமுகமா மறிவுடையோராதரத்தா லெய்தற்பாற்றும். (சரு)

சுத்தசதாசிவயோகி வரியானேதியவிந்தத் தூயநன்னூல், புத்திநலமுடையோர்க்குற் பவநோய்க்கோரவுடதமாய்ப் புகலலாகுங், கொத்துறுபாதகங்களுக்குக் கடுவாகுமுபநிடதக்குறிப்பாமேலா, முத்தமமாமாநந்த வமுதநிறைகுடமாமென்றுரைப்பர்மேலோர். (சசா)

துய்யசதாசிவப்பிரம மெனுமுனிவன்வடமொழியாற் சொல்லப்பட்ட, செய்யவத்துவிதரசமஞ்சரிநூலேச்செந்தமிழ்ப்பாச் செய்துதந்தான், வையமிசைப்பொலிகழனிமாநகர்வாழ்சோதிலிங்க வடிவமான, வையன்முத்திராமலிங்ககுருபரனென்னகம்வாக்கு மமைந்துநின்றே. (சஎ)

அத்துவிதரசமஞ்சரி முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சர்வஞ்சின்மயம்.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# அத்துவிதாநுபவம்.

## பாயிரம்.

அருளியசின்மூர்த்தியேமுத்தொழிற்குமும்மூர்த்தியாய் விண்மீதில், கருமைதோற்றுவதென்விச்சராசரங்க ளதனிடத் திற்காண்பதென்னும், குருவருளாலியாமறிவிலாதவர்க்குமெ ய்யறிவு கொள்ளவேதப், பொருணிறையுமத்துவிதவநுபவ நூற் றிருபதும்யாம் புகலுவாமே. (க)

பிரமசுகக்கடல்மேய்ந்து மனோமேகஞானமழை பெய்த தாலே, கரைகடந்த வாக்கென்னுங்கங்கையினிலுபதேசக்கா ர்காலத்தில், திரமனதாய்க்குளிர்த்தவருக் கஞ்ஞானக் கரும மெனும் பிறவிதீர, வாமுதவுஜெயலக்ஷ்மிநாரசிங்கதேசிகன் ருள் வழுத்துவாமே. (உ)

ஞானவடிவானதுவே படிகநிறச்சிவவுருவாய்நாமரூபம், தானலர்ந்து நீலமணி சாமவுருவாயறிவு தந்துபின்னு, மான முடனிருவர்தாமொன்றென்றே யெமக்கறிவு வரவேசிந்தை, ஆனதிலேசிவாராம குருவாய்வந் தருளியதேயருமையாமே.()

பாயிரமுற்றிற்று.

## முதலாவது அதிகாரலக்ஷணம்.

நூல்.

பத்தியுட னிப்பிறப்பின் முற்பிறப்பிலாகிலுமேபலன் வேண்டாமல், நித்தியநைமித்தியமே முதலானகருமங்க ணிறையச் செய்தால், ஒத்திருந்தசித்தசுத்தியுண்டாம் பின்னுபாசனையாலொருமையுண்டாம், முத்திதரும் விசாரணையாற்பின் சீவன்பிரமமாய் முடியுந்தானே. (க)

கருமமெனுங் கொப்பமுறுமனமதயானையைச் சுருதிக்கயிற்றேடீர்த்துத், தருமனனதியானமெனுநிகளத்தாற் சிரமிதையத் தலத்திற்கட்டி, வருமறிவாமாவலவன் பழகியபின்பிரபஞ்சவனஞ் சேர்ந்தாலும், ஒருநிலையி னின்றூலுந்தனையறிந்த பின்புமத முண்டாகாதே. (உ)

வேதவசனமு மாசான்வசனமும்பிரமாணமென்று விசுவாசித்தே, ஆதாவாயதில்யுத்திசெய்துநான் மெய்ப்பொருளென் றநுபவித்தாற், பேதமுடனுன்சீவனெனுமவித்தை நசிக்குமதின் பின்புள்ளத்திற், சீதளமாய்த்தாபம்போய்ச்சி வீசர்க்கயிக்கநன்றாய்த் தெரியுந்தானே. (ங)

நீரிலிட்ட துவாரமில்லா மட்கடத்தி னுள்ளேநீர் நிறைந்திருக்குஞ், சீரிதுபோல்நூல்கள்கற்று மநுபவத்தைக்காட்டும் யுத்திதெரியாதார்க்குப், பாரிலடிக் கடிசிர வணுதிகள்செய்தாற்பி னனுபவமுண்டாகும், வேறிடுஞ்சாதனத்துடனேகற்றவர்க்கெல்லாங்கைமேல்விளையுந்தானே. (ச)

நித்தியாநித்தியவிவேகத்தா லநித்தியத்தினிராசைசாந்தி, பத்தியால் வருமொழிவு பொறுமைவிசுவாசமுத்திபலத்தினிச்சை, புத்தியால்விசாரணைபின் மனனநிதித்தியாசனம்பின்பூர்ணஞான, சித்தியாலஞ்ஞான நசித்ததன்பின் பிரமமாய்ச்சிறக்கலாமே. (ரு)

புத்தாவதாரத்திற்றேகமான் மாவெனமால்புகலப்புத்தி, வித்தாரமில்லார் சாகாசந்திரநியாயமென்னுர் மெய்யதென்பார், பத்தாவான்றனையெண்ணிச் சொல்வதுபோலுத்தியநுபவத்தாலாசான், உத்தாரச்சுருதியினு லபரோட்சஞானமேனுதியாதன்றே. (சு)

தருங்கடத்தை யிதுகடமா மென்றுசொன்னுற் கடத்தறிவுதான்வாராதோ, வரும்பிரபலச்சுருதியே பிரமாணமென்பார்க்கச் சுருதிவாக்கியந்தான், திருந்தியநா னெனுமறிவின் மெய்யறிவே பிரமமென்றுதெரியச்சொன்னல், விரும்புகின்றவபரோட்ச ஞானம்வாராதுண்டோ வேண்டும்போதே. (எ)

சுத்தமாங்கண்ணுடியின் முகநன்குய்த்தோற்றுந் தன்மைபோலே, சித்தசுத்தியுண்டானுற்சீவனேபிரமமென்னுந் தெளிவுண்டாமுன், வைத்தமனக் களங்கத்தான் மலப்பிரதிவிம்பமெனமயங்குஞ்சீவன், வித்தையுபாசனைகருமத்தான்மனத்தையாதலால்விளக்குவீரே. (அ)

விபரீதபாவனைபோ மென்றுதியானிக்குமனம்விடயந்தோறுஞ், செபமாலைபோற்சுழலுஞ் சகசகுணமிதைவிடுத்தல் செய்யப்போமோ, உபதேசப்பொருள்மனனஞ் செய்தாற்பிரபஞ்சம்பொய்யாயொடுங்குமப்பால், அபரோட்சப்பிரமமாத்திரத்திலொன்றாய் மனதுசுத்தமாகுந்தானே. (கூ)

சகமுழுது மொருவனுக்கேயஞ்ஞானதிசையிற்சத்தாய்ச்சிறந்திருக்கும், புகழ்முமூக்ஷுத்திசையிற் சத்துமல்லாதசத்துமல்லாப்பொருளாய்நிற்கும், சுகநினைவாமோட்சதிசையினிற் சத்தாயிப்படித்தான்றோன்றிற்றென்றால், பகைதகையாநிசமறிந்துகல்லாதார்க்குத்தரமெப்படிச்சொல்வோமே. (க0)

முதலாவது - அதிகாரலக்ஷணம் முற்றிற்று.

---

## உ - வது, அத்தியாரோப அபவாதலக்ஷணம்.

தாங்கிய சத்துவமிராசதந் தமோகுணமூன்றுஞ் சமமாகும்போ, தோங்கியது பிரளயமாமதுமாயை பின்புசெகத்துதிக்குங்காலம், தூங்கிவெளியனில மனல்சலம்பாருண்டாய்ப்பின் பார்தொட் டொவ்வொன்றுக், காங்கதுவேபத்துமடங்கதிகமெனக்கடைமுதலாய் லயமுண்டாமே. (க)

ககனமுதற்பூதமைந்தின்றமொகுணத்தாற்பூதபஞ்சீகரணமாகும், மிகவும்ரசோகுணஞ்சமட்டிபிராணனைந்தும்வாக்குமுதல்வியட்டியாலாம்,சுகசாத்துவிதசமட்டியாலந்தக்கரணமுதற் சுரோத்திராதி, வகைவியட்டியாலாம்பின்னதினதினங்கிசத்திலயம்வருவதாமே. (உ)

பூதமைந்தின்றமோகுணங்களிரண்டு பங்குபண்ணியொன்றைப் புறத்தில்வைத்துப், பாதிமற்றதொவ்வொன்றைநான்குசெய்து தத்தமங்கசப்பாதிவிட்டே, காதல்மற்றப் பாதிநான்கிலுமொன்ருய்ச் சேர்க்கப்பஞ்சீகரணமாந்தீ,ராததொருபூதமற்றைநாலினங்சத்தரைதனங்சத்தரையோடொன்றே.

தூலவுடற்பூதபஞ்சீகரணத்தால் மனம்புத்திதொடும்பிராணன், காலதைந்திந்திரியம்பத்துஞ்சூட்சவுடலிதுபஞ்சீகரணத்தாலே, சாலவொன்றுமறியேனுனெனுமவித்தைகாரணமாஞ்சரீரமெய்போல், ஏலவுபாதிகள்வியட்டி சமட்டிகளாற்சீவிசர்க்கிருமூன்றுமே. (௪)

மாயையிற் சித்தீசன் பஞ்சீகாணசூட்சும சமட்டிவளருந்தேகம், தோயுஞ்சித்துச் சூத்திரான்மாவாகியே தூலஜெகத்தினில் விராட்டாய்ச், சாயுமவித்தையிற்பிராஞ்ஞனெனச்சூட்சவுடலினிற்றைசதனுய்த்தூல, மேயுமெய்யில்விசுவனெனவியட்டி சமட்டிகளிலறுவிதஞ்சித்தாமே. (ரு)

பிரமமா நிர்க்குணத்தால்மாயையினு லீசனும்பெறுமவித்தைக், கரையுளமர்ந்தாற் சீவனுமறிவானுமந்தக்காணந்தோய்ந்தால், விரவுமறிவாம்விர்த்தியாலறியதக்கதாம் விடயஞ்சேர்ந்தால், பாவறியபட்டதாம் பலமொருசித்தேழுளிதம்பகர்ந்ததாமே. (சா)

திரியினிலேற்றியவிளக்குப்போலந்தக்காணத்திற்சீவனுகி,விரியுமந்தப்பிரபைபோற்றேகமெலாஞ்சிதாபாசவிளக்கமாகிப், பிரியுமந்தக்காணத்தின் வளர்த்தியுநாசமுந்தானேபெற்றதைப்போல், துரியபாப்பிரமமொன்றேயுபாதிகளாற்பலபலவாய்த்தோன்றுந்தானே. (எ)

ஆனந்தநிர்க்குணத்தைச்சகுணமல்லா லறியவொண்ணுதந்நீர்வெண்மை, தானந்தநன்னீரிற்கருநிறமல்லாலறிவுதருவதுண்டோ,நானந்தப்பிரமமென்றேபிரவஞ்சவாசனையைநம்பப்போமோ, எனிந்தபாடென்ருல் மெய்ப்பொரு ளப்படியிருந்தாலென்செய்வோமே. (அ)

செய்யக்கூடாத்தொழிற்செய்யுமாயை யவ்வவ்வேளைதான்செகமுதிக்கில், லய்ப்படவுஞ்சீவிசபேதமுஞ்சித்தேறியதார்க்காய்ச் செய்யும், வியப்புடனேபுருட னேறியரதம்போலம்மாயை வெறும்பொய்யென்று, மயக்கமறத்தெளிந்ததின்பின் சின்மாத்திரமிச்சமாய்மலருந்தானே. (கூ)

செறிவாச்சி முதலான காணத்தாற் றச்சர்தொழில் செய்வதேபோல், அறிவுருவேமனமுதலாங்காணத்தாற் சகலகர்த்தாவாயிருக்கும்,நெறிவாச்சிமுதற்காணமிலாத் தச்சர் தொழில்கள்செய்யா நீதிபோலப், பொறிகள்பொய்யென்றறிந்த பின்பு கர்த்தாவென்பதுவு முழுப்பொய்யாமன்றே. (க0)

௨-வது, அத்தியாரோப அபவாதலக்ஷணம் முற்றிற்று.

---

## ௩-வது, ஆவரணநீங்குலக்ஷணம்.

மந்திரத்தாலக்கினியைத் தம்பனஞ்செய்தாற்றகிக்குமகிமையுண்டோ, அந்தமுறுசந்தேகமிருக்கையில் மெய்ஞ்ஞானம்வந்து மாவதென்ன, சிந்தையிலஞ்ஞானத்தை நீக்காது மனனமேசெய்துநன்றாய், முந்தியசந்தயந் தீர்ந்தாலஞ்ஞானம்போமதுவேமோட்சமாமே. (க)

அகண்டமனம்பிரதிபந்தத் துடன்சேர்ந்தால் முத்திதருமறிவுண்டாகா, திகழ்ந்தவெகுசெனனமெடுத்தாலும் வக்கிரகதியில் மழையிலாததுபோல,பகர்ந்தநலகருமவுபாசனை சிரவணாதிகளைப்பண்ணவேணும், உகந்தமழைதருங்கருமஞ் செய்வதுபோற் பிரதிபந்த மொழியுந்தானே. (௨)

எஞ்ஞானங் கிளிஞ்சிலென்றே வந்துதந்தஞானத்தை யேவேறென்னும், அஞ்ஞானத்தினையகற் றுமதுபோலவிசார ணைசெய் தறிந்தாலந்த, மெய்ஞ்ஞானந்தானகண்டாகாரமா ய்ச்சீவனைமுன்வேறென்றெண்ணும், பொய்ஞ்ஞானமாகியாவ ரித்திடுமஞ் ஞானத்தைப் போக்குந்தானே. (௩)

தனதுபோலகண்டசித்தை யவித்தையெனுநங்கைமுன் னே தானணைந்து, மனதுதனைப்பெறவுமது கற்பிக்குஞ்சம் சாரம் வளர்ந்துதன்றே, தினமணிபோலவித்தையெனுங்குல மடந்தைதனையடைந்து சேர்ந்ததன்பின், இனமுடனே யவி த்தையு மிவ்விரவியுதிக்கையி லகலுமிருள்போற்போமே. ()

இகழ்ந்தபலவுபாதிதுக்கம்ஞ்ஞான மசத்தியமென்றிந்த நான்கும், நிகழ்ந்தவொருமெய்ப்பொருளைத்தெரியவொட்டா தாவரித்துநிற்கையாலே, அகண்டசுகஞானசத்தி யாகாரம ேனுவிர்த்தி யானதெல்லாம், உகந்தறியு மறிவொன்று லாவ ரணநான்கினையுமொடுக்குந்தானே. (௫)

கனியுருவமதன்சுவையு மதன்மணமுமறியுமனங்கண்ணி னுவில், இனிதுடனுசியிற்பரந்தாலறிவொன்றுயாவரணமெல் லாந்தீரும், தனிமனதேயகண்டசுகஞானசத்தாய்ப்பரிணமித் தாற்றுன்வேறென்னும், முனிதனக்கவ்வறிவொன்றுய்விபரீத வாபரணமுழுதும்போமே. (௬)

இருணீங்கும்பேரொளியில் மனோவிர்த்தி விழிவழிசெ ன்றேகடஞ்சேர்ந், தருளியதாய்ப்பரிணமித்துப் பிர்திபந்தமி லா திருந்தேயவ்விர்த்தி, மருவியாவரித்தகடத்தஞ்ஞானந்த ள்ளியையம்வாராமலந்தப்,பொருளறிவினுடன்சாட்சியறிவொ ன்றுயிருக்கநன்றாய்ப்பொருந்துந்தானே. (எ)

மருணீங்கும்வேதாந்தப்பேரொளியில் மனோவிர்த்திம னனஞ்செய்தே, பெருகியகண்டானந்தமாய்ப்பரிணமித்ததன் பின்பிரதிபந்தத்திர்ந், தருள்விர்த்திநான்பிரமமலவென் றுவ ரித்திருக்கு மஞ்ஞானத்தின், இருளகற்றியதுநானெனன்றோரா றிவாயறியவொன்றுயிருக்குந்தானே. (அ)

அன்னமயமுடல்கருமேந்திரியமும்பிராணனும்பிராண கோசம், நன்னயஞானேந்திரியமனமுமனோமயமாம்விஞ்ஞா னகோசம், உன்னுமிந்திரியமதியுமானந்தமயமவித்தையுறை போறற்கோசம், என்னுமாவரித்தகருத்தள்ளியதிற் சின்மூர்த் தியினைக்காண்பீரே. (௯)

மனமுதனுன்கஞ்ஞானஞானவிந்திரியங்காமம்வளர்பிரா ணத், தினங்கருமங்கன்மேந்திரியமைம்பூதம்புரியீதெட்டிதற் குள், கனவிர்த்திசாந்திபத்திவித்தையெனுமடந்தயர்தங்கரு த்துள்வைத்தால், தனிஞானத்தற்பரசிற்சத்தியுறுமாத்மது ரைதனைக்காண்பீரே. (கO)

௩-வது, ஆவரணநீங்குலக்ஷணம் முற்றிற்று.

---

## ச - வது, இகபரபலலக்ஷணம்.

பிரமமுண்டென்பதுவேபரோட்சமபரோட்சநான்பிரம மென்னும், திரமிதனுல்முத்தியுண்டாஞ்சீவனுனெனுமயக்கந் தீர்ந்தபோதே, நாசிவமயக்கமுநான்சித்தெனலுமபரோட்ச நாட்டங்காண்மெய், வரவபரோட்சத்தறிவாற்பரோட்சமயல துதருவின்மயல்போற்போமே. (க)

தருவினிலேசோரனெனுமயல்தீரு நன்றாய்த்தருவைக்க ண்டால், ஒருசித்தினுன்சீவனெனுமயல்போநான்சித்தென்று ண்மைகண்டால், கருமங்கள் பலசெய்துந் தீராதுசிதாபாசன் காணச்சீவன், வருதருவாபாசம்போலஞ்ஞானம்போனலம்ம யக்கம்போமே. (உ)

முன்புவரு நானென்னும்பிரமையும்பின்செகத்தென்னு மோகந்தானும், அன்புடன்செய்மனனத்தால் நசித்ததன்பின் பிரமமிச்சமாயிருக்கும், பொன்புடம்போட்டா லனலில் மல ந்தள்ளிமாற்றுயரும் புதுமைபோலத், துன்பமெலாந்தீர்ந்து சித்த மெய்யறிவாலானந்த சொரூபமாமே. (௩)

பிரமமிலை யெனுமசம்பாவனை சிரவணத்தாற்போம்படர் சந்தேகம், வரமனனத்தா லகலுந்தியானத்தால் விபரீதமயக் கந்திரும், விரவுபிரதிபந்த மிலாவப ரோட்சஞானம்வந்தால் விதேகமுத்தித், திரம்வரவே வயிராக்கியசாந்தியாற்சீவன்மு த்தித் தெளிவுண்டாமே. (ச)

திரியக்காருயிராவர் பாவத்தாற் புண்ணியத்தாற்றேவ ராவர், பிரிவற்றவ்விரண்டாலு நாராவர்தம்மறிவாற்பிரம மாவர், சரிவைத்தவவ்விரண்டும் பொன்னிரும்பு நிகளம்போற் றடையேயன்றோ, எரியிட்டவுலர்ந்தகம்பும்பசுங்கம்பும்போ லறிவாலிரண்டும்போமே. (ரு)

நரகமுற்றபாவியருஞ் சொர்க்கமுற்றகன்மியருநான்மு கத்தோன், சிரமிருக்கு முலகுசென்றவயமேதஞ் செய்தோ ருஞ்செனிப்பாரிங்கே, பிரமநானெனுஞ்சகுண வுபாசகரும் விதியுடன்பின் பெறுவார்முத்தி, பரமிதென்றுநிர்க்குணமே ன் றறிந்தவர்க்கு முத்தியிங்கே பலிப்பதாமே. (சு)

இங்கறிஞரறிவிலர்க்கு முற்பிறவிக்கருமத்துக்கேற்றதா யத், தங்கரும மறுபிறவியிலுமீசன் செய்விப்பான் றனெல் லார்க்கும், பங்கமிலாச்சஞ்சிதாகாமியப் பிராரத்தபலனஞ்ஞா னிக், கங்களிப்பன் ஞானிக்குப் பிராரத்தமிலாதபலனளியா னன்றே. (எ)

சஞ்சிதத்திற்பலனுதவு கருமத்தையெடுத்தீசன்றன் கெ ற்பத்தில், துஞ்சியபிண்டத்தில் நியமித்ததினூற் பிராரத்தத் தோற்றமாமே, மிஞ்சியதுபலாநுபவத்தால்நசிக்கும் வேணு வைப்போல்வேறென்றலஃ, தஞ்சியொழியாது சுற்றுஞ் சக் கரம்போ லாரம்பித்தலர்ந்ததாலே. (அ)

சுகப்பொழுதிற் றுக்கந்துக்கவேளை சுகமேதுசெய்துந் துடர்வதுண்டோ, மிகத்தனியேயந்தந்தக்கன்மபலனந்தந்த வேளைசேரும், உகப்புமுறுன்சுகவெளை கிலேசமுறுன் றுக்கத் திலுணர்ந்தஞானி, அகத்தினிலஞ்ஞானியுமப்படி யிரானெ வர்க்கும்பலனகலாதன்றே. (கூ)

வம்சமெல்லாங்கரையேற்று ஞானத்தாலொருத்தராவா ரைஞ்ஞானம், தும்சமானல் வறுத்தவித்துப் போல்மறுபிற விதுடாரதன்றோ, சம்சயவிட்சேபலயமில்லாதவோரறிவிற்ற ருஞ்சுகத்தின், அம்சமொன்றுயதுசிவன்பிரமத்தொன்றுவது நன்றறியலாமே. (க0)

ச - வது இகபரபலலக்ஷணம் முற்றிற்று.

---

## ரு - வது, பவநிரோதலக்ஷணம்.

போதவடிவேசீவனிந்திரியம் பிராணன்மனம்போற்பிர வஞ்சம், பேதமெனத்தோற்றமன்றோகடத்திலாகாசம்பிரதி விம்பம்போல், சாதகமாமிதுகள்முழுப்பொய்யென்றேமனன ஞ்செய்து தள்ளிநன்றாய், வேதமுடிவறிவிலநுபவித்ததன்பி ன்சின்மாத்திரமிச்சமாமே. (க)

சீவனிடத் தவித்தையினால் வரும்பிரவஞ்சவாதனைதான் திரும்பின்மெய்ப், பாவனைசேர்பிரமவாசனைத்திறத்தாலதுவுந் தன்படியேதீரும், தாவனலுமிந்தனத்தையெரித்தணையுந்தன் மைபோற்றருஞ் செகத்துண், டாவதிலையந்தவாசனையொழி ந்தாற் பின்பிரமமாகுந்தானே. (உ)

கப்பொழிந்தேயெந்தப்பாவனைசெய்தால்மருபிறவிகலக் கும்பேதத், தப்பொழியுமவ்வுறுவாய்ப் பரிணமிப்பன் புழுவ ண்டாந்தன்மைபோல, எப்பொழுதும்பிரமமாகியசீவன்பாவ னைவேறிலாமலேநான், அப்பொருளென்றேபாவித்தாலஃதா வதிலருமையன்றுதானே. (ங)

வருங்கடத்தின்சலமசைந்தாற்பிரதிவிம்பமசைவதுபோ ல்மனம்பிராணன், இருந்தவிடஞ்சலித்ததனாற் சீவனுமேசலி த்ததுபோலிருக்குமன்றோ, தெருண்டவர்மெய்பிரிந்தபின்புபி ராணலயத்தாற் சலியாச் சீவனிங்கே, அருங்கடநீ ருடனசித் தாற் கடாகாசம்போற் பூர்ணமாகுந்தானே. (ச)

பெருங்கடல்போல்பிரமநீர் போற்சீவராசியலைபேதம் போலே, வரும்பிராணனுங்குமிழிபோலிந்திரியமனது மற்ற தெல்லாம், விரும்பியகாற்றிலாவிடத்தே யலைகுமிழியொழி வதுபோல்மெய்ஞ்ஞானிக்குத், தரும்பிராணதிலயமஞ்ஞான மொழிவதினாற்றானுண்டாமே. (ரு)

இந்தவுடலெனுங்கடத்தில்மனதுடனே பிராணனெனுமி னியநீர்தான், வந்தபிரமத்தறிவாம்பருதிக்காற்றால்முழுதும்வ ற்றும்போதே, வெந்தபிராரத்தமும்போய்ச்சித்தூரவியின்பிர திவிம்பசீவன், அந்தவிம்பத்துடனயிக்கமானுற் பின்மறுதே கமடையாதாமே. (சு)

பெருகுமிந்திரியச்சேனைக்கதிபதியாமனதுநான் பிராண னென்னும், குரிசில்சென்றவிடமெல்லாமனுசரிக்குமானந்த கோசத்தோடு,மருவுதளபதிபகைவன்வசமானல்வேந்தன்வெ றுமநடனும்போல்,கருணைமனஞானபரவசமானுற்பிராணன் வெறுங்காற்றுய்ப்போமே. (எ)

எத்தனத்தாற் பிரதிபந்தந் தீர்ந்ததற்பினஞ்ஞானமறி வெதிர்ந்தாற்றீரும், யுத்திசெயிற்சஞ்சி தாகாமியங்களஞ்ஞா னமொழிந்தாற்றீரும், அத்தியுடலுடன் பலத்தினநுபவத் தாற்பிராரத்தமகலுந்தானே, புத்தியுடன்பிராணனுமிங்கேல யிக்குமுடல்பிரிந்தபோதுதானே. (அ)

அறைந்தபுழுக்குளவியாங் குளவியும்பின்புழுவாகாதது போற்றுன்பம், மறந்தமனம்பிரமவடிவானபின்சஞ்சலியாதம் மனதப்போதே, இறந்தநாமந்நேரந்தான்பிரவஞ்சவாசனையு மித்தைதான்பின், உறைந்தசென்மந்தருமவித்தை தானுமங் கேநசித்திடுமீதுண்மைதானே. (கூ)

அ

வறுத்தவித்துமுளைக்கின்றவாசனைதா னசித்தபின்பு மா முண்டாமோ, வெறுத்ததுபோற்சூட்சசரீரம்பொய்யென்றதி ட்டான விளக்கந்தன்னில், உறுத்தியமெய்ஞ்ஞானத்தாலஞ் ஞானங்கருமத்தினுடனசித்தால், மறுத்துமொருதேகமுண் டோபிராணனுமிங்கேமுடிவில் வற்றிப்போமே. (க0)

ரு - வது, பவநிரோதலக்ஷணம் முற்றிற்று.

---

## ௬ - வது, சீவன்முத்தலக்ஷணம்.

---

ஞானியு மஞ்ஞானியைப்போற் பலத்தைவிட்டே கரு மங்களுஞ்செய்வான், தானிசைந்தேயாச்சிரமவர்ண சாதி கட்கேற்ற தகைமையாலே, ஏனினியகருமமென்றால்மனைமக் கள்முதல்வரையேனிணங்குவான்றன்,மேனியைப்போலதை விடப்போகாதென்றாற் கருமமேமேன்மையாமே. (க)

வந்தடையாப்பொருள்தனிலே யாசையின்றிப்பிராரத்த மாத்திரத்தால், தந்தபலன்புசித்திடு மெய்ஞ்ஞானிசெய்யுங் கருமபலன்றனைச்சேராது, பந்தமுறுகருமங்களினிற்பற்றி லாததினாற்பகைத்தபேர்க்குச், சொந்தமாம்பாவபலன்பணிந் தவர்க்குச் சுகிர்தபலன் றுடருந்தானே. (உ)

உலகத்தோர்க்காகிலுமெய்ஞ்ஞானிதனக்காகிலுமேயுகந்துசெய்வான், பலமற்றகருமத்தைச் செய்திருந்தாற்குறையுண்டோ பார்க்குங்கால், அலைவுற்றுமுன்புசெயத் தக்கதுஞ்செய்தடையத்தக்கதுமடைந்தோர், நிலையிற்றான்விடயங்கள் துடர்ந்தாலு முள்ளத்திற்றள்ளிநிற்பன்றானே. (௩)

பொய்யறிவிலிதுசெயலா மிதுசெயலன்றெனுனடைத்தைபுகல்வார்நன்றாய், மெய்யறிவுவந்தபின்பு விதியென்றுநிடேதமென்றும்விசாரமுண்டோ,வையகத்திற்றன்மார்க்கநன்மார்க்கமனம்போனபொக்கானாலும்,ஐயமிலாஞானிவினைப்படிநடப்பன் வினையெவர்க்குமகலாதன்றே. (௪)

ஞானவானெனுமந்திரவாதியைத்தான்மோகமெனுநஞ்சினால்மெய், ஊனமுறுமடந்தையெனுங்கொடும்புயங்கங் கடித்தாலுமொன்றுமில்லை, மானமுறும்வல்லமையால்விளையாடுவானைத்தன்மடியிலேற்றி, யீனமுறப்பயமதனுவிலையென்றேயுண்மைதெரிந் திருக்கையாலே. (௫)

போன சென்மத்தினிற்றுடர்ந்துவிட்டகுறைக்கருமபலன்புசிக்கப்பின்னுண், டானசென்மத்தினில் வாழ்வான்பிரதிபந்தந்தீர்ந்தால்மெய்யறிஞனுவான், ஞானம்வரில்முத்தியுண்டாஞ்செயலிலைப்பின்றுறந்திடுவன்ஞானியென்று, தானறையுமறைவிதிக்குப் பலன்வினவினடைந்ததுக்கந் தளர்வென்பாரே. (௬)

தேகதர்மஞ்சராமரணம் பிராணதர்மம் பசிதாகஞ்சித்ததர்மம், சோகமுடன்சாஞ்சலியஞ்சகசமாயிருக்குமதைத்துடைக்கப்போமோ, மோகமற்ற சுபுத்திரன்போலதில்ஞானமுண்டானல்மோட்சமுண்டாம், ஆகையினல் ஞானிக்குமனஞ்சலித்தா லானிவாரா தறிவினலே. (எ)

ஆதியினிலிரும்புபொன்னுந்திரும்பியந்தச் செம்பொனிரும்பாகா தன்றோ,ஓதிவுலகினைப்பொய்யென்றறிந்துமதில்ஞானிமனமுறைவதுண்டோ, நீதியுடன்பொன்னுடன்பொன்சேருதல்போலறிவறிவினேருமிந்தச், சாதியெவரிலுமொன்றேமற்றவர்களசேதனவிசாதியாமே. (அ)

அருக்கனத்தமித்ததன்பின்வருமிருள்போல்ஞானிமனதத்தமித்தே,இருக்கையினிற்சுழுத்திவருமஞ்ஞானத்தாலுறக்கமேயல்லாமல், பருக்குமறுபிறவியில்லையது ஞானத்தீயில்வறுபட்டதாலே, உருக்கெரியும் வறுத்தவித்துமுளைக்குமோவுண்ணவாய்க்குருசியாமே. (கூ)

சிறியவிளக்கிலுமிருள்போலனுதிமுதலஞ்ஞானம்தீருமேமெய், அறிவுதித்தாற்பின்னதனுவிப்பிரவஞ்சமெல்லாம்பொய்யாய்விளங்கும், பொறியறிந்தகடத்தினிலுள்ளிருக்குமிருள்போலுமுழுப்பொய்யாநின்ற, குறிகொள்செகத்தறியாமைதில்ஞானிக்கானியுண்டோகுறையுண்டாமோ. (க0)

கூ - வது, சீவன்முத்தலக்ஷணம் முற்றிற்று.

---

## எ - வது, பரமதநிவிர்த்திலக்ஷணம்.

செகமுழுதுமறிந்துமறியாதிருந்து மென்னமுத்திசிறக்குமோவத், தகமகிழும்பிரமவறிவான்மாயையஞ்ஞானமகன்று லுண்டாம், மிகவுமிந்தவறிவுவந்தாலந்தவஞ்ஞானம்போமவ்வேளை நாளும், சகலமித்தையாகையினு லவ்வறிவாற்பலனே துதான்சொல்வீரே. (க)

அறிவினுக்குவெளியங்கசாதனமா மியமமுதலைந்துமின்றி, முறைகொளந்த ரங்கசாதகமாந் தாரணைமுதலா மூன்றுமுண்டோ, உறைவதனுலிம்மூன்றுஞானியிடமட்டாங்கயோகமென்றும், நிறையுமன்றேபின்னுமடையோகமென்றவறிவிலெல்லா நிறைந்ததாமே. (உ)

வேகமுடனுகாசகமன பரகாயப்பிர வேசஞ்செய்தும், தேகநெடுநாட்சுமந்தும்பிரளயத்திலிருப்பதுசந்தேகமன்றே, ஏகமுடன்ஞானசுகவடிவுநானென்றறிந்தாலிதுவேராச, யோகமிதால் முத்தியுண்டா மடையோக மோக்ஷமவையோகமாமே. (ங)

மூலிகையாற்காயசித்தி யுபாசனையாற்றேவசித்தி முன்செபித்த, மாலிகையால் மந்திரசித்தியிதுபலித்துமூழியினில் மரணஞ்சித்தி, நீலிகையிற் புருடனைப்போற்பிரமைவிடாதுருவழித்து நெடும்பிராரத்தம், கூலிகையிற் றருமாயைமேற்பிறப்புக்கிவரை யொன்ருய்க் கொள்ளுந்தானே. (ச)

நாசியின்மேற் றரும்வெளியு மூடியகண்மணியொளியு நாம் பொய்யென்று, பேசியதிற்சிவப்புவெளுப்பா நினைவுஞ் சோதியென்று பிரமித்தபேர்க்கு, விசியவெய்யிலு நிலவுங் குறைசெய்தநேதுசுகம் விளக்குஞான, ராசியெனுமான்மா வைவேறுயென்னுவது கர்மாசிதானே. (௫)

மண்ணில்லாதேகடத்தின் பிறப்பிறப்புநாசமில்லை வரு வேதாந்தக், கண்ணிலேலே பார்த்தாற்சங்கசேதனஞ்செய்யுங் கருமமில்லை, பண்ணுநேராயசேதனமூலப் பிரகிருதிபண்ணப் பரிணமிக்க, எண்ணுமோபிரமமொன்றே பிரபஞ்சம்போல் விவர்த்தமா யிருந்ததன்றே. (௬)

மரத்தடிமண்குறையாதேசிறியவித்தாலாலமரம்வளர் வது ண்டோ, விரைத்தபஞ்சுபெருத்திருக்க நூல்சிறுக்கு மீதெ ண்ணியாவதென்ன, உரைத்திடுநீர்குமிழியைப்போற் பிறந் தவிடத்தேபிரபஞ்சமொடுங்குமென்றே, பாத்தறிவுவேதாந் தம்படியாம லுத்தியிலெப்படிச் சொல்வோமே. (௭)

கத்தாதேமலடிமகன்போற்பிறக்கு முன்னசத்தாங்காரிய ந்தான், சத்தானகாரணத்தோ டாரம்பசம்பந்தந் தருவது ண்டோ, வித்தாரக்காரியந்தானசத்தாம்பின்னசித்தசத்தாய் விடுமோசத்துச், சித்தானததிற்செகமே கிளிஞ்சில் வெள்ளி போலுதயஞ் செய்வதாமே. (௮)

சிவான்மாவிபுவாயும் பலராலும் பிறர்மனதிற்சேர்ந்து பேத, மேவாதசிவனுமற் றவர்சுகத்தையநுபவிக்கவேணுமன்றோ, ஏவாதேமனத்தை வெறுந்தர்க்கத்தில் விசாரணையிலிறக்கினால்நீ, ஆவாயென்றேபுகலும் வேதாந்தப் பொருள் சிரவணமாகுந்தானே. (கூ)

ஏறுகின்ற சீவனணுவா யிருந்தாற்கையினிற்காலினில் வெவ்வேறே, ஊறுகின்றசுகதுக்க மேககாலத்தறிவதுண்டோ நன்றாய், வேறுகொண்டசுகாதிகள் சீவாத்ம குண ஞானத்தால் விளங்குமோநாம், கூறுகின்ற சீவனே பிரமமென்றாற் சுகங்களந்த குணங்களாமே. (க0)

எ-வது, பரமதநிவிர்த்தி லக்ஷணம் முற்றிற்று.

---

## அ வது, அத்துவிதஸ்தாபனலக்ஷணம்.

சுலபமாம்வேள்விசெய்தா லதிட்டமுண்டாய்ச் சிலநாள் போய்ச் சொர்க்கலோகப், பலனென்று சுருதிசொல்லக்கண் காணப்பொருள்குறித்தப்படி செய்வாரால், அலருமந்தவேதமறி வுருவானசிவிசர்க்கயிக்கியஞ்சொல்ல, இலகுமிந்தக்கண் கண்ட பலனைவிட்ட கருமவிதிக் கென்சொல்வோமே. (க)

கபிலாதிமுனிகடருஞ் சூத்திரத்திற்றுவிதநிராகரித்தார ந்த, அபிமானம் பிறர்க்கில்லைவியாசர்மதமத்துவிதமாகையாற் பொய், செபியாதவியாசர்சூத்திரங்களுக்கத்துவித வுரைசிலர் சொன்னார்மெய், லபியாதுசூத்திரஞ்சொற் பிரதிவாதியத்து விதியார்சொல்வீரே. (உ)

இரசிதத்தின் றோற்றஞ் சுத்தியோடபின்ன மென்பது போலிந்தச்சீவன், விரவுகின்றபிரமத்தோடபின்னமென்றே யநுபவித்தோம்வெவ்வேறென்றால், பிரமவறிவாற் சீவாஞ் ஞானம்போமென் றெவரும்பேசுவாரத், தாமவர்க்கேகூடா தென்றறிந்தால்மற்றென்றின்மயல்தான் தீராதே. (ஙு)

கடமடாகாசம்போற் பலவுபாதிகள்சேர்ந்தேகருமத்தா ற்பின், அடையுஞ்சுகதுக்கபலன்வெவ்வேறு யநுபவிக்குமா ன்மாவொன்றே, மடநிறைந்தசீவகணம்பின்னமென்றாற்சுரு தியப்பிரமாணமாம்வே, றுடையபிரமத்தறிவாற் சீவனிடத்த ஞ்ஞானமொழியாதன்றே. (சு)

உலகுசத்தானலழியாதசத்தானற்றோற்று திவ்வொன் றுதானே, விலகுசதசத்தாகுமாகையினற்சதசத்தின்விருப்ப மாகும், மலருமவ்வித்தங்குரிக்கும்வாசனைதானசித்தபின்புமா முண்டாகா, நலமதுபோலுல குதியா தான்மாவில்வாசனைதா னசித்தபோதே. (ரு)

ஞானமதாலனுதிகாரணவுடலாமஞ்ஞானநசித்தபோதே, ஈனமில்லாவிதேகமுத்தியுண்டாமப்போதுதா னில்லையென்று ல், ஊனமரணத்தில்முன்னினைவுகுருவுபதேசமுதவுமோபோ ய், ஆனகாரணதேகமொழிவதுவேவிதேகமுத்தியாகுந்தானே.

மனதெனுஞ்சூட்சும வுடலஞ்ஞானமெனுங்காரணமெய் மறுசென்மத்தில், தனையடையுந்தூலவுடற்கேதுவாகியகருமந் தானிம்மூன்றும், தினசுகஞ்சேரோரறிவாலெக்காலத்தினுமொ ழிந்தாற்சீவன்முத்தி, கனமுறுவிதேகமுத்தியிரண்டுமிம்மை யிருக்கையிலே காணலாமே. (எ)

பலபோக விராகமொழி விலாமலானந்தாநுபவம்வாரா து, சிலஞானவான்களிடம் வெளிதோற்றுதிருந்தாலச்செய்தி கேளிர், நிலைசேருமரத்தினுல்வித்தினைப்போற்புகையினுல்நெ ருப்பைப்போல்மெய், அலர்ஞானத்தாலொழிவுவிராகமிரண்ட னுமானத்தறியலாமே. (அ)

அனுபவிக்கப்படாதசுகமில்லையநுபவித்த சுகமலருமேச ந், தெனுஞ்சமசத்தநுபவிக்கப்படாதகண்டமதே யெங்குமி ருக்கையாலே, கனசுகமேசித்தாகு மதுசத்தாமகண்டமதுகா ண்யாதொன்று, தினசுகமென்றதுசித்தன்றதுசத்துமன்றகண் டச்சிறப்புமன்றே. (கூ)

சத்தினஞ்சமிலாதசெடத்திருக்க வில்லைமுயற்கொம்புத ன்னைப்போலே, சித்தினஞ்சமில்லாமற்றன்னறிவென் றறிவு வருஞ் செயலுமில்லை, யுத்தியினிலானந்தாங்கிசமில்லாததின் சுகம்வந்துதிப்பதில்லைப், புத்திதனிற்செடமெனல்போயிது சச்சிதானந்தபூர்ணமாமே. (க0)

அ-வது, அத்துவிதஸ்தாபனலக்ஷணம்முற்றிற்று.

---

## கூ - வது, சமாதிலக்ஷணம்.

அறியப்பட்டதெல்லாந்தள்ளியறிவுருவாயதிட்டானமது நானென்று, வெறியற்றவறிவுவந்தாலது திரிசியானுவித்தவிக ற்பமென்பார், நெறியிற்சத்துச்சித்தகண்டானந்தவுருநானெ ன்றோர் நினைவுசெய்து, குறியிற்கண்டாற்சத்தானுவித்தமெ னுஞ்சமாதியென்பர்குறிப்பறிந்தே. (க)

சுகம்பெறுசின்மயனானென்றென்னுட் பிரபஞ்சம்பொய் யாய்த்தோன்றுதென்றும், அகண்டசுகஞானரச மநுபவித்த ல்சவ்விகற்பமாகுமன்றோ, இசழ்ந்தவிடயமுமறிவேநானெ னலுமன்துடனீதெல்லாந்தள்ளி, உகந்துதானெனவிளங்குமறிவுருவே நிருவிகற்பயோகமாமே. (உ)

ஊனென்னுமிந்திரியம்பிராணன்மனமெனுநினைவேயொடுங்கியார்க்கும், ஏனென்னுமொழிமறந்தா வரணமனேவிட்சேப மிரண்டுமெற்று, நானென்னும்வெகுகால வாசனையாமஞ்ஞானநசித்தானந்தம், தானென்னுமறிவுவந்தாலவ்வறிவேபிரமமென்றுசாற்றலாமே. (ரு)

விரக்திசிரவண்விடயவெறுப்பிதுசாக்கிர மூன்றும்வெறும்பிரபஞ்சப், பரப்பெனிடந்தோற்றுமென்றே சொப்பனந்தானுகவெளிப்படுமுன்னென்ருய்த், திரட்டுநிருவிகற்பமேசுழுத்திபிறரெழுப்புமதேதிடசுழுத்தி, புரத்துரியமெவராலுமசையாத திருஞானப்புவியேயாமே. (சா)

இடைந்தநானெனுநினைவுதள்ளியானந்தநானென்றுணர்ந்தால், அடைந்தசத்தின் சித்தினஞ்சத்துட னென்ருய்த்தோன்றுமூல கானந்தம்போல், உடைந்த மனத்தினிற் பிரபஞ்சநினைவொழியுமப்போதேயொழியுஞ்சித்தம், கடைந்தவிந்திரியம்பத்துமப்போதேலயித்திடுமெய்கலந்ததாலே. (ரு)

திருஞானவுருநானென் றநுபவித்தாலறிவினஞ்சந்தெரியுநன்ருய், வெருவிமனம் விட்சேபத் துடனிருந்தா லறிவினஞ்சம்வெளிதோற்ருது, உருவுமனவிட்சேபத்துடனிருந்தாலப்போதே யொழியுந்துக்கம், அருளுமானந்தாநுபவமுமந்தநேர்மைவெளியாகுந்தானே. (சூ)

ஐயமுண்டோ நானென்னுமறிவிலனேவென்றவவ்வறி வேயெங்கும், மெய்யகண்டபூரணமாய் விளங்கையிலுமைய முண்டோ விரும்பிப்பார்க்கில், கையில்வெறுங்கட்வெளிபோ னுனெனுமவ்வறிவுதான்கண்டமாகும், பொய்யகலும் பெரு வெளிபோ லகண்டநான் பிரமமெனும்போதந்தானே. (எ)

வருத்தியநானெனுமறிவு சித்தவிர்த்தியில் விளங்கும் வளரகண்ட, விர்த்தியில்நான் பிரமமென்றே யவ்வறிவேய கண்டமாய்விளங்குமன்றோ, திருத்தியவுபாதியெந்த மட்டந் தமட்டதிலேசேர்ந்ததெல்லாம், பொருத்தியவவ்விர்த்திதனி யேலயித்தாலறிவுருவே பூர்ணமாமே. (அ)

அறிவிலுந்தன்மெய்யிலும் பொய்விடயசுகத்திலும் பிரி யமுண்டானதைப்போல், நெறிவிடயமுறாப் பிரமசுகத்திலு மே வெகுபிரியநேருமன்றோ, பொறிவிடயமுறாமலுடலபி மானமுறாமல்வருபூர்ணபோத, செறிசுகமேசமாதியினிலகண் டமா மாத்மாவாய்ச்சிறக்குந்தானே. (கூ)

காற்றினால்வேணுவிற்றீப்பிறந் ததையுமெரித்தணையுங் கதைபோலாசான், சாற்றியஞானமுஞ்செனனந்தருமவித்தை தனையெரித்துந்தானணைந்தால், ஏற்றியகண்ணாடியில்லாப்பிர திவிம்பம்போலவிருப்பிடமில்லாமல், தோற்றியசிற்பிரதிவிம் பமெனுஞ்சீவனகண்டசித்தாய்த்துலங்குந்தானே. (கய)

கூ - வது, சமாதிலக்ஷணம் முற்றிற்று.

## கo-வது, சாக்ஷிசொரூபலக்ஷணம்.

ஐவகைஞானேந்திரியத்தால்மனதுவிடயத்தையறியுமந் தப், பொய்விடயந்தள்ளிநின்றாலவ்வறிவே பிரமமன்றோ புகுந்துபார்க்கில், செய்வினையிலாமனதிற்சாக்ஷியாகையிலஃ தேசிவனாகும், மெய்வருமவ்வறிவேநானெனுஞானமபரோட் சவிளக்கமாமே. (க)

இந்திரியவிடயமெல்லாம்லயித்திருந்துங்கனவினிற்றன் னிடந்தான்கற்பித், துந்தியதிலுடன்பயிலு மனதொன்றே சாக்கிரம்போலொன்றுங்காணும், சிந்தியழிசுழுத்தியினில் மனம்லயித்துமஞ்ஞானஞ் சிறக்குஞானம், தந்திடலஞ்ஞா னம்போ மெனவறியுமறிவுருவே சாக்ஷியாமே. (உ)

கனவிலிருந்ததைநனவினனவிலிருந்ததைக்கனவிற்கண் டதில்லை, நனவிலுமே கனவிலுமேநானென்னுமறிவுதன்னை நன்றாய்க்கண்டோம், மனதுலயித் திடுஞ்சுழுத்தி தனிற்சுக த்தினனுபவம் பின்மகிழ்ந்தறிந்தோன், தனதன்றியெப்பொ ழுது மிருக்கையினா லவ்வறிவே சாக்ஷியாமே. (ங)

ககனமிசைக்கருமைபோற்பிராந்தியாற் செகஞ்சித்திற் கற்பிக்கப்பட், டகமுறுமுக்காலத்து மிதிலொன்றுமிராது மித்தையாதையாலே, நிகழ்வதுமுன்போனதுமேல் வருவ துவு மில்லாத நேரந்தானும், திகழ்வதெல்லா நானறிவேனெ னுமறிவே பிரமமதேசிவனாமே. (ச)

அறிவேநானெனு மறிவேசகலத்தையறியு மதையறிய வொண்ணு, தெறியுமன முதலானதாலும் விதிமுகத்தா லே தேதுசெய்தும், நெறியிலறியப்படுவதெல்லாந்தள்ளிமிச்சமா ய்நின்றசோதி, செறியாதாலறிவுருவாம் பிரமமதேநானெ ன்னிற் சிவனுமே. (ரு)

மனதப்பாற்போயிருந்துந் திரும்பியுமிங்கடைந்து தெ ன்றும் வருமஞ்ஞானம், புனையறிவுசுகதுக்கமெல்லா முண்டா யிருந்துபோயிற்றுதென்றும், தினமுமிதெல்லாமறியுமவ்வறி வேசிவனுந்தேகந்தோறும், அனவரதமவ்வறிவே யெங்கும் பூரணப்பிரமமாகுந்தானே. (சா)

வெளியுடனே சேராத பொருளொன்றுமில்லை யந்தமே ன்மைபோலே, ஒளிர்தருமெய்யறிவுடனே சம்பந்தமிலாத பொருளொன்றுமில்லை, தெளிவுதருமெய்யறிவு பெருவெளி போலகண்டமெங்குஞ் சிறந்ததென்றே, எளியவர்க்குநூல் தவிர வறிவி லநுபவிக்கப் பட்டிருந்ததாமே. (எ)

பார்க்கையிலுங் கேட்கையிலுமுயிர்க்கையிலுந் தொட யிலுநாப்பருகும்போதும், ஆர்க்குமதி னதினறிவிலாமலே யது நடத்தையாவதில்லை, காக்குமதினறிவெலா மொன் றகண்டபிரத்தியட்சங் ககனம்போலே, சேர்க்குமுபாதியிற் பின்னம்போ லிருப்பதறிய நூற்றிரளேநீங்கே. (அ)

சிறிதறியப் பட்டதாய்ச் சிறிதறியப் படாததாய்ச்செக த்திலென்னுல், அறியப்பட்ட தெல்லாமென்றிருவகையினனு பவத்தினறிவதாலே, முறிவிலாமுன்னறிவிப்போதுமினிமே லுமென்றுமுக்காலத்து, நெறியறியு மறிவுருநானே சகலசா ட்சியெனநிகழ்த்தலாமே. (க)

செனித்தவெகுசென்மத்தினற்றவத்தாற்பரமேசன்றிரு வுளத்தால், அனித்தியத்தையகற்றியசற்குருவருளும் வேதா ந்தத்தறிவினுலும், இனிக்கருமஞ்செயத்தக்கதிலையறியத்தக்க தொன்றுமில்லைநானே, தனித்தசச்சி தானந்தபூரணமென் றநுபவித்த தன்மையாலே. (க0)

க0 - வது, சாட்சிசொரூபலக்ஷணம் முற்றிற்று.

---

## கக - வது, ஆனந்தசொரூபலக்ஷணம்.

திரள்சுகமாயுறங்கினேனெனுநினைவாற்சுழுத்திசுகந்தெ ரியுநன்றாய், நிருவாசனுனந்தம்பலநினைவிலொன்றுமிலாநே ரந்தோற்றும், பொருவிடயத்தால்விடய சுகமனதிற்சாத் திரசுகம்பொருளறிந்தால், பிரமசுகஞ் சமாதியினிலொருசுக மேயைந்தாகப்பிரிந்ததாமே. (க)

யோகபிலத்தால்விடயசுகத்தினும் பூரணானந்தமுணர்ந்தஞானிக், கேகமாயிருக்குமன்றேபாஷையிரண்டினுக்கும் பொருளிங்கொன்றேபோல், காகவிழிபோலுலக சுகம்பிரம சுகமிரண்டுகயனு மொன்ருய், வேகமுடனங்குமிங்குமகந்தையிலாவநுபவமாய்விளங்குந்தானே. (உ)

அனுகூலமேபிரியம்பிரதிகூலமப்பிரியமா முபேட்சைக், கினமாமிவ்விரண்டுமல்லாதிவ்வகையாற் சடமெல்லாமிருக்குமன்றோ,தினவறிவாமான்மாவே வெகுபிரிய மாவுதருதிரணம் போலத், தனதிதென்று கூட்டிவிக்கத் தள்ளிவிக்க வுபேட்சிக்கத் தானுணுதே. (௩)

தனத்திலுமே மகன்பிரியமதனிலுந்தன்னுடலதிலுந்தன்பிராணன், அனைத்துமதிலுஞ்சகலமநுபவிக்குமாத்மாவாமதிலுஞ் சாட்சி, நினைத்தவதிலும்பிரியம் வேறொன்றில்லாததினானித்தியானந்தம், எனச்சிறக்குஞ் சாட்கியேதினமும் வெகுபிரியமாயிருக்குந்தானே. (௪)

தகிப்பதினாலக்கினியிற் சத்தியுண்டே யதின்பின்னந்தானுமன்று, பகுத்தபிரதிபந்தத்தினைவிருந்துந் தகியாதபான்மைபோல, வகுத்தபின்னந்தானுமன் றொன்றுனதினாலது போற்பொய்மாயைமெய்யில், செகத்தையுண்டுபண்ணுமின்னபடி யிருக்குஞ்சத்தி யென்றுதெரியொணுதே. (௫)

வித்துள்மரம்போலவே மெய்யிதனிற்செகமுதலவ்வியத்தமாய்ப்பின், மொய்த்தமண்ணில்விகாரகடத்தோற்றம்போற் பிரபஞ்சவுருமுழுப்பொய்யன்றோ, தைத்தகட மண்ணுக்கு வேறனதில்லை யதுபோற் சத்தில்வேறய், ஒத்தசெகமில்லவேறயிடுமையக்க மதிட்டானத்தொழிவாற்போமே. (சு)

திடமசங்கசத்துநானென்றுசுகம்வரிற்பொய்யாஞ்செகமப்போதே, விடயாநுபவிநானென்பதுவும் பொய்யாஞ்சுகந்தான்விடாதெப்போதும்,படர்சாம்பிராச்சியமுதலாஞ்சுகத்தால்மனநசிக்கும்பயமுண்டாகும், அடர்தீமைதரினுநன்மைதராவிடினுந்தாபமில்லையறிஞனுக்கே. (எ)

சகலமறிந்தாசையிலாமெய்ஞ்ஞானியெத்தொழில்கள்தான்செய்தாலும், மிகசாம்பிராச்சியமுதற் பரமபதத்துள்ளசுகமெல்லாஞ்சேர்வன், அகல்கருமமொன்றுண்டோ பிறவியுண்டோவிரண்டுண்டோவவித்தையுண்டோ, சுகமயமோமெய்யறிவோசற்குருவோவவோமகிமைசொல்லொணுதே. (அ)

பெரும்பிரமத்தங்கிசமூன் றழியாமற்றேற்றும்பிரபஞ்சம்போல, அருங்ககனமுதலுலகில்நாமவுருவிரண்டினங்சமழிந்துதோற்றும், இருந்துவிளங்கியபிரியமாமிதென்றுசற்சிற்சுகமெனுமூன்றங்சம், ஒருங்கிமெய்யாய்க்கடத்தில்மண்போல் நிறைந்திருக்குநாமமுமவ்வுருவும்பொய்யே. (கூ)

பராமுகத்தாமதவிர்த்திமூடமதிற் சத்தினங்சம்பரிவா ய்த்தோன்றும், இராகமிராசதவிர்த்தியதிற்சத்துச்சித்தினங்ச மிரண்டுந்தோற்றும், விராகசத்துவவிர்த்திசாந்திசற்சிற்சுகா ங்சமதில்வெளியாய்த்தோற்றும்,தாரதொன்றில்மற்றொரங்சம் விளக்கொளியிற்கூடுதொரத்தன்மைபோலே. (கO)

கக - வது, ஆனந்தசொரூபலக்ஷண முற்றிற்று.

---

## கஉ - வது, விவேகசொரூபலக்ஷணம்.

ஆற்றியவோரறிவுசுகசுயம்பிரபையிரவுபகலச்சுகந்தான், தோற்றியுந்தோற்றுதிருக்கும்வெகுசனங்களோ துகையாற் சுதன்குரற்போல், தோற்றியசிற்சுகமயமாமாத்மாவேபிரம மாய்த்தோன்றுநன்றாய்ச், சாற்றியதேகாதியபிமானமிலாவ நுபவத்திற்சடந்தோற்றுதே. (க)

தெருள்மாயையவித்தையிதாற்பேரறிவுஞ்சிற்றறிவுஞ் சீவீசர்க்கே, வருமதனைத்தள்ளியேநானகண்டசிதானந்தவடி வென்றெண்ணும், ஒருநினைவிற்பிரோகத்தால் மறுநினைவும் வாசனையுமொழியுமப்பால், அருளறிவேகாற்றில்லாவிளக்குப் போனிருவிகற்பத்தசையாதன்றே. (உ)

மனம்விரியுமுன்சாக்ஷிபோற்சிருட்டிமுன்னசையாவகை யாஞ்சத்து, கனசத்திலம்மாயைகற்பித்தகடமண்ணிற்கடம் போற்றோன்றும், புனைவெளிசத்தென்றதனிற்சத்தினங்கு தோற்றுமதெப்போதும்பின்னம், நினைவிற்சத்தைவேறுகண் டால்வெளியசத்தாம்பின்னெங்குநிறைந்தசத்தே. (க)

ககனசத்தின்கூற்றுச்சத்தென்றுமெய்யாய்ச்சத்தகுணங் கலந்தசத்தாய், புகல்பேதாபேதவிலக்ஷணமாயையின்கூற்றுப் பொய்யுமாமே, திகழ்சத்தின்கூறலால்வேறுகண்டவெளிமுத லாஞ்செகம்பொய்யப்பால், பகர்சத்தோவசத்தோவதெப்போ துஞ்சத்தாகப்பகரலாமே. (ச)

அறியப்பட்டகோசமைந்தும்பால்நீர்போலறிவிற்பின் னமபின்னமாயும், நெறியறிவைமற்றென்றாலறியவொண்ணா ததனவத்தைநேர்வதாலே, குறிகொளநுபவமறிவிலிலையோ சொற்கடத்தறிவுகுறிப்பதேபோல், வெறிவிளக்குப்போற் றனையுமற்றதையுமறிவாத்மாவிளக்குந்தானே. (ரு)

சுருதியினாற்சகலந்தள்ளமிச்சமொன்றுமில்லையென்று சொல்லவேண்டாம், கருதியொன்றுமில்லையெனுமறிவுமிச்ச மாயிருக்கக்கண்டோம்நன்றாய்த், தருகடத்தைத்தள்ளினால் கடவெளிபோலவ்வறிவைத்தள்ளவொண்ணா, திருள்கோசத் தபிமானித்திடுமறிவேசீவனல்லாலீசனாமே. (சா)

உலகினுக்குவெளியுருவங்கற்பமுள்ளவரைக்கீசனுண்டு பண்ணி, இலகுமதிற்சீவவுருவாய்ப்புகுந்தான்போக்கியமதென்றுசீவன், சிலதுபோக்கியகுணமாமுள்ளுருவமனதினுற்சிருட்டித்தானஃ, தலரும்பந்தமாச்சுதுகாணதுதவிர்ந்தாற்சீவன்முத்தியடைவான்றனே. (எ)

உலகினிற்போக்கியகுணத்துக்கேதுவாமனேவிர்த்தியொழிந்தாலப்பால், மலர்ஞானசமாதிகளாற்பந்தமிலைப்பின்பிறப்புவருவதில்லை, இலகுமனம்புகாதவுலகாலென்னதோற்றிக்கொண்டிருக்குமென்று, சிலர்சொன்னாலுலகழிந்தபிரளயத்தில்முத்தியுண்டோசெப்புவீரே. (அ)

பிரமாதியுயிரெல்லாமறிவொன்றேசீவனென்றும்பிரமமென்றும், விரவுமதாற்பார்வைமுதலானவறிவென்றிருக்குவேதஞ்சொல்லும், திரமதிக்குஞ்சாக்ஷியாய்நானென்றுந்தான்விளங்குஞ்சீவான்மாவே, வாமுதவுபூரணமாம்பிரமமென்றேயசுர்வேதமவழுத்துந்தானே. (கூ)

சிருட்டிக்குமுன்பினிரண்டிலாமலொன்றாயிருந்தசத்தேதினந்தேகாதி, விர்த்திக்குஞ்சாக்ஷியாகியநீயென்றேசாமவேதஞ்சொல்லும், அருப்பில்லாவபரோக்ஷப்பொருளிதென்றுஞ்செகசாக்ஷியாத்மாவென்றும், பொருத்தகிலவிளக்கமதேபிரமமென்றுமதருவணம்புகலுந்தானே. (கo)

கஉ - வது, விவேகசோரூபலக்ஷணம் முற்றிற்று.

அத்துவிதாநுபவம்முற்றுப்பெற்றது.

---

# இந்நூல் மான்மியம்.

இரவுபகலிந்நூலைப்பொருளறியாதுரைத்தாலுமிம்மை சேரும்,பரசுகமுண்டாய்ப்பிரமஞானியாய்விடுவனிந்தப்பலன் தப்பாது, திரமுடனிந்நூற்பொருளைபறிந்தொருக்காற்கேட் டாலுந்தெருண்டவர்க்கும், வாமுதவுமெய்ஞ்ஞானியாவதனு ல்முத்தியிங்கேவருவதாமே. (க)

வரலாறு.

நவமகாலக்ஷ்மீநாரசிங்கதேசிகனுல்ஞானம்பெற்றோ ன், சிவராமகுருவுதவுமிராமகவிகிரந்தத்திற்செய்தநூலை, இவ னுகவேபின்னுந்தமிழ்ப்படுத்தி நூலுரைத்தானெவர்க்குநன் ருய்த், தவமேவுமுத்திதருமத்துவிதநிட்சேபந்தருவதன்றே.

அன்புதருகுரவனதிகாரியத்தியாரோபியாவரணநீங்கல்,
என்புவிகபரபலனுமுத்தர்பிறப்பகலுதலுமினியமுத்தர் [ம்
அன்புசெயுமிலக்ஷணம்பரமபதமன்றியு மத்மிவைதாநுபவமு
முன்புசமாதியின்குணமுஞ்சாக்ஷியானந்தமுமுவிவேகமாமே.

கருணையுருக்குருவடிவாய்க்கட்புலத்தினிடைதோன்றிக் கதிபெற்றுய்ய, இருணீக்கும்வேதாந்தப்பானுவொளியாய்த் தனையேயெங்குங்காணும், பொருளிதெனத்தமிழினலத்துவி தவநுபவத்தைப்பொருந்தச்செய்யுள், ஒருநூறுமிருபதும் பன்னிரண்டதிகாரச்சுருக்கத்துரைசெய்தானே. (ச)

ஆ பாயிரமுள்படத் திருவிருத்தம் - கஉஎ.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# புத்தக விளம்பரம்.

இப்புத்தகமும் இலக்கண இலக்கிய நூற்றிரட்டுபுத்தகமும் அத்தொய்த சாத்திரத்திரட்டு முதற்புத்தகமும், இரண்டாம் புத்தகமும், மூன்றும்புத்தகமும், நான்காம்புத்தகமும், ஐந்தாம் புத்தகமும், இன்னும்பல வேதாந்த சாத்திரங்களும், கருமம் பத்தி யோகத்துக்குரிய நூல்களும் வேண்டியவர்கள் சென்ன பட்டணம் முத்தியாலுப்பேட்டை பவழக்காரவீதியில் கும-பெரி-கடையிலும், ராம-மு-கடையிலும, சிதம்பரம கீழவீதி ஸ்ரீமத் மு-சதா-சதாசிவ தீக்ஷிதசுவாமி யவாளிடத்திலும், தஞ்சாவூர் வடுகத்தெரு ம-ா-ா-ஸ்ரீ, ந-வீரபத்திரபிள்ளை யவர்களிடத்திலும், மதுரை புதுமண்டபம் புத்தக வியாபாரம் ம-ா-ா-ஸ்ரீ, சண்முகம்பிள்ளை யவர்களிடத்திலும், திருநெல்வேலி மேலரதவீதி டி-எஸ-ம-ா-ா-ஸ்ரீ சிவராமபிள்ளை யவர்களிடத்திலும், ஆழ்வார்திருநகரியை அடுத்த காந்தீஸவர மடாலயத்தில் சொக்கலிங்கசுவாமி யவர்களிடத்திலுங் கிரயத்துக்குப்பெற்றுக்கொள்ளலாம்.